
www.tamilarangam.net

# பனிமலர்

செப்ரெம்பர் - ஒக்ரோபர் 1991

இதழ் 4



| | |
|---|---|
| U.K. | 90p |
| FRANCE | 9Fr |
| GERMANY | 3DM |
| SWISS | 3SF |
| CANADA | 2C$ |
| SRI LANKA | Rs10 |
| INDIA | Rs5 |

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வாசகர் பக்கம்

மாதொருபாகன் குறிப்பிட்ட "அநகாரிக தர்மபால காலத்திலிருந்து வளர்க்கப்பட்ட சிங்கள மக்களின் கலாச்சாரம் அவர்களின் தேசிய இன அடையாளத்திற்குச் சான்றாக உள்ளது" என்ற கருத்து எனக்குக் குழப்பமாக உள்ளது. சிங்கள மக்களின் கலை கலாச்சாரம் வளர்ச்சி கண்டுள்ளது சரி. அதற்கு அ.த.வின் இனவெறிப் பௌத்த சிந்தனைகள் எப்படி ஒரு சிறந்த உதாரணமாக இருக்க முடியும்?

*முரளி,*
பிரான்ஸ்.

யூலை '91 இதழ் படித்தேன். சுவையாக இருக்கிறது. ஆயினும் முதற் பக்கத்தில் சச்சி சிறிகாந்தா என்பவரின் கடிதத்தைப் பிரசுரித்திருந்தீர்கள். வித்தியாசமாக நடக்க முற்படுகிறீர்கள். வரவேற்கவேண்டிய அம்சம். அந்தக் கடிதத்தில் விசாரிப்பு மிரட்டவா சம்பந்தம் பேசவா என்று புரியவில்லை.
பெயரை வெளியிட விரும்பாமல் முகமூடிக்குள் மறைந்து கொண்டு மற்றையோரை மனம்போனபடி தாக்கும் Journalist களின் என்று எழுதுகிறார்.
புனைபெயரில் எழுதுவது ஒன்றும் ஒளிந்து விளையாடவில்லை என்று இவருக்குப் புரியாமற் போனது ஏனோ? கல்கி, சாண்டில்யன், லஷ்மி போன்ற பிரபல எழுத்தாளர்களின் சொந்தப் பெயர்கள் எங்களில் எத்தனை பேருக்குத் தெரியும்?
கிருஷ்ணமூர்த்தி, பாஷ்யம், திரிபுரசுந்தரி என்ற பெயர்களில் எழுதியிருந்தால் சிலவேளை பிரபலமானவர்களாக மிளிர முடியாமற் கூடப் போயிருக்கலாம்.
எழுத்தின் தரத்தை முதலில் மதிக்கப் பழகினால் நல்லது. பெட்டிசம் எழுதும் கலாச்சாரம்தானே எங்களுக்குப் புரிகிறது. சிறிது வித்தியாசமாக வந்தால், "ஐயோ! அம்மா! ஆரடா இவன்?" என்றுதானே புலம்பப் பழகியிருக்கிறோம். மாறுவோமா?
அதே இதழில் வெளியான சி.சிவசேகரத்தின் கட்டுரையை ஒன்றுக்கு இரண்டுதரம் படித்தால் சச்சிக்கு 'ஞானம்' கிடைக்கலாம்.

*சங்கரி,*
ஸ்காபரோ, கனடா.

நீண்ட இடைவெளிக்குப் பின்னர், புதிய ஆசிரியர் குழாத்துடன் வெளிவந்திருக்கும் பனிமலர் கண்டு மகிழ்ந்தேன். தொடர்ந்து தடையேதுமின்றி இம்மலர் வெளிவரவேண்டுமென்பதே எனது அவா. ஆனால், ஆசிரியர் தலையங்கத்தில் இனியும் இந்நெருக்கடி தொடருமென்கிறார்கள். இனியாவது, தடையேதுமின்றி மலரை வெளிக்கொணரத் தம்மாலான அனைத்தையும் செய்வோமென்ற உறுதிமொழியைப் புதிய ஆசிரியர்களிடமிருந்து எதிர்பார்க்கிறேன்.
இம்மலரில் வெளிவந்திருக்கும் ஆக்கங்கள் யாவும் தரமாக இருந்தன. குறிப்பாக, ராஜீவின் கொலை தொடர்பான கட்டுரை, புத்தக விமர்சனம், சிறுகதை ஆகியன மிகச் சிறப்பாக இருந்தன. இது போன்ற ஆக்கங்கள் மேலும் தொடர ஆவன செய்வீர்களென நம்புகிறேன்.
ஆயினும், சில குறைபாடுகள் இன்னும் காணப்படுகின்றன. முக்கியமாக எழுத்தமைப்புக் குறித்துக் கவனஞ் செலுத்தல் அவசியம். எழுத்தமைப்பை மாற்றும்போது நீள-அகல விகிதம் மாறாமலிருக்கவேண்டியது முக்கியமானது. எழுத்தமைப்பின் காரணமாக மாதொருபாகனின் ஆக்கத்தை வாசிப்பது மிகக் கடினமாகவுள்ளது.

*எஸ்.இலக்குவன்*
லண்டன் SW7

கட்டுரைகளும் நன்றாக இருந்தன. அடுத்த இதழில் சோவியத் யூனியனில் மாற்றங்களைப் பற்றி வருமென்று எதிர்பார்க்கிறேன்.

*மனோ,*
பிரான்ஸ்

ராஜேஸ்வரியின் கதை நல்ல கருத்துள்ளதுதான். ஆனாலும் வெள்ளைக்காறர் எல்லாரும் மற்றவர்களைப்பற்றி இரக்கமில்லாதவர்கள் என்று எழுதியிருக்கிறது சரியில்லை. அதையும் விட பட்டேல் குடும்பம் பஞ்சாப் காறர் என்று எழுதியிருக்கிறார். அவர்கள் குஜராத்காறர் என்றுதான் எனக்குத் தெரியும். அனுபவப்பட்ட எழுத்தாளர் கவனமாக எழுதுவது நல்லது.

*சி.பாலன்,*
லண்டன்.

## அடுத்த இதழில்....

**சும்மா இருந்த சங்கு**
சோவியத் யூனியனில் தோல்விகண்ட சதிப் புரட்சியின் சூழலும் பின் விளைவுகளும் பற்றிய ஆய்வு. அனந்தன் எழுதுகிறார்.

**கோபாலின் ஒரு நாள் 'பங்கர்' அனுபவங்கள்**
1990 இறுதிப் பகுதியில் நடந்த சம்பவங்கள் பற்றி யாழ்ப்பாணத்திலிருந்து நரேனின் சிறுகதை.

**சண்முகம் சிவலிங்கம்**
ஈழத்தின் தலைசிறந்த சமகாலக் கவிஞர்களுள் ஒருவரான சண்முகம் சிவலிங்கம் பற்றிய அறிமுகக் குறிப்புகளும் மூன்று கவிதைகளும்.

**சித்திரலேகா மௌனகுரு**
யாழ் பல்கலைக்கழகத் தமிழ் விரிவுரையாளர் சித்திரலேகாவுடனான 'பெண்களும் இலக்கியமும்' பற்றி ஒரு கலந்துரையாடல்.

**கவிதைகள்.**
ஊர்வசியும், காலஞ்சென்ற சிவரமணியும் எழுதி முன்பு பிரசுரமாகாத கவிதைகள்.

**ஓநாய்களின் கண்ணீர் மழை**
**மாதொருபாகன்**
**வழிப்போக்கன் டயறி**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# உமக்கும் எமக்கும்

## சென்ற இதழ்கள்

நெடுங்கால இடைவெளிக்குப் பின் வந்த மூன்றாவது பனிமலர் உற்சாகமான வரவேற்புப் பெற்றது பற்றி மகிழ்ச்சி அடைகிறோம். இதுவரை வந்த பாராட்டுக்களும் பாரபட்சமற்ற விமர்சனங்களும் கூசாது குறைகளைச் சுட்டிக்காட்டிய கண்டனங்களும் மேலுஞ் சிறப்பாகச் செயற்படுமாறு நம்மை ஊக்குவிக்கின்றன. பனிமலர் எந்த இயக்கத்திற்கோ அரசியற் பிரிவிற்கோ சார்பானதில்லை. ஆயினும் அது சமுதாயப் பார்வையோ அரசியல் உணர்வோ அற்ற சஞ்சிகையுமில்லை. இலங்கைவாழ் சகல தமிழ் பேசும் மக்களதும் சுயநிர்ணய உரிமையையும் இலங்கையில் இழக்கப்பட்டுப் போன மனித உரிமைகளையும் ஜனநாயக உரிமைகளையும் இன்னும் நிலைநிறுவ வேண்டியுள்ள சமுதாய நீதியையும் மனதார விரும்பும் ஒவ்வொரு நியாயமான மனிதரதும் குரலாகவே அது செயற்பட முனைந்துள்ளது. தொடர்ந்தும் அவ்வாறே செயற்பட எண்ணுகிறது. தவறுகட்கு அப்பாற்பட்ட சர்வமும் உணர்ந்த ஞானிகள் எவரும் இந்த ஏட்டை நடத்தவில்லை. மனதிற்குச் சரியென்று தெரிவதைப் பண்புடனும் பணிவுடனும் மாற்றுக் கருத்துக்கட்கு மதிப்புடனும் சொல்லவே விரும்புகிறோம். பிழைகள் சுட்டிக்காட்டப்படின் தவறாமற் திருத்த முயல்கிறோம். 'பனிமலரி'ன் உள்ளடக்கத்தில் ஒவ்வொரு ஆக்கத்திற்கும் அதை எழுதியவரே பொறுப்பாவார். ஆயினும் நியாயமற்ற முறையில் கூறப்பட்ட கருத்து ஏதேனும் நம் நோக்கத்தையும் மீறிப் பிரசுரமாகுமெனின் அவற்றுக்காக மனம் வருந்துவதோடு உடனுக்குடன் திருத்தவும் தயங்கோம். சமுதாயப் பிரச்சனைகட்கும் இலக்கியத்துக்கும் சம அளவான அழுத்தம் தர முனைவதாற் சமுதாய உணர்வுடைய ஆக்கங்களையே ஊக்குவிக்கிறோம். அதே வேளை, அரசியற் கோஷங்களை இலக்கியமாகக் காட்ட மறுக்கிறோம். இலக்கியப் படைப்புகளில் சமுதாய உணர்வும் கலை உணர்வும் சங்கமிக்க வேண்டுமென்பது நமது கருத்து. 'பனிமலர்' அதைச் செயற்படுத்தும்.

## இந்த இதழில்.

இலங்கையில் மனிதவுரிமைகளை மீட்பதற்கான ஒரு பொது வேலைத்திட்டம் பற்றிய கட்டுரை இவ்விதழிற் பிரசுரமாகிறது. இது லண்டனிலுள்ள ஒரு மனிதவுரிமை இயக்கத்தின் துண்டுப் பிரசுரத்தின் தமிழாக்கம். அதில் உள்ள கருத்துக்களுடன் நமது பரவலான உடன்பாடு காரணமாக மட்டுமன்றிப் பல கருத்துக்கள் இலங்கையின் ஜனநாயகத்தையும் மனிதவுரிமைகளையும் தேசிய உரிமைகளையும் சமுதாய நீதியையும் வேண்டும் அரசியற் சக்திகளும் கருத்திற் கொள்ள உகந்தன என்பதாலும் அதைப் பிரசுரிக்கிறோம்.

தமிழ்நாட்டில் அ.தி.மு.கவின் வெற்றி சிலரை வெகுவேகமாகவே ஜெயலலிதா பக்தர்கள் ஆக்கிவிட்டது. மேலுஞ்சிலர் தி.மு.கவின் அரசியலுக்குச் சமாதி கட்டியாயிற்று என நினைக்கின்றனர். ஈழத்தமிழர் விடுதலைப் போராட்டத்தின் தலைவிதியைத் தமிழ்நாட்டின் அரசியல் ரங்கராட்டினத்துடன் பிணைத்தே பார்த்துப் பழகிவிட்டவர்கள் தவறான முடிவுகளையே வந்தடைவர். சகாதேவன் இது பற்றிச் சுருக்கமான, வழமையான அங்கலாய்ப்புக்கள் இல்லாத ஒரு நல்ல கட்டுரையை எழுதியுள்ளார். வாசகர்களது கருத்துக்களை வரவேற்கிறோம்.

குர்த் (Kurd) மக்களது விடுதலைப் போராட்டம் பற்றிய கட்டுரை அச்சேறுமுன்பே மூன்றாமுலகிற் பல புதிய விஷயங்கள் நடந்துவிட்டன. எனவே ஏகாதிபத்திய வாதிகளையும் தேசிய விடுதலையும் பற்றி மேலும் எழுதுகிறார் 'ஜெ'.

பனிமலர் - 4
செப்டெம்பர் 1991
வெளியீடு:
தமிழ்மக்கள் புதிய கலாச்சாரக்குழு

தொடர்புகளுக்கு:
BCM POLARIS
LONDON WC1N 3XX
U.K.

ஆசிரியர் குழு:
ம.அருட்குமாரன்
நா.சபேசன்
சி.சிவசேகரம்

வடிவமைப்பு: கே.கிருஷ்ணராஜா
எழுத்துப்பதிவு: இ.குருநாதன்
அச்சுப்பதிவு: Set Line Data Ltd.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஈழத்தமிழ்ச் சிறுகதை, நாவல் ஆசிரியரிடையே கூடிய அனுபவமுடையவர் ராஜேஸ்வரி. 'சிறி' சிறுகதை உலகிற்குப் புதியவர். வழமையினும் வேறுபட்ட ஒரு சிறுகதையைப் பனிமலருக்குத் தந்துள்ளார். வாசகர்கள் அதையும் வரவேற்பார்களென நம்புகிறோம்.

கவிஞர்கள் அறிமுகம் தொடரில் இம்முறை இடம்பெறுபவர் சு.வில்வரத்தினம். எக் காரணத்தாலோ அவரது தகுதிக்கேற்றளவு பிரபல்யம் அவருக்குக் கிடைக்கவில்லை. அவரது முதலாவது கவிதைத் தொகுதியான 'அகங்களும் முகங்களும்' 1985இல் வந்தது. அதிலிருந்து சில கவிதைகளை இவ்விதழிற் தருகிறோம்.

வருமென்று வாக்களித்த வழிப்போக்கன் டயறியும் உள்ளது. இனித் தவறாது வருமென நம்புகிறோம். மேலும் புதிய கவிதைகள் சிலவும் ஒரு குறு நாடகமும் ஒரு குட்டிக்கதையும் சில இசைப்பாடல்களும் இந்த இதழில் உள்ளன. உங்கள் விமர்சனங்கள் வரவேற்கப்படுகின்றன.

## ஊரிலும் உலகிலும்.

திரு கேசவன் உட்படப் பத்துப்பேர் 17.5.91இல் விடுதலைப் புலிகளால் கைதுசெய்யப்பட்டு காணாமற் போனமையைக் கண்டித்து 'நண்பர்களால்' வெளியிடப்பட்ட துண்டுப் பிரசுரமொன்று பல ஐரோப்பியத் தமிழ்ச் சஞ்சிகைகளால் விநியோகிக்கப் பட்டுள்ளது. மனிதவுரிமைகளை மீறும் முறையில், ஜனநாயக உரிமைகளை மறுத்தும், மக்களுடனான கலந்தாலோசனை இல்லாததும் மாற்றுக் ககருத்துடையோரைக் கடத்துவதும் கொல்வதும் வழமையாகி விட்டது. இவை எவராற் செய்யப்படினும் கண்டிக்கப்பட வேண்டும். பனிமலர் இவ்விடயத்தில் முற்குறிப்பிட்ட ஏடுகளுடன் உடன்படுவதுடன் கடத்தப்பட்டோரின் உடனடியான விடுதலையை வேண்டுகிறது.

* * *

இலங்கை ராணுவத்தின் கொக்கட்டிச்சோலைப் படுகொலைக்குக் கொழும்பு ராணுவச் செயலகத்தின் மீதான 'கார்க்குண்டு' பதிலாகிவிடாது. ஒரு கோரச் செயலுக்கு இன்னொரு கோரச்செயல் பதிலாகுமெனின் கோரத்துக்கு முடிவிராது. இலங்கை அரசாங்கம் தன் பயங்கரவாதத்தை மூடிக்கட்டத் தன் எதிரிகளின் தவறுகளைப் பயன்படுத்துகிறது. விடுதலைப் போராட்டத்துக்கு ஆயுதப் போராட்டத்தைவிட முக்கியமானதொரு பரிமாணமுண்டு. அரசாங்கத்தை எதிர்ப்போரும் அதனுடன் ஒத்துழைப்போரும் அதனை மனதில் இருத்துவது நல்லது.

* * *

'தமிழ்நேஷன்' என்ற லண்டன் ஆங்கில ஏட்டின் ஆசிரியரும் கடந்த ஒன்பது வருடங்களாகச் சென்னையில் வாழ்ந்து வருபவருமான 'சற்றடே றிவ்யூ'வின் முன்னாள் ஆசிரியர் எஸ். சிவநாயகம் இந்திய அதிகாரிகளாற் கைதுசெய்யப்பட்டுள்ளார். இந்திய அரசாங்கத்தின் அனுமதியின்றித் 'தமிழ் நேஷன்' பத்திரிகையைப் பிரசுரித்ததற்காகவும் அனுமதி இல்லாமல் அந்நியச் செலவாணி வைத்திருந்ததற்காகவும் செல்லுபடியான பயண ஆவணமின்றி இந்தியாவிற் தங்கியிருந்ததற்காகவும் பயங்கரவாதத்திற் கெதிரான சட்டங்களின் கீழ் ஒரு வருடத்துக்குத் தடுப்பு மறியலில் வைக்கப்பட்டுள்ளார். 'தமிழ்நேஷன்' ஏறத்தாழ ஒரு வருஷமாக இந்தியாவில் அச்சாகிறது. செல்லுபடியான பயண ஆவணமெதுவுமின்றிப் பத்தாயிரக்கணக்கான ஈழத்தமிழர் இந்தியாவில் ஐந்து-பத்து வருஷகாலமாக வாழ்கின்றனர். திரு சிவநாயகம் வைத்திருந்ததாகச் சொல்லப்பட்ட பணம் மிகச்சிறிய தொகையே (சில நூறு டொலர்கள்). ராஜீவ் காந்தியின் மரணத்தை அடுத்து அந்தக் கொலையைப்பற்றி அவர் பிரித்தானிய தொலைக்காட்சியிற் கூறியவை மனிதாபிமானத்திற் குறைந்தவை. அவை கண்டிக்கப்படவேண்டியவை. ஆயினும், ராஜீவ் கொலையில் விடுதலைப் புலிகள் மீதான சந்தேகமும், திரு சிவநாயகத்திற்கு விடுதலைப்புலிகள் மீதான அனுதாபமுமே அவர் கைதுசெய்யப்பட்டதற்குக் காரணங்கள் என்பது தெளிவு. இந்திய அரசாங்கத்தின் நோக்கங்கட்குத் தடையாக உள்ள எவருமே சிரமத்துக்குட்படுத்தப் படலாம் என்பது மீண்டும் தெளிவாக்கப்பட்டுள்ளது. உடல்நலக் குறைவானவரான திரு சிவநாயகத்தை உடனடியாக விடுதலை செய்யக் கோரும் பலருடன்

Panimalar - 4
(Snow Blossom)
A Tamil Magazine

Published by:
Tamils' New Cultural Group
BCM POLARIS
LONDON WC1N 3XX

Editors:
M.Arudkumaran
N.Sabesan
S.Sivasegaram

Layout by: K.Krishnarajah
Type-set by: R.Gurunathan
Printed by Set Line Data Ltd.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பனிமலரும் இணைகிறது. அரசியற் காரணங்கட்காகத் தனிமனிதர்களைச் சிறைப்படுத்தும் நடவடிக்கைகளைச் செய்வது அரசாங்கமோ அதற்கெதிரான இயக்கமோ என்ற வேறுபாடு இல்லாது 'பனிமலர்' இந்தவகையான மனிதவுரிமை மீறல்களைக் கண்டிக்கிறது.

* * *

விடுதலைப்புலிகளின் தலைமை உறுப்பினரான கிட்டு (சதாசிவம் கிருஷ்ணகுமார்) ஏழுநாட் தவணையில் 7.8.91 க்கு முன் பிரித்தானியாவினின்று வெளியேற வேண்டுமென பிரித்தானிய உள்நாட்டு அமைச்சு ஆணை பிறப்பித்தது. விடுதலைப் புலிகளின் அனுதாபிகள் மட்டுமன்றி மனிதவுரிமை இயக்கங்களும் குறுக்கிட்டதன் மூலம் இவ்வெளியேற்றல் உத்தரவு பற்றிய முடிவு பின்போடப்பட்டது. எவ்வாறாயினும் திரு கிட்டுவை நாட்டைவிட்டு வெளியேற்றும் ஆணை பிறப்பிக்கத் தரப்பட்ட காரணங்கள் நம் அனைவரதும் கவலைக்குரியது. திரு கிட்டு இங்கு அகதியாகத் தங்க அனுமதி கேட்டுள்ளார்; அவரது உயிருக்கு இலங்கையில் ஆபத்துண்டு எனக்கருத நியாயமில்லை என்பது ஒரு காரணம். இது மிகவும் அபாயகரமானது. இக் காரணத்தைக் காட்டித் தஞ்சம் கோரும் எவரையும் திருப்பி அனுப்பிவிடும் வாய்ப்புக்கள் நாளாந்தம் பெருகி வருகின்றன. எனவே இது கடுமையாக எதிர்க்கப்பட வேண்டும். மிரட்டிப் பணம் சேகரித்தார் என்பதும் அதைக்கொண்டு விடுதலைப் புலிகட்கு ஆயுதங்கள் வாங்கினாரென்பதும் மற்றக் காரணம். இது உண்மையெனின் அவர் மீது சட்டப்படியான விசாரணையும் வழக்கும் நடத்துவதன் மூலம் அவ் விஷயம் முடிவு செய்யப்பட வேண்டும். சந்தேகத்தின் பேரில் ஒருவரை நாடு கடத்துவது கண்டனத்துக்குரியது. ஈராக் மீது இவ்வருட முற்பகுதியில் மேற்குநாடுகள் யுத்த நடவடிக்கை எடுத்தபோது நாட்டின் பாதுகாப்பை முகாமையாகக் கொண்டு ஈராக்கியரும் பலஸ்தீனியரும் வெளியேற்றப்பட்ட போதும் அவர்களுக்குத் தம் மீது சுமத்தப்பட்ட குற்றங்களை மறுக்க வாய்ப்பளிக்கப் படவில்லை. மனித உரிமை இயக்கங்கள் மட்டுமன்றி முக்கிய அரசியற் கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலரும் இதை எதிர்த்தனர். திரு கிட்டுவுடனான அரசியல் உடன்பாடோ, வேறுபாடோ அவரது வெளியேற்றல் விஷயத்தில் ஒருவரது நிலைப்பாட்டைத் தீர்மானிக்கக் கூடாது. ஒருவர் இது போன்ற விஷயங்களில் எடுக்கும் நிலைப்பாடு அவரது அரசியல் முதிர்ச்சியினதும் மனிதாபிமானத்தினதும் அளவுகோலாகும். ஏனெனிற் பிரச்சனை திரு கிட்டு பற்றியது மட்டுமல்ல. குற்றஞ் சாட்டப்படக்கூடிய ஒவ்வொரு அகதியையும் பற்றியது.

பிரித்தானிய அரசாங்கம் திரு கிட்டுவை வெளியேற்றும் ஆணையை மறுபரிசீலனை செய்யுமுன்னமே அவர் நாட்டைவிட்டு அகன்று வேறு நாட்டிற் தஞ்சம் தேடுகிறார். இது பிரித்தானிய அரசை ஒரு இக்கட்டினின்றும் விடுவித்துள்ளது. ஆயினும் அடிப்படையான பிரச்சனை அவ்வாறே உள்ளது. அது ஒவ்வொரு அகதியையும் பாதிக்கக் கூடியது. பொது மக்கள் நடுவே அரசாங்கத்தின் நிலைப்பாட்டுக்கு எதிரான பலமான கருத்து உருவாக்கப் படவேண்டும்.

* * *

ஜனாதிபதி பிரேமதாஸவை ஊழல், அதிகாரத் துஷ்பிரயோகம், சித்தப் பிரமை என்ற காரணங்கட்காகப் பதவி நீக்கும் முயற்சியின் ஆரம்ப நடவடிக்கையைப் பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சியினர் எடுத்தபோது பல ஆளுங்கட்சியினர் அதில் இணைந்தது ஒரு நல்ல அறிகுறி. அதிற் சில தமிழ் எம்.பி.மார் இணைய மறுத்தது வெட்கக் கேடானது. திரு. பிரேமதாஸ, எதிர்பார்க்கக் கூடியவாறு, தன் சாம, பேத, தான, தண்ட முறைகளால் அம் முயற்சிக்குத் தடைபோடுவதில் வெற்றி காண்பதாகத் தெரிகிறது. ஆயினும் இம் முயற்சி ஒரு வரவேற்க வேண்டிய அரசியற் திருப்பமே. எவ்வாறாயினும், அவரது இடத்தில் திரு. லலித் அத்துலத்முதலி போல இன்னொருவர் வருவதாற் பிரச்சனைகள் தீராது. ஒரு சர்வாதிகாரியின் இடத்தில் இன்னொரு சர்வாதிகாரி வருவதால் நல்ல தீர்வு ஏற்படும் என்று எதிர்பார்ப்பது அரசியல் விவேகமாகாது. இன்றைய சர்வாதிகார முறையின் முடிவே முழு இலங்கைக்கும் நல்லது.

இந்நாவல் கூறும் விடயங்களை சிறிலங்கா அரசு தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தி தமிழீழ விடுதலைப் போராட்டத்தைச் சிறுமைப்படுத்தும் பிரச்சாரத்தை மேற்கொள்ளலாமே என்ற அச்சம் இந்நாவல் படைக்கப்படும் போது கூடவே எனக்கிருந்தது. கூடுமானவரை அந்த உணர்வு வாசகர்களுக்கு ஏற்படாத வகையில் நாவல் உருவாக்கப்பட்டது. இந்த விபரீத அபாயத்தையும் எதிர்நோக்கிக் கொண்டு இந்நாவல் படைக்கப்படுவதற்கு காரணமாக இருந்தது. தமிழீழ விடுதலைப் போராட்டம். குறைகள் களையப்பட்டு அது முறையாக முன்னெடுத்துச் செல்லப்பட வேண்டும் என்ற அக்கறையினாலேயாகும்.

புதியதோர் உலகம் நாவல்
முன்னுரையில் கேசவன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆனையிறவு ராணுவமுகாம் மீதான முற்றுகையின் முறியடிப்புப் பற்றி இலங்கை அரசாங்கம் பெருமைப்படுகிறது. இராணுவம் தம் வலைக்குள் விழுந்ததாக விடுதலைப் புலிகள் சொல்கிறார்கள். யாருடைய இழப்புக்கள் பெரியன என்ற கணிப்பீடுகளும் கோட்டை முற்றுகையுடனான ஒப்பீடுகளும் முடிவின்றித் தொடர்கின்றன. இரண்டாயிரம் பேராவது இறந்தனர் என்பதும் பெரும்பாலோர் சாதாரண குடிமக்கள் என்பதும் இரு முற்றுகைகளிடையிலும் உள்ள ஒற்றுமை. ஒவ்வொரு மோதலும் நமக்கு அமைதியின் அவசியத்தை வலியுறுத்துகிறது. வடக்கின் மக்களும் அமைதியையே வேண்டுகின்றனர். நியாயமான, நிலைக்கக்கூடிய அரசியற் தீர்வே இன்றைய தேவை. இதில் அரசாங்கத்தின் பொறுப்பு முக்கியமானது. அப்பாவி மக்கள் மீதான தன் தாக்குதல்களை அது நிறுத்த வேண்டும். நேர்மையான முறையில் தீர்வு தேடும் பேச்சுவார்த்தைகளுக்கான முயற்சிகளில் அனைவரதும் ஒத்துழைப்பையும் அது நாட வேண்டும். ராணுவ மோதல்களைக் குத்துச்சண்டைப் போட்டிகள்போற் கருதி கைகொட்டி ஊக்குவிப்போர் கூடிய பொறுப்புடன் நடக்கப் பழகவேண்டும்.

* * *

ராஜீவ் கொலையில் சந்தேகிக்கப் படுவோருக்குப் புகலிடம் தந்தவரெனவும், விடுதலைப் புலிகளுடைய ஆதரவாளர் என்று சொல்லப்பட்டவருமான வேதாரண்யத்தைச் சேர்ந்த மிராசுதார் சண்முகம் பொலிஸாரின் பொறுப்பிலிருந்தபோது தப்பியோடித் தற்கொலை செய்ததாகக் கூறப்பட்டது. பின்னர், அவர் கொலை செய்யப்பட்டுத் தூக்கிலிடப்பட்டாரெனத் தகவல்கள் வந்தன. இதையடுத்துப் பொலிஸார், விடுதலைப் புலிகள் தம் பாதுகாப்பைக் கருதி அவரைத் தப்பவைத்துக் கொன்றதாக ஐயப்படுவதாகக் கூறினர். இது போதிய ஆதாரமற்றது. எவ்வாறாயினும், பொலிஸ் பாதுகாப்பில் உள்ள ஒருவருக்கு பொலிஸாரே பொறுப்பு. இதைத் தட்டிக்கழிக்கும் முயற்சிகள் கண்டனத்துக்குரியன.

நாஜிகளின் சூழ்ச்சிகளைக் கண்டு எச்சரிக்கையாக இருங்கள். அவர்கள் ஆட்டுத்தோல் போர்த்திய ஓநாய்கள். அவர்கள் அமைதியை நமக்கு குறைந்த விலையில் கொடுப்பதாகச் சொல்லுவார்கள். விழிப்புணர்வு அடையுமுன்னரே நாம் அவர்கள் விரித்த வலையில் விழுந்து விடுவோம். அதன்பின் நாம் அவர்களுக்கு அடிமைதான். நமது சுதந்திரத்தைப் பறித்துக்கொண்டு, நமது சிந்தனைகளையும் சிறைப்படுத்தி விடுவார்கள்.

-சார்லி சப்ளின்

## இறுதி வார்த்தை

இன்று
மயிரிழையில் ஆடிக்கொண்டிருக்கிறது
வாழ்வு.

குருதி கொப்புளித்துப் பிரவாகம் எடுக்கும் கண்களுடன்
மரணத்தின் படைவீரர்கள்
எந்த நேரமும் வரலாம்.

குருட்டு விசுவாசமுள்ள
முரட்டுப் போர்க்குணத்துக்கும்
முரட்டு விசுவாசமுள்ள
குருட்டுப் போர்க்குணத்துக்கும்
நன்றி.

மனிதம் உருவழிகையில்
மௌனத் திரையிறக்கி நிஷ்டை கூடுதல்
கவிஞனுக்கு அப்பாற்பட்டது.

பேசுகிற கவிஞன் ஒரு கண்ணிவெடி;
பேசாதவன்
பிறகு பிரளயமாவான்.

வாழ்வு
காற்றொரு துளியும்
கடலொரு பிடியும்
புணர்ந்து பிறந்த நுரை அல்ல
என்பதை எல்லோரும் உணர வேண்டும்.

மேலும்
இரத்தம் எப்போதும் சிவப்பு அல்ல
உறைந்த பிறகு கறுப்பு என்பதையும்
நல்லவை, அல்லவை
எல்லாவற்றையும் தீயிலிடும்
ஒரு கண்மூடித்தனமான வேள்விக்கு
வேத மந்திர கோஷம் முழங்க
எல்லா இடங்களிலிருந்தும்
வருகிறது காளான்.

நட்பும்
நேசமும்
நியாயமும்
நுழைய முடியாமல்
உறைந்த பருத்தி ஆடைக்குள்ளும்
தடித்த முதலைத் தோலுக்குள்ளும்
இருண்டு கிடக்கின்ற
இதயத்தின் அறைகளுக்குள்
எங்காவது ஒரு மூலைக்கு
எரியும் என் சிதை
ஒரு சிறு வெளிச்சம் தரட்டும்.

அந்த வெளிச்சத்திலிருந்து
ஒரு பாடல் பிறக்கும்:

வீரம் விளைந்து சிந்தப்படாத
இரத்தத்தின் கறைபடிந்த கரங்களால்
குழந்தைகளை, கவிதைகளை
மலர்களைத் தொடாமல்.....

*சேரன்,*
*வைகாசி, 87*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

[ஒரு குறிப்பு:
இது சென்ற இதழில் பிரசுரமாகி இருக்க வேண்டும்.
தபாலில் அனுப்பப்பட்ட போது தொலைந்து போயிற்று.
இதன் பிரதியை 'வழிப்போக்கன்' எமக்கு அனுப்பி வைத்தபோது
மூன்றாவது இதழை நாங்கள் தயாரித்து முடித்து விட்டோம்.
புதிய வாசகர்கள் இரண்டாவது இதழைப் படிப்பதன் மூலம்
இத் தொடரை இலகுவாக விளங்கிக் கொள்ளலாம்.]

# இலங்கையிலிருந்து:

# வழிப்போக்கன் டயறி

## பாகம் 3:

## கையறு நிலை

இந்த இரண்டு விசயங்களையும் என்ரை குறிப்பிலை நான் காரணத்தோடதான் குறிச்சு வைச்சனான். சிலபேர் நீ ஏன் இடையுக்கிள்ளை ஆரேனும் சொன்னதுகளைப் புகுத்துகிறாய் எண்டு கேட்டினம். ஆரும் சொன்னால் என்ன. சரியான விசயமெண்டால் நாங்கள் அதை அறிஞ்சு சொல்லுறதிலை என்ன பிழை? எங்கடயள் தங்களைப் பெரிய ஆக்களாக நினைக்கிறதாலைதானே எல்லா வினையும் வாறது. உலகத்தில எத்தனை விசயம் நடக்குது. அதுகளைப் பார்த்துப் படிச்சு நாங்கள் திருந்தி நல்லா நடக்கோணும் எண்டு இவையள் நினைக்கிறேல்லை. தங்களை வெண்டவங்கள் இல்லையெண்டு நினைச்சுக் கொண்டு தாம் நினைச்ச மூப்புக்கு நடக்கிறது. கடைசில எல்லாத்தையும் போட்டுடைச்சிட்டு திரும்பவும் முதல்ல இருந்து துவங்கிறது.

நான் இதைப்பற்றி அடிக்கடி சொல்லியிருக்கிறன். ஆனால் ஆர் சொல்லி என்ன? என்னவெண்டாலும் சொல்லிறதெண்டால் அது இதுகளின்ர செய்கையளை ஆகா ஓகோ எண்டு பாராட்டுறதாய் இருக்கோணும். இல்லையெண்டால் வாலைச் சுருட்டிக்கொண்டு கம்மெண்டு இருக்கோணும். கதைச்சால் துரோகி எண்டு சொல்லி பச்சைமட்டை அடி அல்லாட்டி கறண்ட் போஸ்ட்டில கட்டிறதுதான் நிலைமையாய்ப் போச்சுது.

எனக்கு நல்லா ஞாபகம் இருக்குது. நேற்றெண்டாப் போல. இந்தியாக் காறன் வந்து தன்ரை அட்டகாசத்தைத் துவக்கினாப் பிறகு இது நடந்தது. யாழ்ப்பாணம் பெரியாசுப்பத்திரிக்கு முன்னாலை ஒரு நாள் இரண்டு பெடியள் சைக்கிள்ளை போனாங்கள். கையில சாமான் வேறை. இதைக் கண்டிட்டு சும்மா கிடக்கமாட்டாமல் அந்த மனிசன் இவங்களை மறிச்சுச் சொல்லியிருக்கிது. அந்த இந்தியாக்காற நாசமறுவாங்கள் அங்காலை நிக்கிறாங்கள், போய்க்கீய்த் தாலியறுத்துப் போடுவாங்கள் எண்டு அந்தாள் நினைச்சிருக்கோணும்.

"தம்பியவை அங்காலை போகாதேங்கோடா. அந்த நாசமறுவார் ஏதோ கொதியில நிக்கிறாங்கள்"

"ஆர்?"

"உவங்கள்தான் உந்த இந்தியாப்படை அங்கை ரவுணுக்கை எல்லாக் கடையளையும் சோதிக்கிறுங்கள்."

சைக்கிள்ளை வந்தவங்கள் நிண்டு மனிசனை ஒரு மாதிரிப் பாத்தாங்கள். மனிசனுக்கும் உசார் வந்திட்டுது போலை.

"அவர் ஆசுப்பத்திரிக்கு வந்தால் வந்தலுவலைப் பாத்துக்கொண்டு போறதுக்கு அவருக்குத் தேவையில்லாத வேலை. அவங்கள் தெரியாமலே போனவங்கள்" எண்டு எனக்குப் பக்கத்திலை நிண்டவர் சொன்னார். நான் அவரைப் பேசாமல் இருக்கச் சொல்லிப் போட்டு நடந்ததைக் கவனிச்சன்.

சைக்கிளாலை இறங்கி வந்தவங்கள் மனிசனைப் பாத்துச் சிரிச்சுப் போட்டு "எப்ப துவக்கமடா கிழட்டு ***மோனே உந்த வேலை பாக்கிறாய்...?" எண்டு கத்தினாங்கள். எனக்குத் 'திக்'கெண்டுது. இது மற்றதுகள் போலை... என்ன நடக்கப்போகுதோ எண்டு பயமாயிருந்துது. 'பளார்' எண்டு ஒரு அடி விழுந்துது கிழவனுக்குக் கன்னத்திலை.

'நடவடா காம்புக்கு' எண்டான் மற்றவன். பிறகு கிழவனை இழுத்துக்கொண்டு போனாங்கள். அதுக்குப் பிறகு என்ன நடக்குமெண்டு எனக்குத் தெரியும்தானே... அடிச்செல்லே சாக்காட்டப் போறாங்கள் எண்டிட்டு நான் போனன்.

"ஏன்ரா தம்பியவை அந்தாளை அடிக்கிறியள்?"

"இந்தக் கிழவன் அவங்கடை 'ஸ்பை'."

"ஸ்பையோ? அதென்னது..."

"அவங்களுக்காண்டி உளவு சொல்லிறான்"

"நானும் பாத்துக் கொண்டுதான் நிண்டனான். அந்தாள் பாவம் இளம்பெடியள் போய் அநியாயப்படப் போறியள் எண்டிட்டுச் சொல்லியிருக்குது.... பாவமடா மனிசனை விடுங்கோ"

"முதல்லை எடாபிடா எண்டு கதைக்கிறதை நிப்பாட்டும் காணும்" எண்டான் ஒருத்தன் என்னைப் பார்த்து. எனக்குத் 'திக்'கெண்டுது.

"என்னது..."

"கனக்கக் கதைச்சால் உம்மையும் காம்புக்குக் கொண்டுபோக வேண்டிவரும். கவனம்!" எண்டு சொல்லிப்போட்டு அந்தாளை இழுத்துக்கொண்டு போனாங்கள். எனக்கு உடம்பெல்லாம் எரியுறமாதிரி இருந்துது. ஆனால் என்ன செய்ய? பேசாமல் திகைச்சுப் போய் நிண்டன். அந்தாளை இழுத்துக் கொண்டு போனாங்கள். என்ன நடந்துதோ தெரியாது.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"எப்பிடி?.. நான் சொன்னன்... உதுகளோட கதைக்கப்பிடாது. நன்மைக்கு வாயைத்திறந்தாலும் ஆபத்து" என்றார் எனக்குப் பக்கத்தில் நிண்டவர். அவர் சொன்னது சரிதான் எண்டாப்போலை நான் தலையை ஆட்டினன்.

"அண்ணை... இவங்களோட நன்மையாய்க் கதைச்சாலும், தின்மையாய்க் கதைச்சாலும் பிரச்சனை. வாயை மூடிக்கொண்டிருக்கிறதுதான் ஒரே வழி. இன்னும் வீடுவீடாவந்து அவங்கள் இன்னும் சுடத்துவங்கேல்லையே எண்டு சந்தோசப்பட வேண்டியதுதான். வேறையென்ன செய்யிறது? ஏதாவது தெரிஞ்சதைச் சொன்னால் 'லோ' கதைக்கிறம் எண்டு சொல்லுங்கள்.

இப்பிடி எத்தினை சம்பவங்கள். எல்லாரும் ஒரே மாதிரி. ஒரே குணம். பேர்தான் புலியெண்டும், ஈ.பி.யெண்டும், அதுஇது எண்டும் வேறைவேறையாய் இருக்குது. ஒருத்தரும் மனிசரை மனிசரெண்டுகூட மதிக்கிறேல்லை. கடைசியா உது எங்கை போகப் போகுதோ தெரியேல்லை. இவங்கள் எவ்வளவு பட்டும் தெளியிறதும் இல்லை. இந்தியாக்காறன் இஞ்சையிருந்து சண்டை பிடிபிடியெண்டு பிடிச்சிட்டுப் போனாப்பிறகு, இன்னும் அவனோட பேசுறதிலை தமக்கு விருப்பம் எண்டு புலியள் சொல்லேல்லையே? புலியள் இலங்கை அரசாங்கத்தோட பேச்சுவார்த்தை நடத்தேக்கை இந்தியாவோட நிண்ட மற்றதுகள் அதைப் பகிடி பண்ணிப் போட்டு இப்ப இலங்கை அரசோட நிக்கேல்லையா எல்லாரும் தங்கிடுதத்தியள் மாதிரித்தான் நடக்கிறாங்கள். ஒருத்தனாவது நிலைமையை யோசிக்கிறதாத் தெரியேல்லை. இந்தியாக்காறன் போனப்பிறகு இவ்வளவு நாளைக்குள்ளை எத்தினை விசயங்கள் நடந்து போச்சு. ஆறுதலாயிருந்து யோசிச்சுப் பாத்தால் என்னதான் எங்களுக்குச் சாதகமா நடந்திருக்கு எண்டுசொல்ல?

கோட்டையைப் பிடிச்சது சந்தோசமாக இருந்ததுதான். ஆனால் கோட்டை பிடிச்ச சந்தோசத்தை ஆர் கொண்டாடிறது? சனமெல்லாம் பயந்து செத்துக் கொண்டிருந்ததிலை ஒருத்தருக்கும் அது பெரிய விசயமாப் படேல்லை. உண்மையிலை அது பெரிய விசயம்தான் ஆனால் என்னைப் பொறுத்தவரையிலை அந்த நேரம் எனக்கு அதையிட்டுச் சந்தோசப்படவே முடியவில்லை. யாழ்ப்பாணத்து முஸ்லிம்கள் எல்லாத்தையும் அடிச்சுக் கலைச்சுப் போட்டுத்தான் தமிழீழம் காணுறதெண்டு இவங்கள் நிக்கேக்கை வீரத்துக்காகச் சந்தோசப்பட முடியுமோ?

வடக்கில் இருந்த எல்லா முஸ்லிம்களின்ரையும் உடைமையள் எல்லாத்தையும் பறிச்சுப் போட்டு உடனடியா வெளியேறியிடோணும் எண்டு இவங்கள் அறிவிச்சதை நினைக்க எனக்குக் கொதிகொதி எண்டு கொதிக்குது. யாழ்ப்பாணச் சோனகத்தெருச் சனங்களுக்கு யாழ்ப்பாணத்தைவிட்டால் வேறை எங்கை போகத் தெரியும். இத்தினை காலமாத் தாங்கள் பிறந்து வளர்ந்த அந்த இடத்தை விட்டிட்டு உடனை ஓடச்சொன்னால் எப்பிடி ஓடுறது? இதிலை ஆக ஏறிற விசயம் என்னண்டால் எங்கடை தமிழாக்களின்ர ஞாயம்தான். எனக்கொரு பொறுக்கித் தின்னி ஒரு நாள் சொல்லுது "அவங்கள் இன்பமேசன் குடுக்கிறாங்களாம்; வாக்கிடோக்கியோடை ஆக்கள் திரிஞ்சவையாம். இந்த தொப்பிபிரட்டி காக்காமாரை நம்பேலாது" எண்டு. எனக்கு வந்த விசரிலை அவனுக்கு வெளுவெளெண்டு வெளுத்துப் போட்டன். என்ன மயிர் ஞாயம் கதைக்கிறான் இவன். இன்பமேசன் குடுத்ததுக்காக – அதுவும் உண்மைக் கதையோ ஆர் கண்டது – முழுச் சோனகச் சனத்தையும் அடிச்சுக் கலைக்கிறது பொறுக்கித்தனம்தானே. அப்பிடிப் பார்த்தால் யாழ்ப்பாணத்திலை புலியளைவிட்டால் வேறை ஒருத்தரும் இருக்கேலாதெல்லோ?

* * *

ராஜீவ் காந்தியைச் சுட்டுப் போட்டாங்கள் எண்டு விடியப்புறம் நியூஸ் சொல்லிச்சுது. என்ரை மனதிலை வந்தது என்ன எண்டு விளங்கேல்லை. படுக்கயிலை ஒழும்பி இருந்தபடி யோசிச்சுக் கொண்டிருந்தன். ராஜீவ் காந்தியைச் சுடுறதுக்கு முதல் இவங்கள் ஏன் அவனைச் சுடவேண்டி வந்தது எண்டு யோசிச்சுப் பார்த்தாங்களோ என்னவோ! சுட்டது இவங்கள்தானோ எண்டு இன்னும் தெரியேல்லை. ஆனால் இவங்களே செய்தும் இருப்பாங்கள். செய்திருந்தால் அது பெரிய நெருக்கடியை எல்லே இந்த வாயில மண்விழுவாருக்குக் குடுக்கப்போகுது! இவங்கள் இந்தியாவுக்கு வால் பிடிக்கேக்கை யோசிச்சிருக்க வேணும். அல்லாட்டிப் பிறகு அவன் ஒப்பந்தம் போட்டிட்டு ஆயுதத்தைத் தா எண்ணேக்கை யோசிச்சு இருக்கோணும். அல்லாட்டிச் சண்டை முடிஞ்சாப்பிறகாவது யோசிச்சிருக்கோணும், இந்தியாவின்ர போக்கு எப்படிப்பட்டதென்று. சும்மா இந்தியாவோடை பேசவும் அவையளின்ர உதவியோடை ஏதாவது 'சமாளிக்கலாம்' எண்டு நினைக்கிறதும் இவங்கடை குழந்தைப் பிள்ளை விளையாட்டு அரசியல். கடசியா இப்ப ராஜீவைச் சுட்டாச்சு. உது இப்ப இருக்கிற நிலைமையை இன்னும் மோசமாக்கப் போகுது. இதுகளுக்கு எதை எதை எப்பிடிச் செய்யிறதெண்டு தெரியாது. சும்மா மனம் போற போக்கிலை போறது. பிறகு அதைச் சமாளிக்க ஏதாவது செய்யிறது. கண்டறியாத போராட்டம்.

உப்பிடித்தான் இவங்கள் ஒவ்வொரு தடவையும், பிரேமதாசாவைக் கண்ணியவான் எண்டாங்கள். பிறகு திடீரெண்டு சண்டையைத் துடங்கினாங்கள். இப்ப திரும்பப் பேச 'ட்றை' பண்ணிறாங்கள். ராஜீவ் காந்தியைச் சுட்டது வெளியில தெரிய வரேக்கை இவையளுக்கு உலகம் முழுக்கச் சரியான நெருக்கடி வரப்போகுது. இது இலங்கை அரசாங்கத்துக்குத் தமிழனைச் சாக்காட்ட மேலும் வசதி அளிக்கப் போகுது.

ராஜீவ் காந்தி செத்ததை இஞ்சை மற்றக்கட்சியள் தமிழாக்களின்ர விடுதலைச் சூரியன்ரை சா மாதிரிக் காட்டிக் கதைக்கினம். ஆனால் விடுதலைச் சூரியன் ஒண்டு தேவை எண்டால் அது இனித்தான் உதிக்கவேண்டும் எண்டு ஒருத்தருக்கும் புரியுதில்லை. ராஜீவ் காந்தி கொலைக்காக ஆர்தான் கண்ணீர் விடப் போறான் வடக்கு–கிழக்கிலை – இந்தக் கட்சியளைத் தவிர. கொழும்பில வெடிகூடக் கொழுத்திக் கொண்டாடினாங்களாம். அவன் செய்த அநியாயத்துக்கு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உப்பிடி ஒரு நாளைக்கில்லை, இன்னொருநாள் நடந்துதான் இருக்கும். ஆனால் இந்த விழுவான்கள் இதைச் செய்தது இருக்கிற நிலைமையையும் கெடுக்கப் போகுது. பாப்பம் என்ன செய்யினமெண்டு.

* * *

யாழ்ப்பாணத்திலை மண்ணெண்ணை இருநூறு ரூபா, பெட்றோல் 1000 ரூபா நடக்குதாம். மோட்டார் சயிக்கிளை மண்ணெண்ணையிலை ஓடவும், நெருப்பும் வெளிச்சமும் இல்லாமல் சீவிக்கவும் சனம் பழகியிட்டுது. ஆஸ்பத்திரி வழியகூட ஒழுங்கா மருந்தில்லையாம். அரிசி, சீனித்தட்டுப்பாடு ஒரு அளவு கணக்கில்லை. இந்த லட்சணத்திலை புலியள் முத்தமிழ் விழா வேறை கொண்டாடுறாங்களாம். அதுக்கு எக்கச்சக்கமான சிலவு வேறை. போராட்டம் நடக்கிற நேரத்தில உள்நாட்டில கயிட்டங்கள் துன்பங்கள் வரும்தான். ஆனா மனிசனாப்பட்டவன் முடிஞ்சளவு இதுகளைக் குறைக்கவெல்லோ பார்க்கவேணும். இது என்னடா எண்டால், சும்மாவே சாப்பாடு எண்ணை தட்டுப்பாடாக இருக்கேக்கை பவுண் பறிக்கிறதும், விழாக் கொண்டாட கோடிக்கணக்கில சிலவளிக்கிறதும் எரிச்சலையல்லவோ குடுக்குது.

பற்றி இல்லை. ஒரு றேடியோக் கேக்கேலாது. பேப்பரிலை வரிக்குவரி சும்மா சண்டையைப் பற்றி எழுறாங்கள். அதை ஆர் நம்புறது. சைக்கிள் டைனமோவைச் சுத்திச் சும்மா அங்கினேக்கை றேடியோ கேட்கலாம். பூச்சிபூரானுக்குப் பயத்தில விளக்குப் பிடிச்சு நடக்கக்கூட ஒரு வழியும் இல்லை. வீட்டுக்குள்ளை ஆறுமணிக்கே படுத்துக்கிடக்க வேண்டியதுதான். ஆருக்கேன் பிள்ளைத்தாச்சிக்கு வயித்து நோக்காடு வந்தாலும் ஒரு வழியுமில்லை. எங்கை போக. பழைய அந்தநாளையில் முறைப்படி வீடுவழிய பெறவேண்டியதுதான்.

பெடியளுக்குப் பிரச்சினை இல்லை. அவங்கள் ஜெனறேட்டர் வைச்சு விளக்கு எரிக்கிறாங்கள். லைட் போட்டிருக்கு. ஆஸ்பத்திரியிலையும் அவங்களுக்கு முதலிடம். ஊர் நிலைமையளை யோசிக்க யோசிக்க விசர்விசராய் வருகுது.

* * *

யூலை–

தீப்பொறிக்காறர் எண்டு கொஞ்சப்பேரை பிடிச்சுப் போட்டாங்களாம் புலியள். இவங்கள் இதுக்கு முந்தியும் என்.எல். எப்டி, பி.எல்.எப்.டி, பேரவைக்காறர் எண்டு வேறை சின்ன இயக்கங்கள்ளை இருந்தவையளையும் பிடிச்சுக்கொண்டு போனவங்கள். அவங்களை இன்னும் வைச்சிருக்கிறாங்களோ ஆர் கண்டது.

இந்த நாசமறுவாருக்கு இன்னுமேன் இந்தவேலை. அவங்கள் என்ன மற்றக் கட்சிக்காறங்கள் மாதிரி இந்தியாக்காறருக்குக் கழுவிக்கொண்டு திரிஞ்சவங்களே?.... இல்லாட்டிப் பிரேமதாசாவைத் தூக்கித் தோளில காவினவங்களே....

தமிழ்ச்சனங்கள் சாகுதெண்டு இந்தியாக்காரன் றேடியோவிலும் ரீ.வி.யிலையும் சொல்லேக்கை "ஆடு நனையுதெண்டு ஓநாய் அழுகுதெண்டு' சொன்னவங்கள். பிரேமதாசா நல்லாள், நாணயமானவன் என்டு உவை சொல்லித் திரியேக்கை, இல்லை ஏமாத்துவான் எண்டு சொன்னவங்கள் இவங்கள். அப்ப விளங்காமல் கடைசியிலைதானே அரசாங்கம் எங்களைப் பேச்சுவார்த்தைப் பொறிக்குள்ளை விழுத்தப் பாக்குதெண்டு சொல்லிக்கொண்டு சண்டை பிடிச்சவை இவை.

இவையைமாதிரி இல்லாமல் மனிசரையும் சேர்த்துப் போராட்டம் நடத்திறதெண்டு அவங்கள் சொன்னாங்கள். அதுதான் இவைக்குப் பயம் போலை. மனிசரைப்பற்றி மக்களைப்பற்றிக் கதைச்சால் இவங்களுக்கு என்னெண்டு தெரியேல்லை. பேயைக்கண்டமாதிரிப் பயம். எங்கை சனங்கள் தங்களை மதிக்கிறாக்களுக்குப் பின்னால் போயிடுங்கள் எண்டோ என்னவோ.

சனத்திலை நம்பிக்கை வைக்காமல் ஆயுதத்திலையும் போரிலையும் நம்பிக்கை வைக்கிறாக்கள் பாடு உதுதான். புளொட்காரரும் இதைத்தானே செய்தவங்கள். தீப்பொறிகாரர் 85ஆம் ஆண்டு 'புளொட்'டிலையிருந்து வெளியிலை வந்தபோது இந்தா பிடிச்சுத் தின்னுவம் எண்டெல்லே திரிஞ்சவங்கள். அப்ப ஆப்பிட்டிருந்தால் அவங்கள் பிடிச்சுத் திண்டுதானிருப்பார்கள். இப்ப இவங்கள் தின்னுறாங்கள். இந்த விசயத்தில எல்லாரும் ஒண்டுதான்.

பிடிபட்டாக்கள்ளை நொபேட்டும் ஓராள் எண்டு இப்பதான் கேள்விப்பட்டன். கேள்விப்பட்ட நேரமுதல் ஒரு மாதிரியாயிருக்கு. அந்த நேரமே 'தீர்த்தக் கரை'யிலை மனிசன் நிறைய எழுதியிருக்கு. பிறகு புளொட்டிலை சேர்ந்து அவங்கடை அநியாயத்தைச் சகிக்கேலாமல் வெளியேறிச்சுது. அந்தாளின்ரை 'புதியதோர் உலகம்' நாவல் எல்லா இயக்கத்துக்கும் பொருந்திற ஒண்டுதான். இந்தமாதிரி ஆக்கங்களையும் இயக்கங்களையும் அழிக்கிறது இவங்களுக்குத்தான் ஆபத்து. அது இவங்களுக்கு விளங்கேல்லை. இதுகளைச் செய்துகொண்டு இவை ஒரு அடிகூட முன்னேறேலாது. பாப்பம் எங்கை போகப் போகினம் எண்டு!



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## பண்டிதரும் பாமரனும்

ஒரு ஊரில் ஒரு நற்சிந்தையுள்ள பண்டிதர் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவர் ஒருநாள் ஆற்றங்கரையோரமாக நடந்து செல்கையில் ஒரு இளைஞன் ஆற்றங்கரையருகே இருந்து அழுது கொண்டிருப்பதைக் கண்டார். அவர் அந்த இளைஞனை நெருங்கி ஏன் அழுதுகொண்டிருக்கிறாய்?" என்று கேட்டார். அதற்கு அவனும், ஐயா நானோர் ஏழை. எனக்கென்று எந்தத் தொழிலும் சுயமாகத் தெரியாது. உழைப்பில்லை என்ற வேதனையைவிட என்னுடைய வாழ்க்கை எந்தவிதமான பயனுமின்றி வீணாகிப் போகின்றதே என்ற வேதனைதான் அதிகம். தற்கொலை செய்துகொள்வதும் பாவமென்று வேதங்கள் சொல்கின்றன. அதுதான் என்னசெய்வதென்று தெரியாமல் அழுதுகொண்டிருக்கின்றேன்" என்று பதில் சொன்னான்.

பண்டிதரும் மனமிரங்கி, "என்னிடம் ஒரு படகு இருக்கின்றது. அதை உனக்குத் தந்து எப்படிச் செலுத்துவது என்றும் சொல்லித் தருகிறேன். அதைக்கொண்டு நீ பயனுள்ள வாழ்க்கையை அமைத்துக் கொள்ளலாம். உனது ஜீவனத்திற்கும் கொஞ்சம் வருமானம் வரும்" என்றார்.

அவனுக்கு உறுதிமொழி சொன்னதுபோல் பண்டிதரும் தன்னுடைய படகை அவனுக்கு அளித்தார். ஆனால் அவருக்கிருந்த ஏராளமான வேலைகளில் படகை எப்படி ஓட்டுவது என்பதைச் சொல்லிக் கொடுக்க அவருக்கு நேரம் கிடைக்காமல் போயிற்று. இளைஞனும் படகை இழுத்துக்கொண்டு கரையோரமாக நடந்து செல்வதும் அவனது நண்பர்கள் வந்தால் அவர்களிடம் எப்படி ஓட்டுவது என்று சொல்லித் தரும்படி கேட்பதுமாக இருந்தான்.

ஒருநாள் பண்டிதர் மக்கள் கூட்டமொன்றில் சொற்பொழிவாற்றிக் கொண்டிருந்தார். "சீனாவில் வாழ்ந்த கான்பூஷியஸ் என்ற பேரறிஞர் சொல்லுவார்: பசி என்று பசித்து வந்தவனுக்கு ஒருவேளை உணவைக் கொடுத்து உபசரிப்பதைவிட மீன்பிடிக்கக் கற்றுக் கொடுத்தால் அவன் அந்த உழைப்பைக்கொண்டு வாழ்நாள் பூராவும் சாப்பிடலாம்."

இளைஞன் பண்டிதரை நெருங்கிக் கேலியாக, "ஐயா, கன்பூஷியஸ் தூண்டிலும், தங்கூசியும் கொடுங்களென்று சொல்லாததையிட்டு நான் மிகவும் மகிழ்கிறேன்" என்று சொல்லிவிட்டுப் போனான்.

பண்டிதரும் தன்னுடைய தவற்றை உணர்ந்து அன்று மாலை ஆற்றங்கரைக்குப் போனார். கரையில் படகு நீரில் ஆடிக்கொண்டிருந்தது. அந்த இளைஞனின் உயிரற்ற உடல் படகினுள் ஆடாமலிருந்தது. அவனுடைய கைகளிலிருந்த காகிதத்தில் இருந்த வாசகம், 'பாவிக்கத் தெரியாத படகினால் நான் பயன் பெறவில்லை; அதேபோல் வாழத் தெரியாத வாழ்க்கையால் நான் பயன்படவில்லை...'

*-ஜோதி-*



## உங்கள் நாடு

உங்கள் நாடு மண் வளம் மிக்கது
அதனைப் பாழாக்காதீர்கள்
அதிக உணவு பயிரிடாதீர்கள்
ஏனெனில்
ஏழைகள் தின்று வீணாக்கி விடுவார்கள்

உங்கள் கடல்கள் வளமை மிக்கன
இறாலும் நண்டும் சுவையான மீன்களும்
அந்நியச் செலவாணி தருவன
ஆகவே
அனைத்தையும் ஏற்றுமதி செய்யுங்கள்

உங்கள் கடற்கரைகள் அழகானவை
அவற்றைக் காசாக்கப் பாருங்கள்
எல்லாரும் அங்கே உலாவ அவசியமில்லை
நல்லவற்றைத் தெரிந்து
உல்லாசப் பிரயாணிகட்காய் மறித்து ஒதுக்குங்கள்

உங்கள் கிராமத்து மண்வீடுகள் அழகானவை
அவற்றுக்கு மண்வீதிகளே உகந்தவை
கல்லையுஞ் சீமெந்தையும் வீணாக்காதீர்கள்
நெடுஞ்சாலைகளை அகலமாக்குங்கள்
உல்லாச விடுதிகளையும் களியாட்ட மனைகளையும்
களினோக்களையும் கட்டி எழுப்புங்கள்

உங்கள் நாட்டின் பெண்கள் அழகானவர்கள்
அவர்களது
இளமையும் வாலிபமும் வீணாக விடாதீர்கள்
உல்லாசப் பயணிகள் முன்
அவர்களை உலாவ விடுங்கள்

உங்கள் மலிவான உழைப்பு மகத்தானது
உங்கள் நாட்டின் நாணயத்தை
மதிப்பிறக்கஞ் செய்யுங்கள்
அந்நிய மூலதனம் உள்ளே வருவதற்கு
உங்கள் கதவுகளை அகலத் திறவுங்கள்

உங்கள் நாட்டின் பாதுகாப்பு
எல்லாவற்றிலும் முக்கியமானது
ஆயுதங்களை வாங்கி
அரசபடைகளைப் பலப்படுத்துங்கள்
ஏனெனில்
ஏழைகள் அபாயகரமானவர்கள்

*- மாவலி -*

## அபாய அறிவிப்பு

★ ***அடுத்த நிதி ஆண்டிற்கான செலவினத்தில் வடக்கு - கிழக்கு யுத்தத்திற்கு இரண்டாயிரத்து ஐந்நூறு கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.***

★ ***பெருந்தோட்டத்துறையை பன்னிரண்டு வலயங்களாகப் பிரித்து 12 தனியார் கொம்பனிகளிடம் ஒப்படைக்கப்படும். இவ்வருட முடிவுக்குள் இத் தனியார்மயம் நடைமுறைக்கு வரும்.***



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

*சகாதேவன்*

# ராஜீவிற்குப் பிந்திய தமிழகம்.

ராஜீவ் காந்தியின் கொலை இந்தியாவை மிகவும் மாற்றி விட்டது. ராஜீவ் காந்தியின் தலைமையிலிருந்த இந்திரா காங்கிரஸ் மக்களுக்கு அளித்த தேர்தல் வாக்குறுதிகளைவிட, பி.வி.நரசிம்மராவ் தலைமையிலான இந்திரா காங்கிரஸ் கட்சி அகலத் திறந்துவிட்டுள்ள இந்தியப் பொருளாதாரத்தின் கதவுகள் இன்னமும் நீண்ட காலத்திற்கு அடைக்கப்பட முடியாதவை. பெரும்பான்மை அரசியற் கட்சிகள், வெகுஜனத் தொடர்பு சாதனங்கள் ஆகியவற்றின் ஏகோபித்த ஆதரவும், பாராளுமன்ற இடதுசாரிக் கட்சிகளின் எதிரான முணுமுணுப்பும் நரசிம்மராவ் அரசாங்கத்திற்கு கிடைத்துள்ள வெற்றியே. பிரதான கட்சிகள் குறுகிய காலத்தில் இன்னொரு தேர்தலைச் சந்திப்பதில் பயம் கொண்டு அதைத் தவிர்க்க விரும்புவது இந்திரா காங்கிரசின் அரசு இப்போதைக்குக் கவிழ முடியாது என்பதையே உணர்த்துகிறது.

தமிழகத்தைப் பொறுத்தவரை ஜெயலலிதா 'மேடம்' அடைந்துள்ள மாபெரும் வெற்றி தமிழகத்தை முழுவதும் பொன் விளையும் பூமியாக மாற்றிவிட்டதாக துக்ளக் தவிர்ந்த அனைத்துப் பெரும் பத்திரிகைகளும் எழுதிக்குவிக்கின்றன. கருணாநிதிக்குச் சமாதிகட்டிய தேர்தல் வெற்றியென்று பலரும் துள்ளிக் குதிக்கின்றனர். எம்ஜீஆரே காணாத வெற்றியிதுவென தமிழக சபாநாயகரும் அமைச்சர்களும் ஜெயலலிதாவின் காலில் வீழ்ந்து வணங்குகின்றனர். "ஆஹா! இதுவல்லவோ மக்கள் தொண்டு" என்று 'மேடமும்' அவர்களை ஆசீர்வதிக்கிறார். எம்.ஜி.ஆர் தலைமையிலிருந்த அ.தி.மு.கவிற்கும் ஜெயலலிதா தலைமையிலிருக்கும் அ.தி.மு.க விற்கும் வித்தியாசம் அது பக்தர் கூட்டம், இது அடிமைக் கூட்டம் என 'துக்ளக் சோ' கண்டுபிடித்து எழுதுகிறார்.

ஆனால் ராஜீவின் கொலையும் கொலை சம்பந்தப்பட்ட படங்களும் அளித்த அதிர்ச்சியிலிருந்து தமிழக மக்கள் மீண்டு வருகிறார்கள். அகதிகளாக வந்துள்ள மக்கள் வேறு, புலிகள் வேறு என்பதையுணர்ந்து அகதிகளாயுள்ள மக்களோடு பழகுகிறார்கள். ஆனால் தமிழக அரசோ அகதிகள் அனைவரையும் இலங்கைக்கு அனுப்பியே ஆவது என்று கங்கணங்கட்டிச் செயற்படுகிறது. இதன்மூலம் மட்டுமே தமிழகத்தை அமைதிப் பூங்காவாக்கலாம் என அது சொல்லி வருகிறது. இலங்கை மாணவர்களுக்கு இனி அனுமதி வழங்கவேண்டாம் என்று கல்லூரிகளுக்கு ஆணை பிறப்பித்துள்ளது. தமிழகத்திலாவது சிறிது நிம்மதியாக இருக்கலாமென மனதார நம்பி அங்கிருந்த நடுத்தரவர்க்க ஈழத்தமிழர்கள் திக்கற்று நிற்கிறார்கள். முழுப் பூசனிக்காயை சோற்றுப் பருக்கைகளினுள் மறைக்கலாம் என்பதுபோல் விடுதலைப் போராளிகளாக உருவாகி வளர்வதற்கு முயன்ற ஈழத்தமிழிளைஞர்களைப் பயங்கரவாதச் செயல்களைப் புரிவதற்கும் தயங்காதவர்களாக மாற்றியதில் தங்களுக்கு இருந்த பெரும்பங்கை இந்திய அதிகாரபீடம் மறைக்க முயல்கிறது. ஐம்பெரும் இயக்கங்களுக்கும், பின்னர் அவற்றில் ஏற்படுத்திய உடைவினால் வளர்ந்த சிறு கும்பல்களுக்கும், தனமும் தானியங்கு துப்பாக்கிகளும் பயிற்சியும் இந்திய அரசுக்காக எப்படித் துப்பறிவது என்பதில் பயிற்சியும் வழங்கிய இந்திய மத்திய அரசு, இன்றைக்கு தான் நினைக்கும் விதத்தில், அதாவது தனது நலன்கட்கமையத் தமிழ் மக்களின் போராட்டம் நடைபெறவில்லை, என்பதற்காக அகதிகளாக வந்துள்ள தமிழ் மக்களை கடலிலே தள்ள முயல்வதற்கு தமிழக அரசு ஆதரவு தருவது அதிசயமில்லை.

ஆரம்பம் முதலே தமிழ்மக்களின் விடுதலைக்கு எதிராக எழுதியும் பேசியும் செயற்பட்டும் வரும் 'சோ' போன்றவர்கள் இந்நடவடிக்கைக்கு பகிரங்கமாகவே ஆதரவளித்து அவற்றை நியாயப் படுத்தலும் நடைபெறவே செய்கிறது.

தி.மு.க.விற்கு தேர்தலில் கிடைத்த மரணஅடி, அதை இதுபற்றியெல்லாம் கவனஞ் செலுத்த முடியாதளவுக்குச் செய்துவிட்டது. இந்தத் தேர்தலோடு தி.மு.க.அழிந்து போய்விடும் என்றும் கருணாநிதியின் தலைமை தூக்கியெறியப்பட்டு விடும் எனவும் பலர் தங்களின் மனவிருப்பங்களை ஆரூடங்களாகச் சொன்னார்கள். கழகங்களைப் பொறுத்தவரையில், தி.மு.க.வே கட்டுக்கோப்பான கிளை அமைப்புக் கொண்ட கட்சியாகும். தவிரவும் திராவிடர் கழகத்தின் ஆதரவும் தி.மு.க.விற்கு உண்டு. கருணாநிதிபோன்று தி.மு.க.வை கட்டுக்கோப்பாக வைத்திருக்கக் கூடியவரும் தொண்டர்களிடம் உற்சாகத்தை ஏற்படுத்தக் கூடியவருமான இன்னொருவர் தி.மு.க.வினுள் உருவாகவில்லை. எனவே தி.மு.க. அழிவென்பதோ, கலைஞருக்குப் பதிலாக புதிய தலைமையென்பதோ இப்போதைக்குக் கிடையாது. இம்முறை தேர்தலில் கிடைத்ததைவிடவும் குறைந்த வீதமான வாக்குகளை தி.மு.க. இனிப் பெறப்போவதுமில்லை. இதனையே துறைமுகம், எழும்பூர் சட்டசபைத் தொகுதிகளில் நடந்த உபதேர்தலில் தி.மு.க.வின் வெற்றி உறுதி செய்கிறது.

ஆனால் தி.மு.க. அதிகாரத்திற்கு வருவதென்பது இப்போது எம்.ஜீ.ஆர் காலத்தில் இருந்ததைவிட அதிகமாக தி.மு.க.வின் கைகளில் இல்லை. அது ஜெயலலிதாவின் கைகளில்தான் இருக்கின்றது.

'சோ' போன்ற அரசியல் ஆலோசகர்கள் வழங்கப்போகும் மக்கள் விரோதக் கருத்துக்களை நடைமுறைப்படுத்தும் முறையிலும் அதிகார வெறிபிடித்துத் திரியும் தலைவர்கள் பெறப்போகும் லஞ்சங்களிலும் எம்.ஜி.ஆர். காலத்திலிருந்து அடிதடி அரசியலிற் பழகிப்போன கட்சித் தொண்டர்களின் வன்முறையைக் கட்டவிழ்த்து விடுவதிலும் கைத்தொழில் மற்றும் விவசாயத் துறைகளில் அடையப்போகும் வரும்படியைவிட அதிகமாக சாராயப் பொருளாதாரத்தில் அடைவதிலும்தான் ஜெயலலிதாவின் தோல்வியும் தி.மு.கவின் வெற்றியும் தங்கியிருக்கிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# இலங்கையில் மனிதவுரிமைகளை மீட்க ஒரு பொது வேலைத்திட்டத்துக்காக

(இலங்கையில் ஜனநாயகத்துக்கும் நீதிக்குமான செயற்குழுவின் (CDJ) ஆலோசனை)

## முன்னுரை

இலங்கையில் தொடரும் நெருக்கடியின் பின்னணியில், இலங்கையின் தேசிய இனப் பிரச்சனை தொடர்பாகவும் ஜனநாயகத்தையும் மனித உரிமைகளையும் மீட்டெடுத்தல் பற்றியும் கலந்துரையாடும் நோக்கத்துடன் CDJ 1990 நொவம்பரில் ஒரு கருத்தரங்கை நடத்தியது. நெருக்கடியின் தோற்றத்திற்கும் அதன் தீர்விற்கும் சம்பந்தப்பட்ட முக்கியமான அம்சங்களை அக் கலந்துரையாடல் அடையாளங் காட்டியது. அத்துடன், மனிதாபிமானம், நீதி, ஜனநாயகம் என்ற அடிப்படைகள்மீது, இலங்கையின் மக்களது நலன்பற்றிக் கரிசனையுடைய சகல சக்திகளிடையிலும் அதிகளவு விசாலமான ஒற்றுமையின் தேவையையும் நடைமுறைச் சாத்தியமான குறைந்த பட்ச வேலைத்திட்டம் ஒன்றின்மீது அவர்களிடையே உடன்பாட்டின் அவசியத்தையும் அது உணர்ந்தது. கீழ்வரும் பந்திகளில், நெருக்கடியின் தோற்றுவாய்கள் சுருக்கமாக அடையாளங் காட்டப்படுகின்றன. இலங்கையில் ஜனநாயகம், மனித உரிமைகள், சுதந்திரம், நீதி என்பன பற்றிக் கரிசனையுடைய ஸ்தாபனங்களும் தனிமனிதர்களும் ஒன்றுபட்டுச் செயற்படக்கூடிய ஒரு குறைந்தபட்ச வேலைத்திட்டத்திற்கான ஒரு அடிப்படையாக அமையத்தகுந்த பிரேரணைகளும் முன்வைக்கப்படுகின்றன.

இன்றைய நெருக்கடியின் வித்துக்கள் 1948இல் இலங்கை கொலனி ஆட்சியினின்று சுதந்திரமடையுமுன்னரே விதைக்கப்பட்டு விட்டன என்பது உண்மை. கொலனித்துவ ஆட்சியினின்றும் கடந்தகால நிலமான்ய அமைப்பினின்றும் பெற்ற சமுதாய அநீதிகள் பலவற்றைத் தீர்ப்பதில் அரசியற் கட்சிகள் தவறின. அவற்றின் தோல்வி மிஞ்சியிருந்த அநீதிகட்கும் மேலாகப் புதிய அநீதிகளின் தோற்றத்துக்கும் முன்கண்டிராத அளவிலான வன்முறைக்கும் சமுதாய முரண்பாடுகட்கும் வழியமைத்தது. ஆயினும் தொழிற்சங்க வேலைகள், வெகுஜன ஸ்தாபனங்களை நிறுவல், சுயாதீனமான தேர்தல்கள், தனிமனிதரதும், ஸ்தாபனங்களதும் சமுதாய அரசியற் கருத்துக்களைக் கூறுவதற்கான உரிமை, கலைமூலம் கருத்துக்களைக் கூறல் போன்ற விடயங்களில் முற்போக்குச் சக்திகள் குறிப்பிடத்தக்க சாதனைகளை ஈட்டின. இவை அண்மைக் காலத்தில் பெருமளவும் சிதைக்கப்பட்டுள்ளன. நீதிமுறையில் சுயாதிபத்தியமும், சட்டத்திற்கு வகைசொல்லக் கடமைப்பட்ட பொலிஸும் ராணுவமும் இல்லாது போய் விட்டன. வடக்கிலும் கிழக்கிலும் பிரிவினைப் போராட்டத்தை முறியடிக்கும் சாட்டிலும் தெற்கில் ஜே.வி.பி.யை அடக்கும் சாட்டிலும் நிகழும் அரச வன்முறை முன்னெப்போதிலும் விட அளவிற் பெரியது. இவ்வளவு இருந்தும், மேலை ஜனநாயக நாடுகளிடையே கணிசமான அளவு மதிப்பை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளது. தடக்குண்ட பொருளாதாரத்துக்கும் தடுமாறும் அரசுக்கும் முட்டுக்கொடுத்து ஆதரிக்க அவை ஆயத்தமாயுள்ளன.

ஜனநாயக நெறிகளதும் மனித உரிமைகளதும் மீறல்களையும் சிறுபான்மைத் தேசிய இனங்களதும் உரிமை மறுப்பையும் 1977க்குப் பின்னான யூ.என்.பி. ஆட்சிமீது மட்டுமே சுமத்திவிடமுடியாது. முன்னைய அரசாங்கங்களும் பலதரம் பாரிய தவறுகளைச் செய்துள்ளன. இன்றைய அரசாங்கத்தை எதிர்க்கும் சில அரசியற் கட்சிகளும் குழுக்களும்கூடக் குற்றத்திற் பங்குடையன. எவ்வாறாயினும் 1977 தேர்தலில் ஈட்டிய பெரும் வெற்றியையடுத்து யூ.என்.பி. அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கைகளே ஜனநாயகம், நீதிமுறை, சுதந்திரம் என்பனவற்றின் அழிவிற்குப் பெரும் பங்களித்தன. நாட்டில் இன்னும் தொடரும் வன்முறைக்கு இந்த அரசாங்கத்தினதும் அதன் இராணுவத்தினதும் மிலேச்சத்தனமான அணுகுமுறையே காரணம். ஆயினும் அரசின் ஜனநாயக விரோத, மனிதாபிமானமற்ற, சட்டவிரோத நடவடிக்கைகளை எதிர்ப்போரும், ஜனநாயகத்தை மீட்டெடுக்க முனைவோரும், அரசாங்கத்தை எதிர்ப்போரின் உரிமை மீறல்களைக் கண்டிக்காது இருக்க முடியாது. இவ்வகையான உரிமைமீறல்கள் அரசாங்கத்தை எதிர்ப்போரின் பூரண அல்லது பகுதியான ஆளுமைக்குக் கீழான பிரதேசங்களில் நிகழும்போது நம் விசேஷ கவனத்துக்குரியன. நியாயமானதொரு நோக்கிற்காகப் போராடும் சக்திகளின் வலிமை அவர்களது எண்ணிக்கையில் மட்டுமன்றி அவர்களது நேர்மையிலும் ஒழுக்கநெறியிலும் தங்கியுள்ளது.

## தேசியப் பிரச்சனை.

வடக்கு-கிழக்கில் நிகழும் யுத்தமே, அதன் வன்முறையினதும் மனித அவலத்தினதும் பரிமாணம் காரணமாகப் பலருக்கு முக்கிய பிரச்சனையாகத் தெரிகிறது. நீதியானதும், நிலைக்கக் கூடியதுமான ஒரு தீர்வைக் காண்பதில் அரசாங்கத்தின் தயக்கத்தை, அது இந்திய-இலங்கை உடன்படிக்கையை நடைமுறைப்படுத்தத் தவறியமையும் அமைதியான தீர்வைத் தடுக்கும் முறையில் போராளிகளில் ஒருவருக்கு எதிராக இன்னொருவரைத் தூண்டிவிடுகின்றமையும் நிரூபிக்கின்றன. கடந்த மாதங்களில் வடக்கில் நடந்த குரூரமான குண்டுவீச்சுக்களும், முரட்டுத்தனமான வலிமைகொண்டு தமிழ்மக்களைப் பணியவைக்கும் நோக்கத்தைக் காட்டுவனவாகும்.

தேசிய இனங்களது சுயநிர்ணயவுரிமை மதிக்கப்படாதவரை வடக்கு-கிழக்கில் அமைதியை நிலைநாட்ட முடியாது. இவ்வுரிமை, அப் பிரதேசங்களில் வாழும் முஸ்லிம், சிங்கள மக்கள் தம் அடிப்படை உரிமைகளைப் பேணுவதையும் தமது உரிமைகள் காக்கப்படாவென்று அவர்கள் அஞ்சும் ஒரு பிரதேச ஆட்சியினின்று தம்மை விலக்கிக் கொள்வதையும் உள்ளடக்குகிறது. சுயநிர்ணய உரிமை என்பது பிரிந்து செல்லும் உரிமையை உள்ளடக்குகிறதாயினும், அதை மட்டும் குறிப்பதல்ல. ஒரு தேசிய இனத்தின்மீது ஜனநாயக முறையிலான அதன் ஒப்புதல் இல்லாமற் திணிக்கப்படும் எத்தகைய தீர்வும் அதன் சுயநிர்ணய உரிமையின் மீறலே. மக்களுடைய பொதுக் கருத்தை அறிவதற்கு அவசியமான முன்நிபந்தனை அமைதியை நிலைநாட்டல். எனவே உடனடியாக இல்லாவிடின் விரைவாக யுத்தநிறுத்தம் அவசியம். போரிடுந் தரப்பினர், முக்கியமாக அரசாங்கம், யுத்த நிறுத்தத்திற்கும் முன்நிபந்தனையற்ற ஆக்கபூர்வமான பேச்சுவார்த்தைகளின் தொடக்கத்துக்கு உடன்படுமாறு நெருக்குதலுக்கு உட்படுத்தப்பட வேண்டும்.

போரிடுவோரில் ஒரு பகுதியினர் பூரண ஆயுதபாணிகளாயிருக்கையில் இன்னொரு பகுதியினரை நிராயுதபாணிகளாக்க முனைவது நியாயமற்றதும் ஏற்கத்தகாததுமாகும். தமிழ்மக்களைக் கடுமையாக அடக்கியொடுக்கியதாக அறியப்பட்ட அரசாங்கம் வடக்கிலும் கிழக்கிலும் தனக்கு ஆயுதம் தாங்கியிருப்பதற்கு உரிமையுண்டு என்று வற்புறுத்துவதை அங்குள்ள மிகப் பெரும்பான்மையோர் நிராகரிப்பர். பாரதூரமான அளவுக்கு, தமிழ்த் தேசியவாத சக்திகளால், முஸ்லிம், சிங்கள மக்கள் அச்சுறுத்தப் படுகின்றனர். அவர்களது பாதுகாப்புக்கான தேவை உண்மையாகவே உண்டு. சகல தேசிய இனங்கட்கும் ஏற்புடைய சார்பற்ற அமைதிபேணும் படை, மக்களிடையே பதட்டம் ஏற்படாது தடுப்பதில், அரசாங்கப் படைகளினும் உகந்தது. இந்திய அமைதி காக்கும் படையுடனான அனுபவத்தின் பின், இவ்வாறான அமைதிபேணும் படை ஐ.நா. சபையினது அல்லது தென்னாசியப் பிராந்தியத்தினது பன்னாட்டுப் படையாகவும், இலங்கையினுள் தனக்கான நலன்களை வேண்டாத தொன்றாகவும் பக்கச் சார்பற்றதாகவும் இருப்பது நல்லது.

பேச்சுவார்த்தைகள், சம்பந்தப்பட்ட சகல தரப்பினரையும் உள்ளடக்க வேண்டும். பேச்சு வார்த்தைகள் இரு தரப்பினரிடையிலானதெனின் பங்குபற்றாதவர்கள் பேச்சுவார்த்தைகளின் முடிவுகளை நடைமுறைப் படுத்துவதினின்று ஒதுங்க இடமுண்டு. சில தமிழ்த் தேசியவாத இயக்கங்களூடு இந்தியாவின் நலன்கள் செயற்படுவதால் இந்தியாவும் இப் பேச்சுவார்த்தைகளில் பங்குபற்றுவது அவசியம். இதன்மூலம் பேச்சு வார்த்தைகளின் முடிவுகட்கு இந்தியாவும் கட்டுப்படலாகும்.

மலையகத் தமிழரை நாடுகடத்தும் முயற்சிகள் உடனடியாக நிறுத்தப்படவேண்டும். தேசிய இனப்



www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பிரச்சனையும் ஜனநாயக மனித உரிமைப் பிரச்சனைகளும் திருப்திகரமாகத் தீர்க்கப்பட்டு நாட்டில் அமைதியும் ஜனநாயகமும் மீள நிறுவப்படும்வரை அப்பிரச்சனை ஒத்தி வைக்கப்படவேண்டும். இதன்மூலம் நாட்டின் செல்வத்தின் பெரும்பகுதியை உருவாக்கிய மக்களுக்குத் தாம் வதியும் நாட்டைத் தீர்மானிக்கும் ஒரு நியாயமான வாய்ப்பு வழங்கப்படும்.

## ஜனநாயகத்தை மீள நிறுவுதல்.

1977ம் ஆண்டுப் பொதுத் தேர்தலின் பிறகு எதிர்க் கட்சிகள்மீது வன்முறை கட்டவிழ்த்து விடப்பட்டது. ஒரு மாதம் பின்னர் தமிழர் மீதான வன்முறையின்போது அரசின் போக்கு விஷமத்தனமாக அமைந்தது. இவை சகல அரசியல் எதிரணிகளையும் இல்லாதொழிக்கும் யூ.என்.பி. அரசின் எண்ணத்தைப் புலனாக்கின. செயற்படுத்தும் அதிகாரங்கொண்ட ஜனாதிபத்தியத்தை நிறுவியமையும் முன்னாட் பிரதமரைப் பழிவாங்கியமையும் தொடர்ந்து எதிர்க் கட்சிக் கூட்டங்களில் பிரயோகிக்கப்பட்ட வன்முறையும் 1980ம் ஆண்டின் பொது வேலை நிறுத்தத்தைக் காட்டுமிராண்டித்தனமாக நசுக்கியமையும் முன்கூறிய எண்ணத்தின் பிரகடனங்களே. பயங்கரவாதத் தடைச்சட்டம் வடக்கில் அரசாங்கப் படைகளின் பயங்கரச் செயல்களை மூடி மறைக்கவும் அரச அடக்குமுறையை முழு நாட்டுக்கும் விஸ்தரிக்கவும் பயன்பட்டது. பாராளுமன்றத்தின் ஆயுட்காலத்தை நீடிக்கவும் தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணியினரைப் பாராளுமன்றத்தின் வெளியே தள்ளவும் செய்யப்பட்ட சட்டத்திருத்தங்கள் உட்படத் தொடரான பல அரசியலமைப்புச் சட்டத் திருத்தங்களும், பாராளுமன்ற அரசியல் முறையை நம்பகமற்றதாக்கின. உண்மையான அரசியல் அதிகாரம் ஜனாதிபதியின் கையிலேயே இருக்குமாறு செய்தன.

பொலிஸும் ஆயுதப்படைகளும் ஆளுங்கட்சியின் அங்கங்களாக மாற்றப்பட்டுள்ளன. அரசாங்கத்திற்கு எதிராக நீதிமன்றம் தீர்ப்பு வழங்கும் அபூர்வமான சந்தர்ப்பங்களிற்கூட அரசாங்கம் அத் தீர்ப்பை அசட்டை செய்யுமளவுக்குத் தன் சுயாதீனத்தை இழந்த நீதிமுறை மானமிழந்துள்ளது. எதிர்க்கட்சிச் சார்பான வழக்குரைஞர்கள் மட்டுமன்றி, நீதவான்களும் அரசின் முழு அங்கீகாரம் பெற்றவர்களால் மிரட்டப்படுகின்றனர்.

ஒரு காலத்தில் பிற தென்னாசிய நாடுகளனைத்துமே பொறாமைப்படுமளவிற்குச் சுதந்திர உணர்வுடையதாக இருந்த இலங்கைத் தொழிற் சங்க இயக்கம் இன்று கிட்டத்தட்ட அழிக்கப்பட்டு விட்டது. சமூக நீதிக்காக உழைக்கும் வெகுஜன ஸ்தாபனங்கள், அரசின் துர்நடத்தைகள் பற்றிப் பொதுமக்களை எச்சரிக்கும் வாய்ப்புண்டு என்று கருதப்படும் பட்சத்தில், தொடர்ச்சியான மிரட்டல்களுக்கு ஆளாகின்றன. வெகுஜன தொடர்பு ஸ்தாபனங்களான தினசரிகளும் வானொலி, தொலைக்காட்சி என்பனவும் பெருமளவில் அரசின் நேரடியான அல்லது மறைமுகமான கட்டுப்பாட்டினுள் உள்ளன. அரசின் கட்டுப்பாட்டுக்குள் இல்லாத சிறு பகுதியும் அரசாங்கத்தின் கடுமையான நெருக்கலுக்குள்ளாவதால், எப்போதுமே ஏதோ வகையிலான அரசியற் தணிக்கைமுறை நடைமுறையில் இருந்து வருகிறது.

இலங்கையில் ஜனநாயகத்தை மீட்டெடுப்பது வெறுமனே 1977க்கு முன்னிருந்த பாராளுமன்ற ஆட்சிமுறைக்கு மீள்வதாக இருக்கவியலாது. சர்வாதிகார ஆட்சி திரும்பவும் ஏற்படாதவாறு சமுதாயத்தைப் பாதுகாக்கவல்ல ஜனநாயக அமைப்புகளை விருத்திசெய்வது அவசியமாகிறது. எனவே அரச அதிகாரத்தைப் பரவலாக்கல், அதன் பூரணமான அர்த்தத்தில் செயற்படுத்தப் படவேண்டும். இது ஒரு பெரும்பணி. இதற்குப் பிரதான முட்டுக்கட்டையாக இருப்பது ஜனநாயகத்தை எந்த வழியிலும் மீட்டெடாதவாறு வழிமறிக்கும் இன்றைய ஜனாதிபதி முறையாகும். செயற்படுத்தும் அதிகாரமுடைய ஜனாதிபதி முறையை ஒழித்து அதிகாரங்கள் பரவலாக்கப்பட்ட ஜனநாயக முறையின் அங்கங்களை உருவாக்கும் குறுகிய இடைக்காலத்தின் முதற்பணி ஜனாதிபதியின் அதிகாரங்களைக் மட்டுப்படுத்துவதாகும். சர்வாதிகார யூ.என்.பி. ஆட்சியின் பிடியை இறுக்கும் எண்ணத்துடன் 1977க்குப்பின் நிறைவேற்றப்பட்ட சகல அநீதியான சட்டங்களும் சட்டத்திருத்தங்களும் தாமதமின்றி அகற்றப்படவேண்டும்.

அரசின் குறுக்கீடோ கட்டுப்பாடோ இல்லாது தொழிற்சங்கங்கள் செயற்படும் உரிமையும் தொழிற்சங்க நடவடிக்கைகளுக்கான உரிமையும் மீள நிறுவப்படவேண்டும். தொழிற்சங்கங்கள் தமது அலுவலர்களை வெளியார் தலையீடும் தொந்தரவுமின்றித் தெரிவு செய்யவும் இயலுமாக்க வேண்டும். மாதர் உரிமைகட்காகவும் குழந்தைகளதும் வசதி குறைந்த சமுதாயப் பிரிவினரதும் உரிமைகட்காகவும் போராடும் பொதுஜன அமைப்புகள் சுயாதீனமாகச் செயற்பட அனுமதிக்கப்படவேண்டும். அவற்றுக்கு அரசின் தலையீடற்ற சட்டரீதியான பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும். சமுதாய நீதிக்கும் மனித உரிமைகட்குமான ஸ்தாபனங்களாகவும் அரசியற் கட்சிகளாகவும் குழுக்களாகவும் அமையவும் இயங்கவும் தனிமனிதருக்குள்ள உரிமை மதிக்கப்பட வேண்டும். பேச்சுரிமை, எழுத்துரிமை, கூட்டங்கூடும் உரிமை என்பன சட்டத்தாற் பாதுகாக்கப் படவேண்டும்.



## மனித உரிமை மீறல்களுக்கு ஆளானோர்.

யூ.என்.பி ஆட்சியின் கீழ் தமிழர் விரோத வன்முறையாலும், வடக்கிலும் கிழக்கிலும் இராணுவ நடவடிக்கையாலும் மரித்தோரது எண்ணிக்கையின் குறைந்தபட்ச மதிப்பீடு பத்தாயிரக்கணக்கானது. இத் தொகையுடன் தமிழ்த் தேசிய இயக்கங்களிடையே போட்டி காரணமான மோதல்களாலும் தெரிந்தெடுக்கப்பட்ட தனிமனிதர் மீது இயக்கங்களின் தாக்குதலாலும் மரித்தோர் தொகையும் சேர்க்கப்பட வேண்டும். தெற்கில் இறந்தோரின் எண்ணிக்கை இலட்சக் கணக்கைச் சாரும். இவர்களுட் கணிசமான தொகையினர் அரசின் எதிர்ப்பாளராற் கொல்லப்பட்டோரேயெனினும் பெரும்பான்மையான கொலைகட்கு அரசே பொறுப்பாளி எனத் தெரிகிறது.

இலங்கையில் உள்ள நெருக்கடியும் அதை இலங்கை அரசாங்கம் கையாளும் முறையும் இத் தீவின் வரலாறு கண்டிராதளவு பெரிய தமிழ் அகதிப் பிரச்சனையை உருவாக்கியுள்ளது. அகதிகளை ஆயுதப் படையினர் நடத்தும் விதமும் அகதி முகாம்களிலிருந்து வெளியேறுமாறு விடுதலைப் புலிகள் கொடுக்கும் நெருக்கடியும் இப் பிரச்சனையை மேலும் மோசமாக்குகின்றன. இலங்கையிலும் தென்னிந்தியாவிலும் உள்ள அகதிகள் மிகக் கேவலமான நிலைமைகளின் கீழ் வாழுகின்றனர். ஆயுதப் படைகளினால் தம் வீடுகளிலிருந்து விரட்டப்பட்டோர் தம் நண்பர்கள் அல்லது உறவினர்களுடன் நாட்டின் வேறு பகுதிகளில் வாழும் நிர்ப்பந்தத்திற்கு உள்ளாகியுள்ளனர். வடக்கிலும் கிழக்கிலும் உள்ள சிங்கள, முஸ்லிம் அகதிகளின் நிலைமை எவ்வகையிலும் இதிலும் மேலானதில்லை. அவர்களது நிர்க்கதியான நிலையை வைத்து அரசியல் ஆதாயம் தேடும் அரசாங்க முயற்சிகள் அகதிகளுக்கோ பிரச்சனையின் தீர்வுக்கோ எவ்வகையிலும் உதவமாட்டா. இப் பிரச்சனை, முஸ்லிம்களை வடக்கினின்று அகற்றுவது என்று விடுதலைப் புலிகள் எடுத்த ஈவிரக்கமற்ற முடிவால் மேலும் சிக்கலாகி உள்ளது. வடக்கில் வாழும் தமிழாது வேண்டுகோள்களையும் மீறி ஆயிரக்கணக்கான முஸ்லிம்களது உடைமைகள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

பறிக்கப்பட்டு அவர்கள் வடக்கிற் தாம் வாழும் பிரதேசங்களிலிருந்து தூரத்தப்பட்டுள்ளனர். அகதி என்ற நிலை தவிர்க்கமுடியாத விதமாக உடைமைகளின் இழப்புடனும் பிழைக்கும் வழியில்லாமையுடனுஞ் சேர்ந்தே ஏற்படுகிறது. இந்த நிலையின் நீடிப்பு அகதிகள் வழமையான வாழ்க்கைக்கு மீள்வதை மேலுங் கடினமாக்குகிறது.

மேற்கு ஐரோப்பிய நாடுகளிலும் வட அமெரிக்காவிலும் வாழும் இலங்கை அகதிகள் அனைவரும் தமிழரல்லர். இவர்களது நிலை மற்றோர் கண்டு அசூயைப்படும் அளவில் இல்லை. புகுந்த சமுதாயத்துடன் சங்கமிக்க இயலாமற் கலாசார வேறுபாடுகளாலும் இந் நாடுகளில் நிலவும் மனத்தடைகளாலும் தடுக்கப்படுகின்றனர். இவர்களது வரவை விரும்பாத நாடுகளில் இவர்கள் அவமானப் படுத்தப்பட்டுத் தனிமைப்படவும் நேருகிறது.

சண்டையில் இறந்தோரைவிடப் பிறர் பலர் போருக்குப் பலியாகியுள்ளனர். மரித்தோரின் ஆதரவிலிருந்தோரும் குடும்பத்தினரும் வழமையான வாழ்வுக்கு மீளத், தேற்றுதலும் ஆதரவும் தேவை. நேசித்த ஒருவரின் இறப்பால் ஏற்பட்ட கசப்புணர்வு எளிதில் அகற்றவியலாதது. அக்கறையுள்ள ஒரு சமுதாயங் காட்டும் பரிவு சில மனப்புண்களை ஆற்ற உதவும். பொருள் சம்பாதித்த ஒருவரை அல்லது சம்பாதிக்கக் கூடிய ஒருவரை இழந்த பல குடும்பங்களுக்கு அவர்களாற் தாங்கக்கூடிய ஒரு வாழ்க்கையையாவது அமைத்துத் தருமளவுக்கு நட்ட ஈடாகப் பொருளுதவி அவசியம். போரால் முற்றாகவோ அல்லது பகுதியாகவோ செயலற்றுப் போகுமளவிற்கு அங்கவீனமானோருக்கு நட்டஈடு வழங்கப்படவேண்டும்.

அகதிகளைத் தம் வீடுகளில் மீண்டும் குடியமர்த்தப் போரிற் சிதைவுண்ட வீடுகளும் பிற உடைமைகளும் திருத்தப்பட வேண்டும். உழைப்பு இல்லாமற் போனமைக்கு நட்ட ஈடும் புனர்வாழ்வுக்கு உதவியும் பயனுள்ள தொழிலும் தரப்பட வேண்டும். களவாடப்பட்ட பொருட்களும் பறிக்கப்பட்ட பொருட்களும் சட்டரீதியான உடைமையாளர்களுக்குத் திருப்பித் தரப்பட வேண்டும். பழுதானவை திருத்தப்பட்டு, பழுதுபார்த்தல் இயலாதவிடத்து, நியாயமான நட்டஈடு வழங்கப்பட வேண்டும். இவ்விடத்து, இழப்புக்குக் காரணம் அரசாங்கமோ இந்திய அமைதிகாக்கும் படையோ போராளிகளோ என்ற பாகுபாடு காட்டப்படக்கூடாது.

காயங்களை ஏற்படுத்தியோர் அதிகாரத்திலிருக்கக் காணப்படும்வரை பாதிக்கப்பட்டவரின் மனதில் நம்பிக்கையை ஏற்படுத்த முடியாது. மனித உரிமை மீறல்கள் பற்றிய சட்டரீதியான விசாரணைகள் நடத்தப்பட்டுக் குற்றவாளிகளாகக் காணப்பட்டோர் தண்டிக்கப்பட்டுப் பதவி நீக்கப்பட வேண்டும். குற்றவாளிகள் அரசாங்கத்தின் பிரதிநிதிகளாக எம்மட்டத்திலும் செயற்படாது தடுக்கப்படவேண்டும். பொதுமக்களைக் கொல்லல் கொலைக் குற்றமாயும் சட்டத்துக்குப் புறம்பாக உடைமைகளைப் பறித்தல் திருட்டாகவும் கொள்ளப்பட வேண்டும்.

அரசியற் கைதிகள் உட்படக் குற்றச்சாட்டேதுமின்றி மறியலில் உள்ள சகலரும் வழக்கு விசாரணைக்கு உட்படாதவிடத்துத் தாமதமின்றி விடுதலை செய்யப்பட வேண்டும். குற்றச்சாட்டின்றி மறியலில் வைக்கப் படுவோருக்கு மறியற்கால ஊதிய இழப்புக்கான நட்டஈடு வழங்கப்பட வேண்டும். தண்டனைக்குரிய குற்றச்சாட்டுக்கு உட்பட்டோர் நீதியானதும், முறையானதுமான வழக்கு விசாரணைக்கு உட்படவேண்டும். குற்றஞ் சாட்டப்பட்டோர் சட்டரீதியான உரிமைகளுக்கும் வழக்குத் தொடர்பான சட்ட உதவிக்கும் உரித்தானோராக வேண்டும். குற்றச்சாட்டேதுமின்றி நீண்டகால மறியலில் வைத்தல் சட்டவிரோதமாகவும் தண்டனைக்குரியதாகவும் கருதப்பட வேண்டும். மறியலில் உள்ளோரோ இல்லாதாரோ எவ்வகையான வதைக்கோ பாலியற் துர்ச்செயலுக்கோ வேறெந்த வகையான கொடுமையானதும் கீழ்மைப் படுத்துவதுமான செயலுக்கோ ஆட்படுத்தப் படலாகாது. மறியலாலும் கொடுமையான முறையில் நடத்தப்பட்டமையாலும் பாதிக்கப்பட்ட நபர்களின் புனர்வாழ்வுக்கு அரசாங்கம் விசேட நிதியொதுக்க வேண்டும்.

## குறைந்தபட்ச வேலைத் திட்டம்.

ஜனநாயகத்தையும் மனிதவுரிமைகளையும் நீதியையும் நிறுவும் ஒரு பிரசார இயக்கம் அரசியலுக்கு அப்பாற் பட்டதெனப் பாசாங்கு செய்யவியலாது. பிரச்சனையின் தோற்றுவாய் அரசியல் சார்ந்ததெனின் தீர்வும் அரசியல் சார்ந்தே அமையும். ஆயினும் அப் பிரசார இயக்கம் குறிப்பானதொரு அரசியற் கட்சிக்கோ பிரிவிற்கோ அரசியற் சித்தாந்தத்திற்கோ உதவும் நோக்குடன் அமையக்கூடாது. நாட்டை உடனடியாக எதிர்நோக்கும் பிரச்சனைகள் துரிதமான குறுகியகாலத் தீர்வுகளை வேண்டுகின்றன. இத்தீர்வுகளைப்பற்றி நாட்டின் சகல ஜனநாயக சக்திகள் மத்தியிலும் உடன்பாடு காணமுடியும். இவற்றுக்கு வெகுஜனங்களது ஏகோபித்த ஆதரவும் இருக்கும். எனவே, இலங்கையின் நெருக்கடிக்கு நியாயமான ஒரு தீர்வை மனதார விரும்புவோர் அந்த இலட்சியத்துக்கான ஒரு ஐக்கியமான போராட்டத்துக்கு உடன்பட இயலும். எந்தவொரு அரசியற் கட்சியோ பிரிவோ தான் தனித்து நின்று போராடி யூ.என்.பி அரசாங்கத்தை முறியடிக்க முடியுமென நினைத்தால் அது ஒரு பேரதிர்ச்சிக்கு ஆயத்தமாக இருக்க வேண்டும். தனது கட்சியினதோ குழுவினதோ நலன்களைப் பேண மற்றவர்களை உபயோகிக்கும் ஒரு சாதனமாக ஐக்கிய முன்னணியைப் பயன்படுத்த முனைவோர், ஐக்கியத்தைக் குலைத்து, நோக்கத்துக்குத் துரோகமும் செய்வோராவார். ஐக்கியமான போராட்டமும் குறைந்தபட்ச வேலைத்திட்டமும் எந்த வகையிலும் சந்தர்ப்பவாத நோக்குடன் அமைதலாகாது. அவை தெளிவான நெறிகளின் அடிப்படையில் அமையவேண்டுமேயன்றி ஏமாற்றுக்கு இடமிருக்கலாகாது. இத்தகையதொரு கூட்டுச்சக்தியின் நற்பணி அடக்குமுறை ஆட்சியின் வீழ்ச்சியுடன் நின்றுவிட முடியாது. ஜனநாயகத்திற்கும் சமுதாய நீதிக்குமான அமைப்புக்கள் ஸ்தாபிக்கப்பட்ட பின்பும் அது தொடரவேண்டும்.

ஜனநாயகத்தின் பிரச்சனைகளைத் தேசிய இனப் பிரச்சனையினின்று பிரிந்து நோக்க முனைவோர் இரண்டில் ஒன்றுக்கும் உதவமாட்டார்கள். குறுகிய தேசியவாதமும் தேசிய வெறியும் ஜனநாயக உணர்வுக்கு எதிராக இயங்குவன. ஒரு தேசத்தின் சுயநிர்ணய உரிமையை மறுக்கும் ஜனநாயகம் பசப்பானது. ஒரு ஐக்கிய முன்னணிக்குள் முக்கியமான அரசியற் பிரச்சனைகட்கான குறிப்பான தீர்வுகள் பற்றிக் கருத்துவேறுபாடுகள் அனுமதிக்கத் தக்கனவேயாயினும் அடிப்படை நெறிகளின் மீறல் அனுமதிக்கத் தகாதது. எவ்வகையான குறுகிய தேசியவாதத்திற்கும் தேசிய வெறிக்கும் தலை வணங்குவோர் ஈற்றில் சர்வாதிகார யூ.என்.பி. ஆட்சியின் நலன்களையே பேணுவோராவார்.

## பிரசார இயக்கம்

ஒரு இயக்கமோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட இயக்கங்களோ பிந்துபட்டதொரு ஐக்கிய முன்னணியைப் பற்றிய திட்டத்தை முன்வைத்து அதை நிறுவுவதற்கு உழைப்பது ஏற்கக்கூடியதே. எவ்வளவு பெரிய இயக்கமாக இருந்தாலும் தன்னுடன் ஐக்கியப்பட விழையும் மற்ற இயக்கங்கள்மீது தன் எண்ணத்தைத் திணிக்க முயல்வது தவறானது. ஆரம்ப நிலைகளில் முக்கியமானது ஏதெனில், ஐக்கியப்பட வேண்டிய பிரச்சனைகளையும் ஐக்கியப்படக்கூடிய பிரச்சனைகளையும் அடையாளங் காண்பதாகும். ஒடுக்கும் சிலருக்கெதிராக ஜனநாயகவாதிகளான பெரும்பான்மையினரை ஐக்கியப்படுத்தக்கூடிய ஒரு குறைந்தபட்ச வேலைத்திட்டத்தை அதிற் பங்குபற்றக்கூடியோர் தம்மிடையே பேச்சுவார்த்தைகள் மூலம் விருத்தி செய்யவேண்டும்.

இறுதிப் போராட்டம் இலங்கை மண்ணில் நிகழும் என்பதை வேலைத்திட்டம் கணிப்பிற் கொள்ள வேண்டும். ஈவிரக்கமற்ற அரசாங்கத்திற்கும் அதன் நேசசக்திகட்கு மெதிரான வன்முறைப் போராட்டம் சாத்தியமென்பதையும் அது கருத்திற் கொள்ளவேண்டும். இலங்கையுள் அரசாங்கத்துக்கு முகங்கொடுக்க வல்ல ஒரு காத்திரமான எதிரணியைக் கட்டியெழுப்புவதற்கான வாய்ப்புக்கள் உடனடியான சூழலில் எத்தகையன எனவும் அது உணரவேண்டும். எந்த ஜனநாயக எதிரணியையும் குழிபறித்துப் பிளவுபடுத்திக் கொடூரமாக நசுக்குவதற்குத் தனக்குள்ள வலிமையை அரசாங்கம் சந்தேகத்துக்கிடமின்றி நிரூபித்துள்ளது. யூ.என்.பி. ஆட்சிக்கு ஒரு உண்மையான மிரட்டலாகத் தெரியாத அளவுக்கு மட்டுமே மாற்றுக் கருத்துக்கள் சகித்துக் கொள்ளப்படுகின்றன. அரசின் பலவீனம் சர்வதேச அரங்கிலேயே உள்ளது. ஏனெனிற் தடுமாறும் பொருளாதாரத்துக்கு முட்டுக்கொடுக்க அதற்கு அந்நிய உதவி தேவைப்படுகிறது.

இலங்கை அரசாங்கம் ஜனநாயக முறைக்குக் குழிபறித்து மனித உரிமைகளை மீறியதை அம்பலமாக்குவதில் ஜனநாயக, மனிதஉரிமை இயக்கங்கள் வெற்றி கண்டுள்ளன. ஆயினும் இவை தமக்குக் கிடைக்கக்கூடிய வசதிகளை முழுமையாகப் பயன் படுத்துவதற்கு இயலாதனவாகவே இருந்துள்ளன. இத்தகைய இயக்கங்களிடையே ஐக்கியமும் குறைந்தபட்ச வேலைத்திட்டமொன்றின் அடிப்படையிலான ஒத்துழைப்பும், பொது நோக்குடைய காரியங்களில் இணைவான செயற்பாடும், ஒவ்வொரு இயக்கத்தினதும் சாதனைகளை வலிமைப்படுத்தும்; சர்வதேச அரங்கில் யூ.என்.பி ஆட்சிக்கு எதிரான பலம் மிகுந்த ஒரு சக்தியை உருவாக்கும்;



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்
www.tamilarangam.net

www.tamilarangam.net



இலங்கையினுள் ஜனநாயக, முற்போக்கு, தேசபக்த சக்திகட்கு உற்சாகமூட்டும்.

ஒரு ஆரம்ப நடவடிக்கையாக, அயல்நாடுகளில் இலங்கையில் ஜனநாயகத்துக்கும் மனிதவுரிமைகட்குமாகச் செயற்படும் ஸ்தாபனங்களிடையே ஒத்துழைப்பு அதிகப்படுத்தப்பட வேண்டும். அவை, தமக்குள்ள வசதிகள் அதிகபட்ச பயன்தரக்கூடிய விதமாகத், தம் முயற்சிகளை இணைவுபடுத்த வேண்டும். இதனைத் தொடர்ந்து, குறைந்தபட்ச வேலைத்திட்டமொன்றைத் தயாரித்தற்குரிய ஒரு பொது அடிப்படையை அடையாளங் காணும் நோக்குடனும் இப்போதைய மனிதவுரிமைப் பிரசார இயக்கங்கள் அனைத்தையும் நன்கு இணைக்கப்பட்ட ஒரு ஐக்கிய முயற்சியாக விரித்து விஸ்தரிக்கும் முனைப்புடனும் ஸ்தாபனங்களிடையே பேச்சுவார்த்தைகளும் கலந்துரையாடல்களும் நடத்தப் படவேண்டும்.

## சாத்தியப்பாடுகள்

யூ.என்.பி. அரசாங்கத்தின் மூர்க்கத்தனத்தை அம்பலப்படுத்துவதில் இலங்கையில் மனித உரிமைக்காக மேற்கில் பிரசாரஞ் செய்யும் ஸதாபனங்களின் வெற்றி, யூ.என்.பி. அரசாங்கம் தன் நிலைப்புக்கு நம்பியிருக்கும் நாடுகளிடமிருந்து நிபந்தனையற்ற உதவியைப் பெறுவதை மிகவும் கடினமாக்கியுள்ளது. இன்று இலங்கைக்கு உதவும் நாடுகள், ஐயமின்றி, இலங்கையில் ஒரு வலதுசாரி அரசாங்கத்தை விரும்பினாலும், யூ.என்.பி. ஆட்சியில் மனிதவுரிமை மீறல்கள் அவற்றுக்குச் சங்கடத்தை ஏற்படுத்துகின்றன. இலங்கை அரசாங்கத்தின் போக்கில் ஒரு மாற்றத்தின் சாடையைக் கண்டாலுங்கூட, நிறுத்தி வைக்கப்பட்ட உதவியை மீண்டும் வழங்க அவை ஆயத்தமாக உள்ளன.

இலங்கை அரசாங்கம் உள்நாட்டில் தன் நடத்தையை மாற்றாது தன்னைப்பற்றி அயல்நாடுகளிலுள்ள அபிப்பிராயத்தை மாற்றக் கடுமையாக உழைக்கிறது. 1983 வன்முறையாலும் முக்கியமாக அரசாங்கத்தின் நடத்தையாலும் இலங்கை பற்றிய அபிப்பிராயம் கெட்டுப் போனது. உல்லாசப் பிரயாணத் துறை அந்த அதிர்ச்சியினின்று இன்னும் மீளவில்லை. ஆயினும் அதற்குப் புத்துயிரூட்ட முயற்சிகள் நடைபெறுகின்றன. உல்லாசப் பிரயாணத்தைப் பகிஷ்கரிக்கும் இயக்கம் மனதிற் கொள்ளத் தகுந்த ஒரு விஷயம். வர்த்தகப் பகிஷ்கரிப்பு எதிர்காலத்துக்குரிய ஒன்று. மத்திய கிழக்கின் நெருக்கடி, அரசாங்கத்தின் நிதிப்பிரச்சனைகளை அதிகமாக்குகிறது. அயல் உதவிமீதும் உழைப்பின்மீதும் செறிவானதொரு தாக்குதல் அரசாங்கத்தின் யுத்த முயற்சியைக் கடுமையாகப் பாதிக்க இடமுண்டு.

இப் பிரசார இயக்கம் தனியே தமிழர் தேசியப் போராட்டம் தொடர்பானதாகவோ அல்லது ஜே.வி.பி.யின் போராட்டம் தொடர்பானதாகவோ காணப்படும் வரைக்கும் அரசாங்கத்தால் அதன் எதிராளிகளைப் பிளவுபடுத்த முடியும். மனித உரிமைகளையும் ஜனநாயகத்தையும் சமுதாய நீதியையும் நசுக்குவதற்கு எதிரான ஒன்றாக அது அடையாளங்காணப்படுமாயின் அது பெருவாரியானோரை ஐக்கியப்படுத்த வல்லதாக இருக்கும். மனிதவுரிமை தொடர்பான ஸ்தாபனங்கள், 1960களில் அமெரிக்காவின் வியற்னாம் யுத்தத்திற் கெதிரான ஸ்தாபனங்கள் செய்ததுபோல, ஒன்றுபட்டுச் செயற்படுவதன்மூலமே இதைச் சாதிக்கமுடியும். இன்றைய இயக்கம் அன்றையதினும் சிறிது சிக்கலானதாகவே அமையக்கூடும். ஏனெனில் உள்நாட்டுப் பிரச்சனைகளும் இதில் உள்ளடங்குவன. ஆயினும் பொதுவேலைத் திட்டமொன்றிற்கான அடிப்படை உள்ளது. அது வீணாக்கப்படக் கூடாதது.

இங்கு பிரேரிக்கப்பட்டுள்ள பிரசார இயக்கம் உலகமக்கள் நடுவே தலையுயர்த்தி நிற்குமாறு, ஒரு பெருமிதமான சனத்தின் தன்மானத்தை மீள நிலைநிறுத்தும் ஒரு பெரும் இலட்சியத்தை நோக்கிய ஒரு சிறு காலடியே. எந்தப் பிரசார இயக்கமும் வெல்லும் என்பதற்கு உத்தரவாதம் இல்லை. முயற்சி செய்யத் தவறுதல் ஒடுக்கலுக்கு உடன்படுவதற்கு அதிகம் சளைத்ததல்ல.

## பத்திரிகைச் சுதந்திரம்
### (றுப்பேட் மேடொக் வகையிலானது)

பிரிட்டிஷ் பத்திரிகைகளைச் சாக்கடைக்குக் கொண்டுசென்ற பெருமை மேடொக்கின் பத்திரிகை நிறுவனமான 'நியூஸ் இன்டர்நேஷனல்'க்கு உரியது. அவர்கள் டைம்ஸ் பத்திரிகையை விலைக்கு வாங்கியபின் அதன் தாமும் கீழிறங்கியது. 1980களின் நடுப்பகுதியில் அவர்கள் தமது தொழிலாளர்களை நடத்திய விதம் பத்திரிகை வரலாற்றிலேயே மிகவும் வெட்கக்கேடானது. ஆயினும் இன்னமும் அவர்கள் வெளியிடும் 'சன்' பிரிட்டனில் அதிக விற்பனையுள்ள ஏடாக உள்ளது. தனி மனிதர்கள்பற்றிய அவதூறுகளில் 'சன்' முன் நிற்கிறது. அதிலும் இடதுசாரி, தொழிற்கட்சி முக்கியஸ்தர்கள் பற்றிய விஷமத்தனமான செய்தித் திரிப்புகளிலும் 'சன்' தலைமை வகிக்கிறது. பத்திரிகை விற்பனையை ஊக்குவிப்பதற்காக நாள் தவறாது பெண்களின் நிர்வாணப் படங்களைப் பிரசுரிக்கும் 'சன்' இனத்துவேஷத்தைத் தூண்டிவிடும் விதமாகவும் செய்திகளைத் திரிக்கிறது. கம்டன் கவுன்சில் (வட லண்டன் உள்ளூராட்சி மன்றம்) வீடுகளை ஒதுக்கும் விதம்பற்றி 'சன்' ஜூன் 1991இல் பிரசுரித்த பொய்களில் பதத்துக்கு ஒரிரண்டு பருக்கைகள்:

அப்துல் காதிர் எனும் பங்ளாதேஷியும் குடும்பத்தினரும் பிரிட்டனுக்கு வந்து மூன்றே மாதத்தில் வாடகையின்றி 3,50,000 பவுண் பெறுமதியான வீட்டில் குடியமர்த்தப் பட்டனர் என்பது 'சன்' எழுதிய 'செய்தி'.

உண்மை என்னவெனில் 1972 முதலே அப்துல் காதிருக்கு பிரிட்டிஷ் கடவுச் சீட்டு இருக்கிறது. நான்கு வருடமாக கம்டன் பகுதியில் அவர் வாழ்ந்து வருகிறார். இவ்வளவு வாடகை கூடிய வீட்டில் அவரது குடும்பம் குடியமர்த்தப்படக் காரணம் புதிய கவுன்சில் வீடுகளைக் கட்ட அரசாங்கம் தடையாக இருக்கின்றமையே.

அப்துல் காதிருடைய கதையோடு சேர்த்து, தன் பத்துப்பிள்ளைகளுடன் வாழும் திருமதி மக்கார்த்தி என்ற ஐரிஷ் பெண்ணுடைய வீட்டைப் பற்றியும் 'சன்' தாக்கி எழுதியிருந்தது.

இவற்றின் விளைவாக, அப்துல் காதிரின் பிள்ளைகள் செய்தி பிரசுரமான சில நாட்களுக்குள் தெருவில் வைத்துத் தாக்கப்பட்டனர். அப்துல் காதிருக்கு மிரட்டற் கடிதங்கள் வந்தன. கவுன்ஸிலுக்கும் அவர் பற்றி நூற்றுக்கதிகமான மிரட்டல்கள் தொலைபேசி மூலம் வந்தன. அவரது குடும்பம் இன்று அச்சத்துடன் வாழ்கிறது. துன்புறுத்தல் காரணமாக திருமதி மக்கார்த்தி விட்டுப் பிரிந்த குடிகாரக் கணவன் அவரது இருப்பிடத்தை அறியவும் நேர்ந்தது.

இருவர் விஷயத்திலும் பத்திரிகையாளர்கள் பொய் சொல்லியே வீடுகட்குள் சென்று தகவல் சேகரித்தனர். கவுன்சில் 'சன்' மீது வழக்குத் தொடரவுள்ளது. ஆயினும் 'சன்' வாயை யார் மூடுவது? இவ்வாறான இனவாதக் கொடுமைகள் பத்திரிகைச் சுதந்திரத்தின் பேரால் நடக்க அனுமதிக்கப்படலாமா?

– தகவல்: ஒப்சேவர் (லண்டன்) 1991 ஜூலை 7 –



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மூன்று பாடல்கள்

*இளவாலை விஜயேந்திரன்.*

1.

மீன் பாடும் வாவியிலே
மீனவரின் தோணியிலே
நானிருந்தேன் ஒருநாள் - நிலவு
நாணிவரும் திருநாள்

அலையடிப்பில் படகிலொரு
தாளம் கேட்கும் - ஊர்
வயற்பரப்பில் இரவினிலும்
பாடல் கேட்கும்
மனதின் சுமை தண்ணீரில் கரைந்துபோகும்
நிலவினெழில் நெஞ்சினிலே கோலம் போடும் (மீன் பாடும்)

மனம் இனிக்க மீனினத்தின்
பாடல் கேட்கும் - இசை
லயத்தினிலே விழிமடல்கள்
ஈரம்போடும்
விடிகையிலோ வீதியிலே சலங்கை கேட்கும்
வேதனையை என்நெஞ்சு மறந்துபோகும் (மீன் பாடும்)

2.

வட்டமாய்ச் சதுரமாய் மேசைகள் போடுவர்
வாழ்வின் துயரங்கள் ஏதும் அறிந்திடார்
திட்டங்கள் திருப்பங்கள் என்பதாய்ச் செப்புவார்
துயரமும் மரணமும் ஒன்றும் தெரிந்திடார்

பொட்டலம் போடுவார் பொதிகள் இறக்குவார்
போராட்ட நோக்கின் புனிதம் கெடுப்பார்
திட்டுவார் ஹிந்தியில் திரிவார் துவக்கொடு
தெற்கிலே கேந்திரம் பிடிக்க முயல்வார் (வட்டமாய்)

அட்டையாய் எம்மில் ஒட்டுகிற இந்த
அரக்கர் குலத்தைத் தூக்கியெறிவோம்
கட்டுவோம் ஒன்றுபட்டெங்கள் சமூகத்தை
காலம் நமக்கென்று கும்மியடிப்போம் (வட்டமாய்)

3

பனியுதிரும் குளிர்தழுவும் தேசம் - எனினும்
மனதினிலே புயலொன்று வீசும்
இலையுதிரும் காற்றடிக்கும் தேசம் - எங்கள்
இதயங்களோ அனலோடு வாழும்

கொஞ்சு முகில் மலைதழுவும்போது - இள
நெஞ்சமதில் நிழலுருவாய் ஆசைதோன்றும்
வாழும் எங்கள் மண்தனையே பார்க்கவேண்டும் - அங்கு
வீரமுடன் உயர்ந்தவரை வாழ்த்தவேண்டும். (பனியுதிரும்)

காலையிளம் கதிர்பரவும் போது - மனக்
கனவுகளோ அலைபாய்ந்து தூரம்போகும்
வேலையிலும் வீதியிலும் கால்கள் சோரும் - மன
வேதனையில் விழிமடல்கள் ஈரமாகும். (பனியுதிரும்)

அடுத்த காலடி
அரசியற் தத்துவார்த்த காலாண்டிதழ்

தொடர்புகளுக்கு:
S.Nagalingam
27, Orpheus Tower,
Desmond Street,
London SE14 6HY

சரிநிகர்
இனங்களுக்கிடையில் நீதிக்கும்
சமத்துவத்திற்குமான இயக்கத்தின் (MIRJE)
மாதப் பத்திரிகை.

தொடர்புகளுக்கு:
SARINIHAR
6, Aloe Street,
COLOMBO-3
SRI LANKA

Param & Co.
SOLICITORS
6 Springfield Mount, Kingsbury, London NW9 0PR
Solicitors for all your legal requirements
Civil litigation ● Divorce and family matters ● Immigration
Crime ● Personal injury cases ● Motoring offences
Wills probate ● Administration and International transactions
Legal Aid cases undertaken

TELEPHONE: S. PARAMALINGHAM BA., LLM.
Tel: 081-200 3500 Fax: 081-200 1360



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஓநாய்களின் கண்ணீர் மழை.



-ஜெ-

## தென் ஆபிரிக்கா: கிழியும் முகமூடிகள்.

தென்னாபிரிக்க அரசாங்கம் ஒரு மனிதனுக்கு ஒரு வோட்டு என்ற முறையில் ஜனநாயக முறையை நிறுவுவதற்கு முன்னர் கறுப்பு இன மக்களைப் பிரிவு படுத்தித் தன் வெள்ளை ஆதிக்க ஆட்சியை நீடிக்க முற்படுகிறது என்பதற்கான பல சகுனங்கள் கடந்த சில ஆண்டுகளாகத் தெரிந்தன. ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் சகல ஒடுக்கப்பட்ட மக்களையும் இணைக்கும் முக்கிய அரசியற் சக்தியாக இருக்கிறது. அதற்கெதிராக நிறவெறி ஆட்சி தன் அடிவருடி ஒருவரை வளர்க்க முற்பட்டது. 'இன்காத்தா' எனும் பெயருடையதும் 'சூலூ' இன மக்களை மட்டுமே கொண்டதுமான இயக்கத்தின் தலைவரான மங்கோஸுத்து புத்தலேஸி எனும் குடித்தலைவர் இதற்கு இணங்கினார். ஆபிரிக்கத் தேசிய காங்கிரஸின் போட்டிச் சக்தியாக மட்டுமன்றிக் கறுப்பு இனத்தவர் மத்தியில் குல அடிப்பபடையில் மோதல்களை வளர்க்கும் சக்தியாகவும் இன்காத்தா செயற்பட்டது. கடந்த சில ஆண்டுகளாக இன்காத்தா ஆதரவாளர்களும் இனந்தெரியாத குண்டர்களும் ஆ.தே.கா. ஆதரவாளர்களை மட்டுமன்றி சூலூ அல்லாத இன மக்களையும் தாக்கும் செயல்கள் பெருகின. கறுப்பு இனத்தவரிடையே கடும் மோதல்களும் வீண் மரணங்களும் நிகழ்ந்தன.
ஆ.தே.கா. தலைமையின் சார்பில் நெல்ஸன் மண்டேலா புத்தலேஸியைச் சமாதான முயற்சிகளில் ஒத்துழைக்கும்படியும் அரசாங்கத்தை உடனடியாக வன்முறைக்கு எதிரான உறுதியான நடவடிக்கை எடுக்கும்படியும் கோரினார். ஆயினும் வன்முறை தொடர்ந்தது.
அரசாங்கமும் அதன் பொலிஸும், பாதுகாப்புப் பிரிவும் இன்காத்தா வன்முறையாளர்களுக்கு உதவுவதாகச் சந்தேகிக்கப்பட்டது. ஆயினும், அரசாங்கம் இதை வன்மையாக மறுத்தது. வன்முறை தொடருமாயின் அரசாங்கத்துடனான பேச்சுவார்த்தைகளை முறிப்பதாக ஆ.தே.கா. எச்சரித்தது. அது மட்டுமன்றி அரசாங்கம் இனப்பாகுபாட்டு முறையை முற்றாக ஒழிக்கும்வரை தென்னாபிரிக்காவிற்கு எதிரான பொருளாதாரத் தடையைத் தொடருமாறும் உலக நாடுகளை ஆ.தே.கா. கேட்டுக் கொண்டது. தென்னாபிரிக்க அரசுடனான உறவுகளைப் பகிரங்கமாய்ப் பலப்படுத்தத் தருணம் பார்த்திருந்த மேலை வல்லரசுகள் (முக்கியமாக யூ.எஸ்., பிரிட்டன்) தென்னாபிரிக்கா சரியான திசையிற் போவதால் அத் தடைகள் தொடர அவசியமில்லை என்று வாதித்ததோடு அவற்றைத் தளர்த்தவும் செய்தன.
இச் சூழலிலேயே, இன்காத்தாவுக்கு அரசாங்கம் நிதியுதவி செய்ததற்கு ஆதாரங்கள் புலப்பட்டன. புத்தலேஸிக்கு பல இலட்சம் டொலர் கொடுக்கப்பட்டதாகவும் அதைவிடப் பன்மடங்கு பணம் அரசாங்கத்தால் இன்காத்தாவுக்கு உதவியாக வழங்கப்பட்டதாகவும் தெரிய வந்துள்ளது. தடயங்களை மூடும் முயற்சியில் புத்தலேசி தன் அந்தரங்க உதவியாளர் மீது பழியைச் சுமத்திவிட்டுத் தனக்குத் தரப்பட்டதாகச் சொல்லப்பட்ட பணத்தை மட்டும் திருப்பிக் கொடுக்க எற்பாடு செய்தார். சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் பதவி விலகவேண்டுமென்று ஆ.தே.கா. நெடுங்காலமாகவே கேட்டுள்ளது. இந்த விஷயம் அம்பலமான பின்னர் வேறு வழியின்றி இரு முக்கிய அமைச்சர்கள் முக்கியத்துவம் குறைந்த பதவிகட்கு மாற்றப்பட்டனர். குற்றவாளிகள் அனைவரும் தண்டிக்கப்பட வேண்டுமாயின் முதலமைச்சர் டிக்ளேக்கும் பதவி விலக வேண்டும். இந்த விவகாரம் அம்பலமான பின்னருங்கூட மேற்கு நாடுகள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எதுவுமே நடவாததுபோல பாசாங்கு செய்கின்றன. அவர்களுடைய கவலைகள் எல்லாம் மண்டேலாவின் கியூபா விஜயம் கஸ்ட்ரோவின் செல்வாக்குக்கு உதவுமா, கம்யூனிஸ்டுக்கள் ஆ.தே.கா.வில் தொடர்ந்தும் இணைந்திருப்பது தமது எதிர்காலத் திட்டங்களை எவ்வாறு பாதிக்கும் என்பன போன்றவை. நிறவெறியாவது, இன ஒடுக்கலாவது! கம்பெனிகட்கு லாபம் கிடைக்கும்வரை உலகம் அழிந்தாற்கூட என்ன கவலை?

## எதியோப்பியா! மறுபடியும் வேதாளம்?

இரண்டாம் உலக யுத்தத்தின் பின் பாஸிஸ இத்தாலியினிடமிருந்து விடுவிக்கப்பட்ட வடகிழக்கு ஆபிரிக்கப் பிரதேசம் கொலனித்துவவாதிகளால் தெரிவு செய்யப்பட்ட ஹெய்லே ஸலாசி என்றவரின் முடியாட்சியின் கீழ்க் கொண்டு வரப்பட்டது. எதியோப்பியாவினின்று மதத்தாலும் மொழியாலும் பண்பாட்டாலும் வேறுபட்ட மக்களைக்கொண்ட எரித்திரியா அதற்குமுன் சுதந்திர நாடாகவே இருந்தது. ஹெய்லே ஸலாசியின் சர்வாதிகாரத்திற் கெதிராகவும் எரித்திரியாவின் சுயாதிபத்தியத்துக்குமாக எரித்திரிய மக்களின் விடுதலைப் போராட்டம் 1960களில் விருத்தியடைந்தது. இதற்கு உலகின் சகல முற்போக்குச் சக்திகளதும் ஆதரவும் அனுதாபமும் இருந்தது. 1970களின் இடைப்பகுதியில் ஹெய்லே ஸலாசியின் ஆட்சி அதன் ராணுவத்தினரின் ஒரு பகுதியினரால் தூக்கியெறியப்பட்டது. மக்கள் புரட்சி இல்லையெனினும் மக்களது வரவேற்பைப் பெற்ற அரசியல் மாற்றமும் ஸலாசிக்கு இருந்த அமெரிக்கச் சார்பும் புதிய ஆட்சியில் இடதுசாரி முனைப்பைக் காட்டின. அன்றைய உலகின் ஏகாதிபத்திய எதிர்ப்பு அலை இதற்கு உடந்தையாயிற்று. வடஆபிரிக்காவில் தன் செல்வாக்கை நிலைநிறுத்த விரும்பிய சோவியத் யூனியன் புதிய ஆட்சியாளருடன் நெருக்கமான உறவை ஏற்படுத்திற்று. மெங்கிற்ஸு மரியாமின் தலைமையிலான அரசாங்கம் எரித்திரியாவைத் தொடர்ந்தும் எதியோப்பிய ஆட்சியின்கீழ் வைத்திருக்கவே முற்பட்டது. அதுவரையில் எரித்திரியக் கிளர்ச்சியாளர்களுக்கு ஆயுத உதவியும் பயிற்சியும் அளித்துவந்த சோவியத் யூனியன் எதியோப்பிய அரசுடன் சேர்ந்து எரித்திரிய எழுச்சியை அடக்க உதவியது. மேற்கு நாடுகள் எதியோப்பிய ஆட்சிக்குத் தொல்லை கொடுக்குமுகமாக எரித்திரியாவின் கிளர்ச்சிக்கு மட்டுமன்றி வடக்கிற் டிக்ரே மாகாணத்தின் கிளர்ச்சியாளர்களுக்கும் ஆயுத உதவி வழங்கின.

மக்கள் ஆதரவில் தங்கியிராமல் அயலார் தயவில் தன்னைப் பலப்படுத்த முற்பட்ட மெங்கிற்ஸு ஆட்சி செல்வாக்கிழந்ததோடு நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பவும் பலமற்றதாகியது. வடக்கிற் கிளர்ச்சியுடன் இயற்கையின் சீற்றமும் நாட்டின் நிலையைச் சீரழித்தது. பஞ்சமும் பட்டினியும் எண்பதுகளின் நடுப்பகுதி முதல் நாட்டின் நிரந்தர நிலையாகின. 1990 இல் சோவியத் உதவியும் குறையத் தொடங்கியபின் எதியோப்பிய அரசாங்கத்தினுள் தடுமாற்றம் அதிகரித்தது. இவ்வருட முற்பகுதியில் இராணுவத்தின் ஒரு பகுதி மெங்கிற்ஸு ஆட்சியைத் தூக்கியெறிந்தது. மெங்கிற்ஸு நாட்டைவிட்டு ஓடினார். புதிய ஆட்சியும் சில நாட்களுள் கிளர்ச்சிக் காரர்களிடம் வீழ்ந்தது. மெங்கிற்ஸு ஆட்சியை முறியடிப்பதில் எரித்திரிய விடுதலைப் போராட்டம் மிக முக்கிய பங்களித்தது. அந்த மக்கள் அளப்பரிய தியாகங்களைச் செய்தே தம் விடுதலையை வென்றனர். ஆயினும் அமெரிக்கா தனக்குச் சாதகமான புதிய ஆட்சியாளர்களை எதியோப்பியத் தலைநகரான அடிஸ் அபபாவில் நிறுவியதோடு எரித்திரியாவை மீண்டும் எதியோப்பிய ஆதிக்கத்தில் வைப்பதை ஆதரித்தது. எரித்திரிய விடுதலை இயக்கம் இதனைக் கடுமையாக எதிர்த்ததன் விளைவாக, இன்னும் இரண்டு வருட காலத்திற்கு அங்கு சுமுகமான அரசியல் நிலைமைகள் ஏற்பட அனுமதித்துப் புதிய சூழ்நிலையில் சுயநிர்ணய உரிமையைப் பிரயோகித்துப் பிரிவினை பற்றிய முடிவை எடுக்கலாம் என உடன்பாடாகியுள்ளது. எரித்திரிய மக்கள் அடிப்படையில் சொந்தப் பலத்தில் நின்று போராடியதாலேயே இது இயலுமாயிற்று. அல்லது மறுபடியும் வேதாளம் முருக்கமரத்தில் ஏறிய கதைதான். இன்னும் இரண்டு வருடத்திலும் அமெரிக்காவும் அதற்கு ஆதரவான ஆட்சியும் எதுவுஞ் செய்யலாம். எரித்திரிய மக்கள் விழிப்புடன் இருக்கவேண்டும்.

## குர்த்திஸ்தான்: எல்லோரையும் எல்லாநேரமும்....

சென்ற இதழில் குர்த் (Kurd) விடுதலைப் போராட்டம் பற்றி நம்பிக்கையுடன் எழுதினேன். அது வீண் போகவில்லை. குர்த் மக்கள் மேலைநாடுகளின் நோக்கங்களை இன்று இனங்கண்டு கொண்டார்கள். துருக்கிய குர்த் விடுதலைப் போராட்டச் சக்திகளின் ஏகாதிபத்திய விரோத முனைப்பு இன்று ஈராக்கிய குர்த் விடுதலைப் போராளிகளையும் தொற்றிக் கொண்டுள்ளது. சதாமுடன் சமரசம் செய்ய முற்படும் தலைமை, மேலைநாடுகளின் வற்புறுத்தலுக்கு உட்பட்டே அவ்வாறு செய்வதைப் போராடும் குர்த் மக்கள கண்டு கொண்டனர். இதனால் இளைஞர் மத்தியில் ஏகாதிபத்திய எதிர்ப்புணர்வு ஓங்கி வளர்ந்து வருகிறது.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## சீனா: மனிதாபிமானம் இதோ!

1989 இல் 'தியன் ஆன் மென்' மரணங்கள் குறித்தும், பொதுவாகவே சீனாவில் ஜனநாயக உரிமைகள், மனித உரிமைகள் என்பன குறித்தும் ஐரோப்பியப் பத்திரிகைகள் மிகுந்த கரிசனை காட்டியுள்ளன. இன்றும் சீனா பற்றி எழுதும்போது தியன் ஆன் மென் சம்பவம்பற்றிக் குறிப்பிட இவை தவறுவதில்லை. இவ்வருடம் யூன் மாதத்தில் எதிர்பாராத மழை வீழ்ச்சியினால் சீனாவிற் சனப்பெருக்கம் மிகுந்த அன்ஹுவே மாகாணத்தில் பெருவெள்ளம் ஏற்பட்டது. 1976இல் தாங்ஷான் பூகம்பத்தின் பின்னரோ அதற்கு முன்னைய வெள்ளங்களின் போதோ வரட்சிகளின் போதோ அயல் உதவி கோரி அறியாத மக்கள் சீன அரசாங்கம் முதற்தடவையாக உலக நாடுகளிடம் 220 மில்லியன் (22 கோடி) டொலர் அவசர உதவி கேட்டது. இவ் வெள்ளத்தை அடுத்து மீண்டும் ஒகஸ்ற்றில் பெருமழை ஏற்பட்டது. இம்முறை 250 மில்லியன் மக்கள பாதிக்கப்பட்டனர். 1 மில்லியன் பேர் வீடிழந்தனர். சீன அரசாங்கம் முன்னெச்சரிக்கையாக ஆற்று அணைகளை உடைத்து விட்டதால் உயிர்ச்சேதம் குறைக்கப்பட்டது. ஆயினும் இவ்வருட விளைச்சலில் 20% அழிந்து விட்டது. வெள்ளத்தை அடுத்து வரட்சி ஏற்பட்டுள்ளது. இது பற்றிய செய்திகளை இந்த நாட்டுப் பத்திரிகைகள் இருட்டடிப்புச் செய்தன. தொலைக்காட்சி நிறுவனங்களும் வானொலியும் இது விஷயமாக சீனாவைக் குற்றஞ்சாட்டியதற்கு மேலாக எதுவுஞ் செய்யவில்லை. சீனா தமது நிருபர்களை எல்லா இடங்கட்கும் போக வசதி செய்யாததால் உலகச் செய்தி நிறுவனங்கள் செய்தியை வெளியிட முடியாது போயிற்றெனவும் பொதுமக்களிடம் உதவி கேட்க இயலாது போயிற்று எனவும் அவை கூறின.

அதேவேளை வறுமையில் வாடும் ஆபிரிக்க நாடுகள் உட்படப் பல மூன்றாமுலக நாடுகளும் தாய்வான், ஹொங்கொங் மக்களும் அந் நாட்டு அறநிறுவனங்களும் தம்மாலியன்றளவு உதவியைச் செய்துள்ளன. சீனாவின் தேவையை இவர்களால் உணரமுடியுமாயின் மேற்குலகு மனிதாபிமானிகளால் ஏன் உணர முடியவில்லை? லண்டனிலுள்ள சீன மாணவர்கள் தம் சிறு உபகாரச் சம்பளத்திலிருந்தும் பணம் திரட்டி அனுப்பினார்கள். இதைப்பற்றிப் பத்திரிகைகளோ, ஒக்ஸ்பாம் போன்ற அற நிறுவனங்களோ மனித உரிமை ஸ்தாபனங்களோ அறியவில்லை என்று கூறமுடியாது. ஒரு வேளை இயற்கையின் சீற்றத்தினால் சீனமக்கள் இன்னற்படுவது மனிதவுரிமைப் பிரச்சாரர்களதும் மனிதாபிமானிகளதும் கவனத்துக்கு அப்பாற்பட்ட ஒன்றாயிருக்கலாம்.

## கனவு

*சுகன்*

தோழன் ஒருவனை இன்று சந்தித்தேன். "தொடர்ந்து என்ன செய்யப் போறாய்" என்று கேட்டேன்.
"படிக்கப் போறன்"
"ஏன் படிக்கப் போறாய்"
"படிச்சாத்தான் மனிசனா இருக்கலாம்"
"மனிசனா இருக்கிறதுக்குப் படிக்க வேணுமோ?"
"ஓம்"
இரவு கனவு கண்டேன். ஒரு பெண்ணின் பிணத்தைத் தன் முதுகில் சுமந்தபடி அழுதுகொண்டே ஒரு மனிதன் வந்தான்.
"நீயும் படி, மனிசனாஇருக்கலாம்"
என்றபடி, கனவிற்குள்ளும் தூக்கத்தைத் தேடினேன்.
எழுந்தபின் விடிந்தது.

2

நன்கு தூங்கி விட்டேன். மனம் குழம்புவதில் மிகத் தெளிவாக இருந்தது.
கடல் அலைகளைக் குழப்புவது யார்?
அலைகள் மேலால் நடந்து நடந்து என் பாதங்கள் மட்டுமே நனைந்தன.
கடலிற்குள் நடந்தும் பாதங்கள் மட்டுமே நனைவது அதிசயமாக இருந்தது.
உப்புக் கரிக்காத கடலைத் தேடித்தேடி கடலிற்குள் நடந்தேன். கடல் நடுவில் கரையும், கரையெல்லாம் கடலுமாகி... எந்தச் சுழியோ பாய்மரக் கப்பலோ இல்லாத குழம்பலில் தெளிவான அலைகள், கடல்கள்.
கால்களும், கைகளும், இன்னும் கால்களின் அமைப்பில் மனித உருவங்களும், கைகளின் அமைப்பில் மனித உருவங்களும், காலும் கையும், கையும் காலும் எனக் கடலின் அடியில் படுத்திருந்தன.
சில புதைந்திருந்தன, சில சிதைந்திருந்தன.
முழுமையானதும், சிதைந்ததும், புதைந்ததும்.

3

எனது கடல் எங்கே?
எனது உப்புக் கரிக்காத கடல் எங்கே?
"உனது கண்களுக்குள்தான் நீ நின்று கொண்டிருக்கிறாய், நடந்து கொண்டிருக்கிறாய்" எனப் பாடியபடி ஒரு கோவணத் துண்டுகூட இல்லாத மனிதன் சென்று கொண்டிருக்கிறான். கனவிற்குள் தூக்கம், அதற்குள்ளும் கனவு. மலர்களைத் தேடினேன், உப்புக் கரிக்காத கடலில் பிறந்த மலர்களைத் தேடினேன்.
"ஒரு மலரின் மகரந்தத்தில்தான் நீ நின்று கொண்டிருக்கிறாய், நடந்து கொண்டிருக்கிறாய்" மனிதன் தொடர்ந்து பாடுகிறான். எனது மகரந்தத்திற்குச் சொந்தமான கடல் எங்கே?
எனது மகரந்தத்திற்குச் சொந்தமான உப்புக்கரிக்காத கடல் எங்கே?

4

உப்புக் கரிக்காத கடலிற்குச் சொந்தமான மகரந்தத்தின் மலரில்...இரத்தமும் நிணநீரும். கனவில் மூளைநரம்பு களைத்து விட்டது. கனவை முறித்து தூக்கத்திற்கு வந்து முதலாவது கனவிற்குள்ளால் வெளியேற முடியவில்லை..!
ஒரு கிழவியும், ஒரு கர்ப்பிணிப் பெண்ணும், இன்னொரு இளம்பெண்ணும், இன்னொரு பெண் குழந்தையும்...


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சிறுகதை

# சபிக்கப் பட்டவர்கள்

-சிறி-

சிவபெருமானால் தண்டிக்கப்பட்ட நக்கீரருக்குக் குளத்தில் முழுகி எழுந்தும் உடல் உபாதை தணியவில்லை. தான் மதுரை மாநகரைவிட்டு அகற்றப்பட்டது நியாயமா என்று அவருக்குள் இருந்த ஐயம் இன்னுந் தீரவில்லை. 'குற்றங் குற்றமே' என்று சொன்னது எவ்வகையிலும் குற்றமென்று அவரால் இன்னும் ஏற்க முடியவில்லை. புலமை இல்லாத ஒருவன் தனக்கே விளங்காத இரவற் கவிதை வாசித்துப் பரிசுபெற்றதையிட்டுத் தன் மனதில் ஏற்பட்ட கொதிப்பு முதற்கண் தன் ஆணவத்தின் பாற்பட்டதா அல்லது நியாய உணர்வின்பாற் பட்டதா என்ற கேள்விக்கும் அவரால் முடிவு காண முடியவில்லை. வீடு, வாசல், மனைவி, பிள்ளைகள், நண்பர்கள், அரச சபை, எல்லாவற்றையும் ஒரு வாக்குவாதத்திற்காக, சபையோர் நடுவே விட்டுக் கொடுக்கக்கூடாது என்ற வீம்புக்காக, வரட்டுக் கௌரவத்திற்காக இழந்து பரமசிவனாருடைய கோபத்துக்கு ஆளாகிய முதலாவது சாதாரண மனிதன் என்று வருந்துவதா இல்லைப் பெருமைப் படுவதா என்றுகூட அவருக்கு நிச்சயமில்லை. நெற்றிக்கண் பட்ட அவரது தேகத்தின் தகிப்பு அதிகமா அல்லது அநியாயமாக அவமதிக்கப்பட்டுத் தண்டிக்கப்பட்டோமே என்ற மனத்தின் தகிப்பு அதிகமா என்றும் அவருக்குத் தெரியவில்லை. நெடுங்காலமாகத் தன்னை அறிந்த பாண்டியன்கூடத் தனக்காகப் பரிந்து பேசவில்லையே என்ற ஏமாற்றம் மனதைக் குடைந்தது. துதி கேட்டே பழகிவிட்ட செவிக்குத் தன் மனைவியின் கூந்தல் இயற்கை மணம் கொண்டது என்று சொன்னவனின் புகளுரையைவிட இல்லையென்று நெற்றிப் பொட்டில் அடித்தமாதிரிச் சொல்கிறவனுடைய சத்திய வசனமா பிடிக்கும்? கற்புள்ள பெண்களின் கூந்தலில் எல்லாம் இயற்கை மணம் இருக்குமென்றால், பாண்டியனின் பட்டத்தரசியை விட்டால் மற்ற எல்லாப் பெண்களும் கற்பில்லாதவர்களா?

பாண்டியனுக்காவது அதிகாரத்தால் வந்த அகந்தை நியாயத்தைக் காணாதவாறு கண்ணை மறைத்தது. மற்றப் புலவர்கள்? இப்படியும் ஒட்டு மொத்தமான கோழைத்தனமா? பாண்டியனின் பணமுடிச்சும் பரமசிவனாரின் கோபமும் ஒன்று சேர்ந்து நிற்கும்போது துணிந்து எதிர்க்கும் நெஞ்சுறுதி எத்தனை பேரிடம் உண்டு என்று நினைத்தபோது, நக்கீரரின் எரிமலை நெஞ்சுக்குள் விளைந்த கணநேரப் பெருமிதம் சில்லென்று குளிரூட்டிச் சிலிர்க்க வைத்து மறைந்தது.

என்ன பயனற்ற நடைமுறைக்கு ஒவ்வாத யோசனைகள். வாழ்நாள் முழுவதும் 'குற்றங் குற்றமே' என்று சொன்ன வீம்பை மட்டுமே நினைத்துக் கொண்டு திருப்திப் படமுடியுமா? இதற்காக நாளை ஒருநாள் உலகம் பாராட்டவுங்கூடும். ஆனால் இன்றைக்குச் சோறு போடுவது யார்? சிவபெருமானே சீற்றம் தணிந்து நடந்தவை நடந்தவையாயிருக்கட்டும் என்று மன்னித்ததோடு மட்டுமன்றி விமோசனம் பெறப் பாதையும் காட்டிவிட்டார் அடுத்த காரியத்தைக் கவனிக்க வேண்டியதுதான். சிவபெருமானே வந்து தன் துணிவை மெச்சினாலொழிய அரச சபையில் உள்ள பிச்சைக்காரப் பட்டாளம் தன்னுடன் உறவு கொண்டாடத் துணியாது. புகழ்பாடும் கும்பல் உள்ளவரைக்கும் பாண்டியனுக்குத் தன் அவையில் நக்கீரர் இருந்தாலென்ன, போனாலென்ன. அவனுடைய தேவியின் கூந்தலின் இயற்கை மணத்துக்கு ஈடாக ஊரில் ஒரு மலருக்கும் மணமில்லை என்று வாயுளையப் பாடப்போகிற கூட்டத்தின் நடுவே 'குற்றம் குற்றமே' என்ற நிலையினின்று பின்வாங்கிய நக்கீரன் இருந்தாலும் வெற்றி; தன் நிலைப்பாட்டைக் கைவிடாமல் அல்லற்பட்டு அழிந்தாலும் வெற்றி. பாண்டியனுக்கு எந்தவகையான மகிழ்ச்சியை மறுப்பது என்று மனம் தடுமாறியது. மனைவி, குடும்பம், மதுரைமாநகர் என்று மாறிமாறி எழுந்த நினைவுகள் சாப விமோசனத்தை நோக்கி நக்கீரரை உந்தின. மனதை ஒரு நிலைப்படுத்தித் தியானத்தில் ஆழ்வோம் என்ற முடிவுடன் நக்கீரர் குளத்தில் இறங்கி முழுகியெழுந்து ஈர வேட்டியுடன் குளக்கரை மரநிழலில் சப்பாணி கொட்டியவாறு மனதை ஒடுக்க முற்பட்டார். அப்போது.....

***

இளங்கீரனுடைய தூக்கம் கலைந்தது. "மச்சான், கீரன் எழும்படா! ஊராலை கடிதம் வந்திருக்குது" என்ற பிரகடனத்துடன் கதவைத் தடதடவென்று தட்டினான் அடுத்த அறையிலிருக்கும் சுரேன் எனப்படுகின்ற சுரேந்திரகுமார்.

"மூதேசியள்! சனி, ஞாயிறென்டாலும் ஆறுதலாய்ப் படுக்க விடாதுகள். ஒண்டில் ஆரேன் ஒருத்தன் மாறிமாறி மணியடிப்பான். இல்லாட்டி அறைக்குள்ளை வந்து குழப்புவான்." முனகியவாறே தலையணையிலிருந்து தலையை வெகு சிரமப்பட்டுப் பிய்த்தெடுத்து நிமிர்த்தி வைக்குமுன்னமே கதவைத் திறந்து கடிதத்தைக் கட்டிலில் வீசிய சுரேன் அறையை விட்டுப் போக மனமில்லாமல் நின்றான்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கீரனுக்கும் அவனைப் போகச் சொல்ல மனம் வரவில்லை. மனம் வந்தாலும் சுரேன் இலேசில் போகப் போவதில்லை. 1990க்கு முதலே எவருக்கும் ஊரிலிருந்து கடிதங்கள் வருவது குறைவு. இப்போது கடிதம் வருவதே அபூர்வம். யாரிடமாவது கையிற் கொடுத்தனுப்பிக் கொழும்பில் போட்டால் வந்து சேரும். அதுவும் நிச்சயமில்லை. ஒரு மாதம் இரண்டு மாதம் பிந்தி வருகிற கடிதத்தில் எதுவும் பெரிய புதினம் இராது. நீண்ட காலமாகவே இயக்கங்களுடைய செய்திப் பிரச்சாரங்களுக்குள்ளிருந்தும் வதந்திகளிலிருந்தும் கண் காது முளைத்து வரும் தகவல்களிலிருந்தும் ஊர் நடப்புகளை ஒவ்வொருவரும் அவரவர் மனவிருப்புக்கேற்றபடி விளங்கி வியாக்கியானஞ் செய்யப் பழகிவிட்டாலும் ஊரிலிருந்து கைப்பட எழுதின கடிதத்துக்கு ஒரு மதிப்பு இருந்தே வந்தது. சுரேனும், கீரனும் அடுத்தடுத்த ஊர்க்காரர்கள். சுற்றி வளைத்துச் சொந்தமும் உண்டு. சுரேனுக்குக் கடிதம் வந்து ஆறேழு மாதமிருக்கும். மனத்துக்குள் இருக்கிற கவலையை பிறரறியாமல் ஆர்ப்பாட்டமான பேச்சாலும் அட்டகாசமான சிரிப்பாலும் மூடப்பழகிவிட்டான்.

"அம்மாவே எழுதியிருக்கிறா?" சுரேன் ஆவலை அடக்கமுயலவில்லை.

"ஓம்" என்று சொல்லியபடி உறையைத் திறந்து கடிதத்தை வாசிக்கத் தொடங்கிய கீரனுடைய மௌனத்தைக் குலைக்க வழி தெரியாத சுரேன், "மச்சான், கோப்பி ஒண்டு ஊத்தட்டா?" என்று கேட்டுவிட்டுக் கீரனுடைய மறுமொழிக்குக் காத்திராமல் அறையை விட்டுப் போனான்.

கீரன் கடிதத்தை வாசித்து முடித்தபோது அறையிலிருந்த மற்றக்கட்டிலில் கோப்பியை உறிஞ்சியபடி சுரேன் இருந்தான். கீரனுடைய கட்டிற் தலைமாட்டுக்கு அருகே கம்பளத்தின் மேல் கீரனுடைய கோப்பி வைக்கப் பட்டிருந்தது.

"கோப்பியைச் சரியாய்க் கழுவினியா" என்ற கீரனுடைய கேள்விக்குப் பதில் சொல்லாமல் "அம்மா என்னவாம்?" என்று கேள்வி எழுப்பினான் சுரேன்.
"நீ ஒரு நாளுங் கோப்பை சரியாய்க் கழுவமாட்டாய்"
"சோம்பேறித் தடியனுக்கு கோப்பி கொண்டந்ததுங் காணாமல்..."
"உன்னை ஊத்தச் சொன்னனானே?"
"பாவமெண்டு கொண்டுவந்தால் அறுவான்ர வாய்க் கொழுப்பு"
"பாவம் பார்த்தே கொண்டந்தனீ? கடிதம் பார்க்கவெல்லோ உன்ரை இரக்கமெல்லாம்"
"சரிசரி, என்னவாம் புதினம்?"
"எல்லாம் தெரிஞ்ச கதைதான். புதிசா ஒண்டுமில்லை" ஒரு நிமிஷநேரத் தயக்கத்தின் பின், "இந்தா வாசி" என்று கடிதத்தை நீட்டினான் கீரன்.

"எப்ப கோயிலுக்குப் போறாய்?"
"ஏன் போகவேணும்?"
"அம்மா என்னவோ கெஞ்சி மண்டாடிக் கோயிலுக்குப் போ எண்டு எழுதியிருக்கிறா. ஒருக்காப் போனா மூதேசியாருக்குத் தேஞ்சு போகுமே?"
"இதுதான் உன்னட்டைக் கடிதத்தைக் காட்டினா வாற வினை. உங்கை கோயில்வளிய யாவாரமெல்லோ செய்யினம்"
"ஊரில எண்டா யாவாரம் இல்லையோ?"
"இந்தளவு மோசமில்லை. எண்டாலும் அங்கேயே போகாமல் விட்டிட்டன்"
"ஓ! அதுதானே அம்மா இவ்வளவு தெண்டிக்கிறா கும்பிடாட்டிலென்ன, பகல் சாப்பிடவெண்டாலும் போகலாம்."
பகுதி பகிடியாகவும் பகுதி உண்மையாகவும் சொல்லியபடி கடிதம் வாசித்த திருப்தியுடன் சுரேன் வெளியேறினான்.

***

கீரனுடைய அம்மாவுக்குக் கீரன் கோயிலுக்குப் போவதை நிறுத்திய காலந் தொடங்கிப் பெருங்கவலை. அரச படையினர் இளைஞர்களைச் சந்தேகத்தின் பேரில் பெருந்தொகையிற் பிடித்துச்சென்று விசாரணையின்றி மறிக்கவும் வதைக்கவும் தொடங்கிய பிறகு கீரன் கடவுளைப் பகைத்துக்கொண்டு என்ன கஷ்டப்படப் போகிறானோ என்று அம்மாவுடைய மனக்கவலை மேலும் அதிகரித்தது. யார்யாரை ஏன் எப்போது எவ்வாறு கொல்வார்கள் என்றே தெரியாத காலம் வந்துங்கூடக் கீரன் நாட்டை விட்டு வெளியேற முயலவில்லை. 1987இல் அமைதி காக்கும் படையின் வருகைக்குப் பிறகு நடந்த சம்பவங்களை அடுத்து அவனாற் தொடர்ந்தும் ஊரில் இருக்க முடியாது என்ற முடிவுக்கு வந்த அம்மா தாலிக்கொடி உட்படக் கையிலும் கழுத்திலும் இருந்த சகலதையும் விற்று அவனை அனுப்பிவைக்க ஏற்பாடு செய்தார்.

கீரனுக்கு ஏற்பட்ட கஷ்டங்கள் ஒன்றும் மற்றைய தமிழ் வாலிபர்கட்கு ஏற்பட்டவற்றைவிட அதிகமானவையில்லை என்று அம்மாவுக்கு ஆறுதல் சொன்னாலும் அம்மாவுக்கு இவையெல்லாமே தெய்வத்தின் கோபம் காரணமானவை என்ற நம்பிக்கை கூடியதேயொழியக் குறையவில்லை. அவன் பத்திரமாக இங்கிலாந்து போய்ச் சேர்ந்தால் எப்படியும் பழனி முருகனுக்குக் காவடி எடுப்பேன் என்று அம்மா தன் மனதிற்குள் வேண்டிக்கொண்டாள். அது எப்படிச் சாத்தியப்படும் என்றெல்லாம் அப்போது யோசிக்க அவகாசம் ஏது? கீரனுக்கு லண்டன் பிழைப்புப் பழகிவிட்டாலும் இயந்திர கதியில் நடக்கும் உழைப்பும் சாரமற்ற வாழ்க்கையும் மனதை வாட்டின. இது பற்றிய வீட்டிற்கு எழுதிய கடிதங்களிற் குறிப்பிட்டது அம்மாவின் அபிப்பிராயத்தை மேலும் உறுதிப் படுத்தியது. அப்பாவுக்கும் மெல்லமெல்ல அந்தக் கருத்துடன் உடன்பாடு ஏற்படத் தொடங்கிவிட்டது. அம்மாவுக்கோ முன்பின் யோசியாமல் பழனிக்கு நேர்ந்துவிட்டோமே என்ற புதிய கவலையும் சேர்ந்து கொண்டது. கீரன் வருஷத்துக்கு ஒரு முறையாவது கோயிலுக்குப் போய் முருகனுக்கு ஒரு அர்ச்சனை செய்தாலும் தெய்வம் பொறுத்துக்கொள்ளும் என்ற நப்பாசையை ஒவ்வொரு கடிதத்திலும் தவறாமற் தெரிவிப்பார். கீரனுக்கோ இன்னும் நிச்சயமின்மை, சந்தேகம். ஆனாலும் அம்மாவின் கடிதங்கள் பாதிப்பை ஏற்படுத்தாமலில்லை.

***

மொழிப்பிரச்சனை, இனக்கலவரம், அரசபடைகளின் அட்டூழியம், இயக்கங்களின் மோதல், போர், கொலைகள், வதைகள் இவையெல்லாம் தெய்வச் செயலா? தமிழர் எல்லாருமே ஒருமுறை பழனிக்குப் படையெடுத்தால் நாட்டில் முழுப்பிரச்சனையும் தீர்ந்துவிடுமா? மூடநம்பிக்கைகளும், வரட்டு ஆசாரங்களும், அறியாமையும் அம்மாவுக்கும் அப்பாவுக்கும் மட்டும்தானா இருக்கிறது? கடவுளை நம்புகிறவன் முட்டாள் என்றால், முட்டாள்களின் உலகத்தில் அறிஞன் வாழமுடியுமா? அறிஞன் தான்

## அரசும் நீதியும்

காகத்தின் மீதுங்
கல்லெறிய மாட்டான்
உன் மகன்
நிரபராதியென
நீயறிவாய் அம்மா
ஊரறியும் எனவும்
அவனைக் கொண்டு போனோரே
குற்றவாளிகள் எனவும்
தண்டனை விதித்த
நீதிமன்றமும் அறியும்
எனினும் உனக்கோ
நீதி செயிக்குமெனும்
நப்பாசை

மறுவிசாரணை செய்யும்
உயர்நீதி மன்றத்தின்
நீதிபதிகள் மூவர்
பேர்கள் அறிவாயோ?
பொய்,
புரட்டு,
பித்தலாட்டம்

-சிவா-

www.tamilarangam.net

கடவுளை நம்பவில்லை என்பதை முட்டாள்களுக்கு நிரூபிக்க என்ன அவசியம்? அம்மாவுக்காக கோயிலுக்கு ஒரு தடவை போனால் என்ன நட்டம்? போனால் அவனது கொள்கைப் பிடிப்பு எங்கே போவது? சிநேகிதர்கள் சிரிக்கமாட்டார்களா? சிநேகிதர்களின் சிரிப்புக்குப் பயந்தா அவன் நாத்திகத்தைக் கடைப்பிடிக்கிறான். அம்மாவுக்கும் மேலாக ஒரு தெய்வம் இல்லையென்றால் அம்மாவுக்கும் மேலாக என்ன நாத்திகம்? நீண்டநேர மனக்குடைச்சலுக்குப் பிறகு கோயிலுக்குப் போய் ஒரு அர்ச்சனை செய்வது என்ற முடிவுக்கு வந்தான்.

***

மரத்திலிருந்து ஒரு இலை குளநீரில் விழுந்தது. விழுந்த இலை திடீரென்று ஒரு பாதி பறவையாகி மேலே பறக்க முற்பட்டது. மறுபாதி மீனாகி நீருள் முழுக முயன்றது. தியானத்தில் இறங்கு முன்னிருந்த நக்கீரரின் மனநிலையின் படிமந்தானோ அது? நிச்சயமின்மை, சஞ்சலம், சபலம், சலனம், முடிவின்மை, ஐயங்கள், கேள்விகள், மேலுங்கேள்விகள், மனதின் தத்தளிப்பு, தவிப்பு,பதட்டம், துடிப்பு, வேதனை, குமுறல், கொதிப்பு, ஒய்வற்ற இயக்கம், இழுபறி......

அந்த இலை ஏன் மரத்திலிருந்தபடியே இருந்திருக்கக்கூடாது? விழுந்தாலும் ஏன் தரையில் விழுந்து சருகாகவோ நீரில் மிதந்து நாளடைவில் அழுகியோ போயிருக்கக்கூடாது. பாண்டியன் அவையில் மற்றப் புலவர்கள்போல், மரத்தில் பாதுகாப்பாக இருக்கிற இலைகள்போல் இல்லாமல் இதுமட்டும் ஏன் இப்படித் தவிக்கவேண்டும்? பறவையாகி இழுக்கிற பாதி மேலெழுந்து மரத்தில் அமர்ந்து ஏதோ வகையில் மரத்துடன் உறவு கொண்டாட முனையும் நக்கீரரின் நப்பாசையா? மீனென்ன அரச சபையுடன் உறவு துண்டிக்கப்பட்ட நிலையிலும் தான் தானாகவே இருக்க முனைகின்ற நக்கீரரின் ஆணவமா? நீரில் விழுந்தாலும் நீருக்குள்ளேயே ஒரு இருப்பைக் காணமுடியுமென்ற தைரியத்தின் வெளிப்பாடா?

நக்கீரர் கண்ணைமூடித் தியானத்தில் ஆழ்வதற்கு முன்னமே இலையாக விழுந்து விளைந்த அந்த வினோத சிருஷ்டி நக்கீரரின் பார்வையில் விழுந்தது. இது நிசமா அல்லது கற்பனையா? நீரில் இறங்கி அதை நெருங்கிப் பார்க்கலாமா? மீனையும் பறவையையும் பிரித்து அந்த அவஸ்தையை முடிவுக்குக் கொண்டுவரலாமா? பிரித்தால் இரண்டுமே அழிந்து அந்த இருப்பே முடிவுக்கு வந்து விடுமா? மதுரை மாநகரில் பாண்டியனின் அவையில் நடந்தவை யாவும் மனதில் நிழலாடின. மரத்தோடு மரமாக மறுபடியும் ஒரு இலையாக ஒட்டிப்போய் மற்ற ஊமைப் புலவர்களைப்போல சடவாழ்க்கை வாழ்வதற்குத்தானா இந்தத் தியானம்?

நக்கீரரின் நெஞ்சுரத்தை மீண்டும் பரீட்சிப்பதற்குத்தான் அந்தப் பரம்பொருள் அவரைத் தவற்றுக்கு வருந்தி இரங்கித் தியானத்தில் ஈடுபடுமாறு கூறியதா? உணர்வு கடந்த அந்தப் பரம்பொருளுக்கு நக்கீரரைத் தண்டித்து என்ன பயன், நக்கீரரை மன்னித்து என்ன பயன்? தன் நெஞ்சைப் பொய்த்து ஒரு தியானமா?

மேலும் ஐயங்கள், மேலும் நிச்சயமின்மை, மேலும் மனக்கொதிப்பு, மேலும் உடற்கொதிப்பு. இம்முறை தன்னிரக்கத்தாலோ துன்பத்தாலோ அல்ல. அறிவே சுடராக எழுந்து விரிந்து நக்கீரரை உள்ளும் புறமும் தகித்தது.

***

கோயிலுக்குப் போனபோது பூசை தொடங்கிவிட்டது. கீரனுக்குக் கடைசியாக ஊர்க்கோயிலில் பார்த்ததனின்று பலதும் வித்தியாசமாக இருந்தது. பெண்கள் எல்லாருமே சேலையுடன் வரவில்லை. ஆண்கள் எவருமே வேட்டியுடன் காணப்படவில்லை. ஐயர் பூணூலுக்கு மேலே சட்டையும் ஸ்வெற்றரும் அணிந்திருந்தார். பூசையின் முடிவில் பஜனைப்பாடல்கள் கேட்டன. கஸெற்பெட்டி மேளவாத்தியம் ஒலித்தது. பிளாஸ்ற்றிக் போத்தல்களில் அபிஷேகத்திற்குப் பால் வந்தது. பூக்கள் இலையுந்தண்டுமாக பூச்சட்டிகளிலும், தட்டங்களிலும் கிடந்தன. ஆனை வாழைப்பழங்கள் நுனி வெட்டாமல் படைக்கப்பட்டன. கானேஷன் பூக்களும், சிவப்பு அப்பிள் பழங்களும் கண்ணைப் பறித்தன. இதெல்லாம் காலத்துக்கும் இடத்துக்குமேற்ற மாற்றங்களா? நாம் செய்யும் மாற்றங்கள் பிரதியீடுகளுடனேயே நின்று விடுகின்றனவா? கோயிற் தரையை மூடிய கம்பளத்தைச் சுத்தமாக வைத்திருக்காமல் மனிதர் விழுந்து கும்பிடலாமா? கோயிற் சுவரில் கேளிக்கை நிகழ்ச்சி விளம்பரங்களும் அரசியல் விளம்பரங்களும் காணப்படலாமா? எல்லாமே மாற்றத்துக்குரியன என்றால் சடங்குகளையும் ஏன் மாற்றக்கூடாது. மாட்டைப் போகவிட்டுக் கயிற்றைப் மேய்க்கிற காரியமா பார்க்கிறோம்?

கீரனுடைய மனதில் எழுந்த கேள்விஅலைகள் முடிவின்றி நீண்டு வளர்ந்தன. கீரனுக்கு அம்மா செய்யச் சொன்ன அர்ச்சனை நினைவுக்கு வந்தபோது பூசை முடிந்து விட்டது. ஐயரிடம் போய் அர்ச்சனைக்குக் காசைநீட்ட அவர் துண்டு வாங்கிக்கொண்டு வரும்படி சொன்னார். துண்டு வாங்குமிடத்தைக் கண்டுபிடித்துக் கணக்கப்பிள்ளை வரும்வரை காத்திருந்து வாங்கித் திரும்பி வந்தபோது ஐயர் வேறு அலுவலில் இறங்கிவிட்டார்.

அர்ச்சனைத் துண்டை மடித்துச் சட்டைப்பையில் வைத்துக் கொண்டு வெளியில் வந்து சப்பாத்தை மாட்டித் தெருவில் இறங்கினான்.

"என்ன மச்சான் கீரன், கோவிலுக்கே வந்தனீ?" என்று கேட்டகுரல் பெற்றோல் ஷெட்டில் பழக்கம் பிடித்த தம்பிராசாவுடையது.
"இல்லை....சும்மா...." என்று கீரன் இழுத்து முடிக்கு முன்னே, "கண்டு கனகாலம், வாடா 'பப்பு'க்குப் போய் ஒரு பியர் அடிப்பம்" என்றவாறே தம்பிராசா கையைப்பிடித்து இழுத்துச் சென்றான்.

***

தியானங் குலைந்த நக்கீரரைப் பூதமொன்று தன் குகைக்குள் சுமந்து சென்றது.


## பெண்ணின் குரல்



விபரங்களுக்கு:
ஆசிரியர்,
"பெண்ணின் குரல்"
17A அந்தரவத்த வீதி,
பொல்கேன்கொட
கொழும்பு-5


போர்கள், கலவரங்கள் - இவையெல்லாம் வியாபாரம்தானே. ஒரு கொலை வில்லனை உருவாக்குகிறது. இலட்சக்கணக்கான கொலைகள் கதாநாயகனை உருவாக்குகிறது. எண்ணிக்கைதான் மேன்மையைத் தீர்மானிக்கிறது.
-சார்லி சப்ளின் (திருவாளர் வேர்டாக்ஸ்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## ஈழத்துக் கவிஞர் அறிமுகம் - 3

### சு.வில்வரத்தினம்.

லண்டனில் தரமான நாடகங்களில் ஈடுபாடுடையோர், அவைக்காற்றுக் கலைக் கழகத்தின் 'எரிகின்ற எங்கள் தேசம்' நாடக நிகழ்ச்சியில் அபிநயிக்கப்பட்ட 'நிலாக்காலத்து வழிப்பயணங்கள்' என்று தொடங்கும் கவிதை வரிகளை எளிதில் மறந்திருக்க மாட்டார்கள். அவ் வரிகளை எழுதியவர் சு.வில்வரத்தினம். அவருடைய முதலாவது கவிதைத் தொகுதி 'அகங்களும் முகங்களும்' 1985 இல் பிரசுரமாயிற்று. அதிலிருந்த சில 'மரணத்துள் வாழ்வோம்' என்ற கவிதைத் தொகுப்பில் இடம்பெற்றன. வில்வரத்தினம் புதுக்கவிதையாளராகவே அறியப் பட்டவர். அவர் எழுதிய மரபுக் கவிதைகள் என எதையும் நாம் காணவில்லை. ஆயினும் அவருடைய கவிதையில் வலிமையான சந்தமுண்டு. உரைநடையின் ஓசைநயமும் கவிதைகட்கு வலுவூட்டுமாறு எழுதும் திறமை அவரிடம் உண்டு. புதுக் கவிதைக்கு ஓசை நயம் அவசியமில்லை என்பவர்கள் வில்வரத்தினத்தின் கவிதைகளை வாசிப்பது நல்லது. அவரது சொற்பிரயோகம் பேச்சுமொழி சார்ந்ததல்ல. மிடுக்கான எழுத்து வழக்கு மொழியிலேயே அவர் எழுதுகிறார். ஆயினும் அது விளங்க இலகுவானதாக உள்ளது. அவருடைய கவிதைகளிற் சிக்கலான படிமங்கள் இல்லை. ஆழமான சிந்தனைகளை எளிதான படிமங்களூடு விளக்கமுனையும் பாங்கு அவருடையது. அவருடைய கவிதைத் தொகுதியைக் காணாதவர்கள் 'மரணத்துள் வாழ்வோம்' தொகுதியைக் கண்டிருப்பார்கள். எனவே பின்னையதில் இடம்பெறாத மூன்று வேறுபட்ட தன்மையுடைய கவிதைகளை மகிழ்வுடன் பிரசுரிக்கிறோம்.

அவர் தன்னைப்பற்றிச் சொல்லியுள்ள சில வார்த்தைகளையும் 'அலை' வெளியீட்டாளரின் பதிப்புரையில் ஒரு பகுதியையும் மு. பொன்னம்பலம் அவரது கவிதைகள் பற்றி 'அகங்களும் முகங்களும்' முன்னுரையில் எழுதிய சில பகுதிகளையும் கீழே தருகிறோம். அடுத்து வரும் கவிதைகளுடன் சேர்த்துப் பார்த்தால் அவருக்குள் வாழும் கவிதை நெஞ்சை உங்களாற் காணவியலும் என்பது நம் எண்ணம்.

*- பனிமலர் ஆசிரியர் குழு.*

"இது என் முதல் வெளிப்பாடு. முதற் சுழல் வட்டத்தின் சிந்தனையை உள்ளடக்கியது. இதைத் தளமாய்க் கொண்டு இனிவரும் படைப்புகள் வேறோரு பரிமாணத்தைக் கொண்டதாய் அமைதலே என் விருப்பு. அதை முனைப்போடு செயல்படுத்தல் காலத்தின் கையில்தான் உள்ளது. ஒன்றுமட்டும் உண்மை; என் அகப்புற வாழ்வின் ஒவ்வோர் அம்சங்களிலும்கூட ஒளிகூர்ந்த உக்கிரம் தெறிக்க வாழ்தல் ஒன்றேதான் - வாழ்வையே கலை வடிவமாக்கி நிற்றல் ஒன்றேதான், பூரண கலைஞன் என்ற பெருமைக்கு என்னை உரித்தாக்கும். மற்று இவை ஒன்றும் எனக்குப் பெருமை தாரா".

*- சு.வில்வரத்தினம்* 31-7-1985

"சமகாலக் கவிஞர்களில் சு.வில்வரத்தினம் முக்கியமான ஒருவர். அகவயமானவன், புறவயமானவன் எனப் படைப்பாளனைப் 'பெட்டிகட்டிப்' பார்க்க முந்தும் நம் வரட்டு விமர்சகர்கள், இவரிடம் தோல்வியே காணுவர். அரசியல், சமூக, சமய, தன்னுணர்வுத் தளங்களிற் காலூன்றி இவரது அனுபவங்கள் கவிதா வெளிப்பாடு கொள்கின்றன. மரபுகளைச் சார்ந்து நவீன உலகினுள் பிரவேசிக்கின்ற போதும் 'முகந்திருப்பாது எதையும் எதிர்கொள்கிறார்; மனஞ்சலிக்காது எதிர்ப்பில் முளைகொள்கிறார்'. சொல்லாட்சி, புதிய சொற்புனைவு இவரிடம் காணும் தனித்திறன்கள்."

*- அலை வெளியீட்டினர், குருநகர்* 7-8-1985.

கலைஞர் சு.வில்வரத்தினத்தின் கவிதைத் தொகுதியைப் படித்தபோது எனக்குள் நேர்ந்த அனுபவம் - சந்தோஷம், ஆச்சரியம், நிறைவு.

நான் எழுதுபவை, எழுத நினைப்பவை என்கின்ற பகைப்புலக் கணிப்பீடுகளை உள்வாங்காத நிலையில், இன்றைய சமகாலத் தமிழ்க் கவிதைப் பரப்பில் நின்று படித்தபோது எனக்குள் நேர்ந்த அனுபவம் இது. எந்த விதமான எதிர்மன முற்சாய்வுகளுமின்றிப் படிக்கும் எவர்க்கும் வாய்க்கக்கூடிய அனுபவம் இது. புகழ்ச்சியல்ல.

அதனால் ஒன்று நிச்சயமாகிறது. இன்றைய புதிய தலைமுறைக் கவிஞர்களுள் சு.வில்வரத்தினம் தனித்துவம் பெறுகிறார். இத் தனித்துவம் பற்றிய விளக்கம் இவரையொத்த இளம் தலைமுறைக் கவிஞர்களான யேசுராசா, சேரன், ஜெயபாலன், புஷ்பராஜன் போன்றவர்களை இவரோடு ஒப்பு நோக்குதலைக் கோருகிறது.

இனி கவிஞர் சு.வி. தனது ஆத்மார்த்த அனுபவப் படிவுகளை வெளிக்கொணரக் கையாளும் முறைகளைப் பார்ப்போம். இவர் ஏனைய ஆத்மார்த்தக் கவிஞர்களைப் போலல்லாது பன்முகப்பட்ட அனுபவங்களைத் தரும் பல்வேறு தளங்களில் சஞ்சரிப்பவர். அப்படிச் சஞ்சரிக்கும் போது தான் பெறும் அனுபவங்களை அந்தந்தத் தளத்துக்குரிய ஆத்மார்த்தச் சொற்களின் தெரிவின் மூலம் பதிவு செய்கிறார். அதனால் அவர் அனுபவங்கள் ஏனைய அனேக ஆத்மார்த்த கவிஞர்களின் படைப்புகள்போல் வெறும் மூடுமந்திரங்களாக வீழாமல் எல்லோர் நெஞ்சங்களிலும் உரையாடிச் செல்கின்றன. சிறந்த ஆக்கங்களாக வருவதற்குரிய கீற்றுக்கள் தெரிந்தும் அனேக படைப்புகள் வெறும் மூடுமந்திரங்களாக விழுவதற்குக் காரணம், அந்தந்தத் தளங்கள் பற்றிய அறிவும் அவற்றிற்குரிய சொற்களின் தேர்வும் இல்லாமையே.

கவிஞர் சு.வி. தான் தொடும் தளங்களுக்கேற்பச் சொற்களைத் தெரிவுசெய்து மிகக் கச்சிதமாக வாய்பேச முடியாத உணர்வுகளை எம்மோடு தம் கவிதை மூலம் பேசவைக்கிறார்.

சு.வி. யின் கவிதைகளின் தனித்துவத்திற்கும் வெற்றிக்கும் காரணம் என்ன? அவரது


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கவிதைகளில் காட்டப்படும் எல்லா உயிர்களுக்கும் பொதுவாக உள்ளியங்கும் பேரியல்பின் பரிமாணங்களும் அப்படிக் காட்டுதலுக்குக் கருவியாகப் பெய்யப்படும் ஆத்மார்த்த உச்சங்களும்; அவற்றின் வெளிப்பாட்டு முறைகளுமாகும்.

ஏற்கனவே சமகாலத் தமிழ் இலக்கியத்தில் பல ஆத்மார்த்தவாதிகள் தேறியுள்ளனர். 'மௌனி'யின் கதைகள் இந்த ஆத்மார்த்தப் பண்பின் உயர் நிலைகளை எட்டியிருக்கின்றன. ஆயினும் அவை 'அவன்-அவள்' என்னும் எல்லைக்குள் சிக்கி, ஒரே தன்மையொத்த உணர்வு நிலைகளையே திரும்பத் திரும்ப எழுப்ப முயல்வனவாதலால் ஆத்மார்த்தப் பண்பின் பூரண சுற்றோட்டத்தைத் தராதவையாகப் போய்விடுகின்றன. ஆனால் கவிஞர் சு.வி.யின் கவிதைகள் அவற்றிற்கு மாறாக, பன்முகப்பட்ட துறைகள் இவர் இருப்போடு நிகழ்த்தும் 'உராய்வின்' சிலிர்ப்பாகவே வெளிக்கிளம்புகின்றன.

ஆனால் இப்படி வெளிக்கிளம்பும் உணர்வுகள் எல்லாம் பன்முகப்பட்ட தளங்களின் குணங்களை ஏற்றிருந்தபோதும், அவையெல்லாம் ஒரே உணர்வுக் கடலை நோக்குவனபோல், ஒன்றையே தேடுவனபோல், ஒன்றையொன்று பின்னியும் தொடர்ந்தும் ஆத்மார்த்த உலகுக்குரியவையாகவே வெளிக்கிளம்புகின்றன.

இதோ 'விடுதலைப் பொழுது' என்னும் கவிதையில் காலைப் பொழுதின் ரம்மியத்தைக் கூறும்
*"நெஞ்சப்புலம் நெகிழ்ந்து அங்கு*
*புலரவிடு காலைப் பொழுதை"*
என்னும் வரிகள், அடுத்து வரும் 'கோடை'யில் எழும் வெறுமையை அசைபோடும்,
*"கானல் அரவுகள் நெளிதரும் வயல்வெளி*
*மேய்தலிலாது வெறுமையை இரைமீட்டபடி*
*காய்தலுறும் மாடுகள்"*
என்னும் வரிகள், பின்னர் 'ஊடாக' என்னும் கவிதையில் பிணக்குற்ற தாம்பத்ய உறவில் விழுந்த இரவு பற்றிப் பேசும்போது,
*"உறைந்துபோய் நிற்கும் ஊமை இருளில்*
*புதைந்துபோய் விட்ட கால ஊர்தி"*
என்று வரும் படிமக் கலப்புகள்,
'பொழிவு' கவிதையில் வரும்,
*"இலையுதிர்ந்த நெடு மரமாய்*
*ஏகப் பெரு வெளியின்*
*சங்கீதம் குளித்திலையா?"*
என்று கேட்கும் வரிகள்,
'நிலவும் நெகிழ்வும்' என்னும் கவிதையில்
*"எல்லாம் முடிந்து*
*நெற்பொதிகளுடன் வைக்கோற் போருஞ்*
*சமந்தபடி மெல்ல*
*அசைநடைபோடும் மாட்டு வண்டிகள்;*
*வண்டிகளின் பின்னே நாங்கள்....*
*திரும்பிப் பார்த்தால்*

*பின்னிலவில்,*
*வளமெல்லாம் அள்ளித் தந்துவிட்ட*
*வயல்வெளி*
*வறிதே கிடக்கின்ற சோகம்*
*நெஞ்சைப் பிழியும்*
*துயர்-இன் இசையாய்....."*
என்று கூறும் வரிகளெல்லாம் நமக்கு என்ன கூறுகின்றன?

ஒவ்வொரு வரிகளும் வெவ்வேறு நிலைகளின் தளங்களின் பிரசவங்களாக வெளிக் கிளம்பியபோதும் அவையெல்லாம் அடிப்படையில் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்தும், தொடர்ந்தும் ஒரே உணர்வுக் கடலை நோக்குவனவாய், ஒன்றையே தேடுவனவாய் நிற்கின்றன. அப்படி நிற்கும்போதும் ஆனந்தமும், இனந்தெரியாப் பிரிவுத் துயருக்குமான ஆத்மார்த்தப் படிவுகளாகவுமே நிற்கின்றன.

கவிஞர் சு.வி.யின் கவிதைத் தொகுப்பு ஒரு வெற்றிகரமான சாதனையே. அதற்குரிய காரணம் அவர் பல்வேறு பன்முகப்பட்ட தளங்களையும் தொடுகிறார் என்பது மட்டுமல்ல, அவர் பிரவேசிக்கும் தளங்களில் அவ்வப் பிரதேசங்களுக்குரிய முற்போக்குச் சக்திகளான ஆத்மார்த்த நிகழ்வுகள், அவற்றின் படிவங்கள், வார்த்தைகள் என்பவற்றோடும் அணி சேர்ந்து கொள்கிறார் என்பதுமே. இந்த நிலையில் அவர் தனது தலைமுறைக் கவிஞர்களான யேசுராசா, சேரன், ஜெயபாலன், புஷ்பராஜன் போன்றோரையும் மிஞ்சியே நிற்கிறார் என்றே சொல்லவேண்டும். இதனால்தான் இவர் கவிதைகள் சிலவற்றில் தனக்கு முற்பட்ட கவிஞர்களின் பாதிப்பு நிகழ்ந்தபோதும் தன் தனித்தன்மையை இழக்காது நிற்கிறார். உதாரணமாக நீலாவணனின் கவிதை ஒன்றின் உவமைப் படிமத்தை (பரிதிக் குஞ்சு) இவரது 'தியானம்' கவிதையில் காணலாம். இவரது 'சுழலின் மையம் தேடி...', 'நிலவுக்கெழுதல்' போன்றவற்றில் மு.பொ.வின் 'பிரபஞ்சக் கும்மி', 'பிறையொருகாலம் முழுநிலவாகும்' போன்ற கவிதைகளின் அருட்டலைக் காணலாம். ஆயினும் இவரது படைப்புகள் தமக்கே உரிய தனித்துவத்தோடு நிமிர்கின்றனவென்றால் அதற்குரிய காரணம் இவரது வெளிப்பாட்டு முறையும், அதற்குரிய சொற்தேர்வுமே.

இவரது சாதனை தளங்களில் உடைவு நிகழாமல் சொற்களில் திரிபு ஏறாமல் அந்தந்தத் தளங்களில் ஆத்மார்த்தத்தைக் கறந்தெடுத்தது என்றால், தளங்களில் உடைவு நிகழ்த்தியும் சொற்களில் திரிபு விழுத்தியும் நிகழும் புதுத்தள இலக்கிய உருவங்களும் அதன் ஆத்மார்த்தமும் இதில் இல்லாது போனது, ஒரு குறையே எனலாம். மு.த.வின் ஆளுமையில் பயின்ற இவரின் இவ்வாக்கங்கள், ஏற்கெனவே இசைவுற்றிருந்த புதுக்கவிதைப் பரப்பின் அகலத்தையும் ஆழத்தையும் விரிக்கின்ற அதே நேரத்தில், புதுத்தள ஊடறுப்புகளைக் காட்டவில்லைத்தான். என்றாலும் இவரது 'ஸ்தல புராணம்' சிருஷ்டி அந்தத் திசையின் சமிக்ஞைகளை விழுத்துவதாகவே நிற்கிறது. சாதி அமைப்புக் கெதிராகப் போராடிய மு.த.வோடு தோளோடு தோள்போட்டு நின்று அவரோடு அடிபட்டுச் சிறைக்குச் சென்ற இவரின் அப் போராட்டத்தின் அனுபவ வடிப்பாக நிற்கும் இந்தப் படைப்பு, கூத்து நாடகம் கவிதை போன்ற பல்வகை உருவாக்கத்தின் கலப்பாக நிற்பது இங்கு குறிப்பிடத்தக்கது.


– *மு.பொ.*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## ஈழத்துக் கவிஞர் அறிமுகம்



### புது யுகச் சங்கொலி.

ஊதடா சங்கு!
ஊதடா சங்கு!

கலைஞான யுகமின்று விடிகின்ற காலம்
கலிஎன்பான் அரசாட்சி மடிகின்ற காலம்
கலிசெய்த பேதங்கள் கலிசெய்த பாவம்
இனியில்லை எமக் கென்று ஊதடா சங்கு

ஊதடா சங்கு
ஊதடா சங்கு

எழுத்தோடு நடைமுறை வேறு வேறாக
தொழுகையும் வாழ்க்கையும் வேறு வேறாக
நடிக்கிறார் அவர்போடும் வேஷங்களெல்லாம்
பொடிப் பொடியாகுதென் றூதடா சங்கு

ஊதடா சங்கு
ஊதடா சங்கு

வேதங்களைக் கூட சாட்சிக் கிழுத்து
சாதி இனமத பேதம் விளைக்கும்
சண்டாளரைத் தா்மம் சும்மா விடாதெனச்
சத்தியமுச்செடுத் தூதடா சங்கு

ஊதடா சங்கு
ஊதடா சங்கு

தா்ம அதா்மப் போர் வந்து மூள்கையில்
தா்மமே வெல்லும் எனப்பறை சாற்றியே
வலம்புரி தூக்கினான் குருஷேத்திரத்திலே
வந்தனன் மீண்டு மென் றூதடா சங்கு
வந்ததே புதுயுகம் ஊதடா சங்கு.

ஊதடா சங்கு!
ஊதடா சங்கு!

### வெறுங் காற்றில் கலந்திடுமோ....

முன்பு தமிழ்நாட்டில் ஒரு கீழ் வெண்மணி
இன்று பீகாரில் இன்னொன்று.

சாதி வெறிக்கேது திக்கு?
தெற்கிலே பற்றியது
வடக்கிலும் தீ நாக்குவளைத்தது.

பீகாரின் ஒரு கிராமத்தில்
சாதி வெறியா் எளியவா்களுக்கு
எரி கொள்ளிகளால் பதில் சொல்லியுள்ளாா்.

கோயிலில் தீவட்டி ஏந்திய கைகள்
தாழ்த்தப் பட்டவரின் குளிடிசைகள் கொளுத்த
தீவட்டியோடு ஊா்வலம் போயின.

கொள்ளிவாய்ப் பேய்கள் சுற்றிவர
குழுமி நின்று உமிழ்ந்த தீ
பற்றிப் பிடிக்க குடிசைகளுள் துயின்ற
பதினான்கு உயிா் வெண் மணிகள்-
பிஞ்சுப் பாலகா், நேற்றுத் தான்
மஞ்சம் நுகா்ந்த மணமக்கள், முதியவா்-
பச்சை உடம்போடு பஸ்மீகரமாயின.

ஹரிஜனங்களை அவிா்ப் பொருளாக்கி
சாதி வெறியா் வேள்விகள் செய்ய
சந்நிதானங்கள், கோயில்கள், பீடங்கள்
குத்துக் கல்லாய் குந்தியிருந்து
ஸ்லோகம் சொரிந்தன.

ஆட்சி பீடங்களில் மாறி மாறி ஆள்வோா்
அமா்ந்தனா் போயினா்
'கீழ் வெண்மணிகள்' போயாவிட்டன?
சாதிவெறியரின் ஏவலால்
மன்னுயிா் தின்ற தீயே நீயும்
விண்ணெழுந்து வெறுமனே போகுதியோ?

தீயே!
ஆதிவேடன் பண்டொருநாள்
கல்லோடு கல்லுரசக் கனன்றதீயே,
உன்னை இங்கழைக்கிறோம்
மீள்க

ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக
சாதி வெறியை ஊதிவளா்த்த
தீயவா் கையில் நி சேறக

அக்கினியே! இடம்மாறு
அஞ்சி ஒடுங்கி அடங்கி வாழும் இந்த
ஏழை எளியவா்களிடம் வந்து குடியேறு
அவா்கள் கண்களில் ஜுவாலி
நெஞ்சங்களில் ஞான நெருப்பாய் எரி
சொற்களில் சுடு சரமாகு
செயல்களில் அலைக் கனல்பெருக்கு
மெய்ந் நெருப்பாக மேதினி எங்கும் திரிக

ஆதிஜோதியே! அனற் கொழுந்தே!
நின்னை வேண்டினோம்
இந்த எளியவா் வாழ்வு வெளிச்சமுறும்
பொருட்டாக.
தீயே உன்னை அழைத்தனம்
தீயவரைச் சென்றுதீண்டுதற்காக.

சாதி இன, மத நிற வெறி
எந்தெந்த மூலை முடக்கிலே காணினும்
அவற்றை
நீக்கமற எரித்து நீறாக்கும் பொருட்டாக.

### விடுதலைப் பொழுது

எழுந்திரு பிள்ளாய்
இது விடுதலைப் பொழுது
இருளில் துயில் கலைகிறது
நீயோ
இழுத்துப் போா்த்தபடி
இன்னமும் உறங்குதியோ?
எழுந்திரு

இதோ
விடியலில் கீழ் வானும்
ஒளிமுடி தரிக்கும் உன்ன[illegible]
உனக்குத் தரிசனமாகவில்லை

குருகினங்களின்
உதயத்து இசை
உனக்குத் தேனிப்பதில்லை

மெல்லிதழ் மலா்த்தி வரும் தென்றல்
உன்
மேனி வருடச் சிலிா்ப்பதில்லை

சீ! நீ என்ன மனிதன்
இன்னந் துயில் புணா்வாய்

புலா் பொழுதை ஸ்பரிசிக்காத
நின் புலன்கள் பழுதடைய
இனியும், காலம் கடத்தாதே
புலன்கள் நறையுண்ணும்
பொழுதை மழிக்காதே.

ஒளியேந்த விரியும் விழிகொள்
விடியலின் குரலுக்குச் செவிகொடு
நெஞ்சப்புலம் நெகிழ்ந்து அங்கு
புலரவிடு காலைப் பொழுதை

எழுந்திரு

சோம்பலை உதறிச்
சுருட்டிய பாயொடு தூரவீசு

வைகறை நீராடு
பொய்கறை இருள் கழுவிப்
புலரும் பொழுதை வரவேற்று
மனதில் ஒரு கும்பம் வை
நினைவுகளை ஒருங்குவி
திகழ் ஒளியைத் தியானி

அதோ
உன் வீட்டு வாசற்படியில்
ஒளிக்குழந்தை
தொற்றித் தவழ்கிறது
ஒற்றிக் கொள் கண்களில்

கதவிடுக்கின் ஊடாக
உட் செல்லத் துடிக்கிறது
திறந்து விடு கதவை முற்றாய்
உனதகம் ஒளி பெறட்டும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## மாதொருபாகன்

வானம் ஒரு பொழுதில் வெறித்தும் மறுபொழுதில் இருள்சூழ்ந்தும் ஒரு நிலையின்றித் தவிக்கிறது. குளிர்காலம் இதோ வருகிறேனென எச்சரிக்கிறது. அதே வாகன நெரிசலும் புகையுமாய் லண்டனின் பொழுதுகள் நீள்கின்றன. மனிதர்கள், குறிப்பாகத் தமிழர்கள், வேலை கிடைக்கவில்லையென்று அங்கலாய்க்கின்றனர். ஆனாலும் வேலையொன்று தேடி, வந்த கடனையும் அடைத்து, தம்பியையும் கூப்பிட்டு, வீடும் காரொண்டும் வாங்கவேண்டுமென்ற கனவை அவர்கள் துரத்துகின்றனர். கனவு அவர்களைத் துரத்துகிறது. அலை முழங்கும் கடல்சூழ்ந்த தாயகத்திலிருந்து செய்திகள் மோசமானதாயும் மிக மோசமானதாயும் வந்தபடிதானிருக்கின்றன.

வேலை முடிந்து வந்து, ஈஸிச்சேரும் இல்லாததால் சோபா செற்றியில் கால்நீட்டிப் படுத்திருந்த மாதொருபாகனாரின் மகோன்னத மூளை மேற்குறித்த விடயங்களுடன் அல்லாடுகின்றது. சகதர்மிணி சறோஜினி தேவியோ இன்னமும் வீடு திரும்பவில்லை. இப்ப அவவுக்கு 'ஹொலிடே'. வேலைக்காலமெண்டால் 'ரில்' அடித்து நொந்த பொன் விரல்களால் ஒரு தேத்தண்ணியாவது கிடைத்திருக்கும். அந்தச் சுகமே தனி. மா.பாகனாரொன்றும் தேத்தண்ணியும் போடத்தெரியாத தேவாங்கோ அன்றி, அடுக்களைக்குள் நுழையாத ஆண்சிங்கமோ அல்ல. ஆனாலும், அந்தச் சுகமே தனி.

மாதொருபாகனாரின் சிந்தனை சகதர்மிணி போன இடமீது திரும்புகின்றது. காதலால் அல்ல; கடும் சினத்தால். பெண்டாட்டியார் போன இடம் ஒரு சாமத்தியச் சடங்கு. 'பூப்புனித நீராட்டு விழா' என்று ஊரிலை 'காட்' அடித்துப் பந்தல் போட்டு சப்பறம் சோடனைகளோடை கொண்டாடப்படுகிற விடயம். இப்ப லண்டனுக்கும் வந்திட்டுது. சென்ற இடமெல்லாம் சீட்டுக்கட்டிச் சிறக்கும் தமிழர்களுக்கு பணச்சடங்கை விட்டுத்தள்ள எப்படி மனங்கேக்கும். எல்லாவற்றையும் விடப் பெரிய கவலை பந்தல் போட இடவசதி இல்லையென்பதே. இடவசதி வாய்ச்சாலும் இந்த 'வெதரோட' பெரிய கரைச்சல்.

இவ்விடயத்தில் விழாவின் கதாநாயகியின் உணர்வுகளைப்பற்றி யாருக்காவது அக்கறையுள்ளதா என்பதே மாதொருபாகனின் கேள்வி. இந்த நாட்டில் தனிமனிதர்கள் தம் உணர்வுகளுக்கு மற்றவர்களிடம் எதிர்பார்க்கும் மரியாதையை இங்கு வாழுகின்ற எந்தச் சிறுபெண்ணும் எதிர்பார்ப்பாள். குடும்பத்தைவிட, பள்ளியிலும் தன் வயதொத்த ஆங்கில, பிற இனப் பிள்ளைகளோடும் பழக நேர்கையில், தனது உடலிலும் உள்ளத்திலும் ஏற்பட்டுள்ள மாற்றங்களை, பவித்திரமான உணர்வுகளை என் எமது பெற்றோர்கள் ஊர் முழுவதும் பறையடிக்கிறார்கள் என்ற கேள்வி அப் பிஞ்சு நெஞ்சங்களில் எழுவது யாருக்கும் நல்லதல்ல.

இப்படியெல்லாம் மாதொருபாகனார் மனதை அலைக்கழிய விட்டாலும் போகிற போக்கில எங்கடை ஆட்கள் லண்டனில வேள்வியொண்டும் நடத்தாமல் விடமாட்டினம் என்றும் யோசித்தார். கவுணாவத்தை சின்னண்ணை தலைக்கிடாயை அனுப்பிவைக்க 'எயர் லங்கா'வுக்கு 'அப்பிளிக்கேசன்' ஏற்கனவே போட்டுவிட்டதாகவும் கேள்வி.

'எங்கடை சனம் காணாததைக் கண்டால் நாறியே தீருவினம்' எண்டதும் சமீபகால மா.பா.வின் பொன்மொழிகளிலொன்று. எங்கடை சனம் இந்த ரெலிபோனோடை சாவதைக் கண்டே மா.பா. மேற்கண்டவாறு முடிவெடுத்தார். கொழும்பிலை உறவுகள் லொட்ஜிலை வந்து நிற்க, இவை இஞ்சையிருந்து 'கோல்' எடுத்து ஊர்க்கதை பேசியும், ஏஜென்சிக் காரனோடை நாலு நியாயத்தைப் பிளந்தும் அப்பிடியும் இப்பிடியுமாய் 'கோலா'லை அழிஞ்சவை கோடானுகோடி. உசாரான தமிழ் மறவர்கள், பழுதான ரெலிபோன் 'பூத்' எங்கே, ஓசிக் 'கோல்' எங்கே எனத் திக்கெட்டும் திரிந்து 'கோலெ'டுத்து மகிழ்ந்தனர். இப்ப நடமாடும் தொலைபேசி வந்துவிட்டது. நாளுக்கு இவ்வளவென்று 'ரேட்' பேசிக்கொண்டு வந்து நடக்குது. கொடுப்பவர்கள் வாழ்க!

இப்பவந்த அகதிகளை ஏளனமாய் நோக்கவல்ல முன்வந்து குடியேறிவிட்ட மூத்தகுடி அணங்கொன்றும் பழுதான ரெலிபோன் பூத் தூரமென்பதால் கட்டுச் சோறு கட்டிப்போய் கதைத்துவிட்டு வந்ததனைச் சிலரறிவர். இப்போதோ நடமாடும் கள்ள ரெலிபோன் கிடைத்து விட்டால் நெருக்கமானவரை வீட்டுக்கழைத்து விருந்தோடு.... தமிழரின் காவியச் சிறப்பு வாய்ந்த விருந்தோம்பல் பண்புக்கு இன்றும் இலக்கணமாய் இன்னும் நமக்குள் எத்தனையோ பேர். அவர்களும் வாழ்க!



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இதெல்லாம் ஒரு மட்டு. மாதொருபாகனே தன் தலையில் போட்டுக் கொள்ளும் விதத்தில் இன்னொரு கள்ள ரெலிபோன் காவியமும் உண்டு. ஒருநாள் இலண்டனில் தமிழர்வாழும் பிரபல இடமொன்றில் மா.பா.வும் அவர்தம் நண்பரும் நடைபோட்டுக் கொண்டிருக்கையில் அவர்களை ஒரு வீரத்தமிழன் நெருங்கினார். "அண்ணை அந்தப் பத்துப் பவுணுக்கு ரெலிபோன் கதைக்கிற வீடு எவ்விடத்திலையெண்டு கொஞ்சம் சொல்லமுடியுமே?" என்றார். மா.பா.வுக்கோ அவர்தம் நண்பருக்கோ அது தெரிந்திருக்க நியாயமில்லை. "குறை நினையாதையுங்கோ நீங்களும் அங்கையிருந்துதான் வாறீங்களெண்டு நினைச்சுத்தான் கேட்டனான். அந்த வீடாய்த்தான் இருக்கவேண்டும்" என்றபடி அன்பர் மெல்ல நழுவினார். அவ்ர் சுட்டிக்காட்டிய வீட்டு வாசலில் இளைஞரொருவர் "சென்றிப் பார்வை" பார்த்துக் கொண்டிருந்தார். இவ்வகைக் களவுகள் கொஞ்சம் திட்டமிடும் கிரிமினல் பேர்வழிகளினால் செய்யப் படுபவை. நீண்டகால அடிப்படையில் வீட்டை வாடகைக்கு எடுத்து, ரெலிபோன் இல்லையென்றால் பூட்டிக் காசுசேரக் கம்பிநீட்டும் இவ்வகைக் கனவான்களில் சிலர் இப்போது கம்பி எண்ணுவதாகவும் கேள்வி.

இவ்வகைப்பட்ட வீரபுருஷர்களின் சிறிதும் 'தன்நலமற்ற' சேவை எமது சமூகத்திற்கு எவ்வளவுதூரம் களங்கத்தையும் பாதிப்பையும் ஏற்படுத்துமென்பதை எண்ணிப்பார்ப்பவரெவரும் இவ்வகைக் காரியங்களுக்கு உதவவோ உடன்படவோ மாட்டார்களென்பது நிச்சயம். ஆனால் இவ்வகைத் தொழில்கள் தழைக்கவே செய்கின்றன.

* * *

இன்னொரு விசயம். மாதொருபாகனார் இடையிடையே லண்டனிலுள்ள 'அரட்டை மடமொன்றிற்கும் விஜயம் செய்வதுண்டு. அங்கே பல்வகைப் பண்புகளும் தகுதிகளும் கொண்ட விவாத வல்லுனர்கள் அடிக்கடி வந்து சிறப்பிப்பார்கள். வெய்யில் அடித்துக்கொண்டிருந்த ஒரு நாள் மாலை எட்டுமணிக்கு குறிப்பிட்ட ஒருவரின் கார் அவ்விடம் வந்து நின்றதுமே எல்லோரும் 'அலேட்'. வெளவால் ஒன்று இன்னார் வருகிறார் பராக் பராக் என்றபடி செட்டையடித்த சத்தம் மட்டுமே கேட்டது. மற்றப்படி நிசப்தம். அட்டகாசமாக அண்ணன் உள்ளே நுழைந்தார். ஜயவேவா...!

"என்ன இடதுகள் எல்லாம் ஒன்றாகக்கூடி 'நம்மாள்' கவிண்டிடுவார் என்று கனவு காணுறியளே. He came from the bottom level of people. எங்கடை அன்புத் தலைவர் பிரேமதாஸ. ஒருத்தராலையும் வாற பத்து வருஷத்திற்கு அவரை ஒண்டுஞ் செய்யேல்லாது. இந்த வருஷம் முடியுறதுக்கிடையில் தமிழர் பிரச்சனையைத் தீர்த்து வைப்பார். பிரபாகரனை நீங்கள் ரண்டு மாதத்திலை கொழும்பிலை சந்திக்கலாம்" என்றெல்லாம் வசன மழை பொழிந்தார்.

அவரால் 'இடது' என்று அன்புடன் அடையாளங் காணப்பட்டவர் அப்பீலொன்று கேட்டார்: "ஒரு முறையான எலெக்ஷன் நாளைக்கு நடந்தாலும் உங்கடையாள் அவ்வளவுதான்!"

"என்னகாணும் முறையான எலக்ஷன்? போன எலக்ஷனிலை உங்கடை பீட்டர் கெனமன் வோட்டுப் போடப் போனவர். என்ன நடந்தது? அவற்றை வோட்டையே நாங்கள் அவருக்கு முதல் போட்டுட்டம். சில 'பலட் பொக்ஸு'க்குள்ளை ஒவ்வொண்டாய் கிழிச்சு யார் போடுறதெண்டிட்டு அப்படியே முழுப் புத்தகமாகப் போட்டனாங்கள். ஏதோ பாவமெண்டிட்டு உங்களுக்கும் கொஞ்ச வோட்டை நாங்கள் போட்டதாலைதான் உங்கடை கட்சியள் இப்பவும் இருக்குது." இது போன்ற அறப்போராட்ட வரலாறுகளுடன் அவரது கதாகாலட்சேபம் நீண்டது.

கைகளை நீட்டி, மடக்கித், தாவிப் பின்னர் குதித்து அவர் தொடர்ந்தார். "அன்னையர் முன்னணியாம் அன்னையர் முன்னணி. நாட்டிலை தொடங்கினா மிரட்டுவம். இங்கை தொடங்கினாக் குழப்புவம்."

அக்கம் பக்கம் விசாரித்ததில் பிழைப்புவாத அரசியலையே வாழ்வாகக் கொண்டு திரியும் இந்தத் 'தமிழ்' மகன் அண்மையில் கொழும்பு சென்று இலங்கையின் 'மக்களால் தெரிவு செய்யப்பட்ட', மாட்சிமை தங்கிய, அதியுத்தம ஜனாதிபதியைக் கண்டு திரும்பினாராம். அதனால்தான் இந்தக் குதிப்போ என்னவோ.

"எமது நாட்டுப் பாராளுமன்ற அரசியலில் அராஜகமும், காடைத்தனமும் அவ்வளவாக இல்லைப் பாருங்கோ!" என்று தங்களது பாராளுமன்ற அரசியலுக்குப் பள்ளுப்பாடித் திரியும் பண்டிதர்களையும் மேற்குறித்த தமிழ் மகனையும் ஒரு அறைக்குள் வைத்துப் பூட்டிவிட்டால் என்ன நடக்குமென்று மாதொருபாகனார் கற்பனை பண்ணிப் பார்த்ததனால், இரண்டொரு நாளாகப் புன்னகை பூத்தபடி அலைகின்றார்.

மாதொருபாகன் மாதொருபாகன் மாதொருபாகன் மாதொருபாகன் மாதொருபாக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

in memory of
A PRECIOUS FATHER
and
AN OUTSTANDING SURVEYOR AND HUMANIST

# N. DEVA RAJAN Esq. FSI



*One night a man had a dream. He dreamed he was walking along the beach with the Lord. Across the sky flashed scenes from his life. For each scene, he noticed two sets of footprints in the sand. One belongs to him, and the other to the Lord.*

*When the last scene of his life flashed before him, he looked back at the footprints in the sand. He noticed that many times along the path of his life there was only one set of footprints. He also noticed that it happened at the very lowest and saddest times in his life.*

*This really bothered him and he questioned the Lord about it. "Lord you said that once I decided to follow you, you'd walk with me all the way. But I have noticed that during the most troublesome times in my life, there is only one set of footprints. I don't understand why when I needed you most you would leave me."*

*The Lord replied, "My son, My precious child, I love you and would never leave you. During your times of trial and suffering, when you see only one set of foot-prints, it was then that I carried you."*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்